[illegible]

[illegible] 12 [illegible]

14 May 1929


JL

802211, N15AB

N27.12.9.

187979








Vol. 12. பொருளடக்கம். No. 10.


1. கடவுள் வணக்கம் (பக்கம்) 433
2. எதிர்கொண்டு இடர்செய்வோர் 435
3. 13-வது ஆண்டு அறிவிப்பு ... 439
4. தாதாபாய் நௌரோஜி ... 441
5. பாமரர்களின் பரிதாபநிலை ... 443
6. காங்கிரஸ் தொண்டு ... ... 444
7. ஆரிய சித்தாந்தம் ... 447
8. சைவசித்தாந்தப்பகுதி ... 451
9. ஸ்ரீ ஆண்டாள் ... 453
10. வேதாந்த சாரசங்கிரக வசனம் 455
11. மாணவர்பகுதி ... 459
12. மாதரும் குடும்பமும் ... 463
13. அறநெறிப்பகுதி-விவசாயம் 465-466
14. கைத்தொழிற்பகுதி ... 468
15. வைத்தியப்பகுதி ... 470
16. அறிஞரின் அமுதமொழிகள் 472
17. பிரபவ௵ பலன் ... 473
18. பிரபஞ்ச அனுபவம்-நாவல் 474-475
19. விநோதம்-வர்த்தமானம் 478-479
20. பஞ்சாங்கம் ... 480




# "ஆனந்தபோதினி

## சந்தா விபரம்.

| | | ரூ. அ. ப. |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, பர்மா, ஸிலோன் ... ... | 1—0—0 |
| | பினங், ஸிங்கபூர், தென் ஆப்ரிகா, பசரா, மெசபோடோமியா முதலிய வெளி நாடுகளுக்கு | 1—4—0 |
| நடந்துகொண் டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை விலை | | 0—2—0 |
| சென்ற வருடங்களுடைய தனிச் சஞ்சிகை விலை | | 0—3—0 |

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

(1) சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் பூரணமாய்ப் பெயரை எழுதி யனுப்பவேண்டும்.

(2) சந்தா தொகையை முன்னுடி செலுத்தியாவது அல்லது வி. பி. யில பணம் கட்டியாவது பெற்றுக்கொள்ளவேண்டும். எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆடிமாத முதல்தான் கணக்கு வைக்கப்பட்டு ஆடிமாத சஞ்சிகை முதல், சேர்த்தனுப்பப்படும்.

(3) சஞ்சிகை வி. பி. யில் வரவழைப்போர் ரிஜிஸ்டர் சார்ஜ் 2-அணு வோடு (18-4-1921 முதல் மணியார்டர் கமிஷன் 10-ரூபா வரையில 2-அணு வாகையால்) வி. பி. கமிஷன் 2-அணு வி. பி.க்கு தபால் சார்ஜ் 0-0-6. ஆக 0-4-6 அதாவது 5-அணு சேர்த்து ரூபா 1-5-0 கட்டி வி. பி. யைப் பெறவேண்டும். மணியார்டர் அனுப்பினுல் 1-2-0 மட்டுமே யாகும். ஆதலால் முன்னுடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம். இதைக் கவனிக்கவும்.

(4) யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் அம்மாதம் 15-ம் தேதிவரையில் பார்த்து அதற்குமேல் அதே தமிழ்மாத முடிவிற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும். பிறகு தெரிவிப்போர் கிரைய மனுப்பிப் பெறவேண்டும்.

(5) இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புது விலாசத்திற்கு வந்து சேரும்வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை யறிவிக்கவேண்டும். இன்றேல் அடுத்த சஞ்சிகை பெரும்பாலும் பழைய விலாசத்திற்கே போய்விடும். அதற்கு நாம் பொறுப்பாளியல்ல.

(6) சந்தா நம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப் படமாட்டா. அத்தகைய கடிதங்களால் நேரிடும் தவறுதல்களுக்கு நாம் பொறுப்பாளி யல்ல. பதிலை விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபாற் பில்லையாவது அனுப்பினுலன்றி விடை யளிக்கப்பட மாட்டாது.

(7) வியாசங்களை எழுதுவோர் சுத்தமாக இலக்கணப் பிழையின்றி தங்கள் உண்மைப் பெயருடன், மததூஷணை, பிறர் தூஷணை, துரைத்தன விரோதம் முதலியவையின்றியும், பொது ஜனங்கள் விரும்பக்கூடியனவாகவும் எழுதவேண்டும். வியாசங்களைத் திருத்தவும், அவற்றிலுள்ள சில விஷயங்களைக் குறைக்கவும், கூட்டவும், அவற்றைப் பிரசுரிக்காமல் நிறுத்தவும் நமக்கு பாத்தியமுண்டு. எவ்வித காரணத்தைக்கொண்டும் வியாசங்கள் திருப்பியனுப்பப்படமாட்டா. வியாசக்காரர் அபிப்பிராயங்கட்கு நாம் பொறுப்பாளியாகோம்.

| | | | |
|---|---|---|---|
| Life Subscription ஜீவிய சந்தா | இந்தியா, பர்மா, சிலோன் | ரூபா | 15—0—0 |
| | அன்னிய நாடுகளுக்கு | ,, | 20—0—0 |

நா. முனிசாமி முதலியார், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6 வெங்கடேச [illegible] தெரு, [illegible] G. 187, ம[illegible]

10/1-28 157

ஸ்ரீராமஜெயம்.

# "தத்வசங்க்ரஹ ராமாயணம்"

## இரண்டாம் பதிப்பு.

இது ஸமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட அருமையான நூல். இதனை ஒருமுறை படிப்பவர்கள் இம்மை மறுமை யென்னும் இருவகை வாழ்விற்குரிய சாதனங்களை யுணர்ந்து மக்களாய்ப் பிறந்த தாம் அனுஷ்டிக்க வேண்டிய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு பகவானுடைய திருவருட்குரியவராக விளங்குவர் என்பதில் ஐயமில்லை. இந்த கிரந்தம் துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலன நிமித்தம் உலகத்தில் ஸத்யவந்தனுக விளங்கிய தசரத புத்திரனு ஸ்ரீராமனுக அவதரித்த ஜகத்பிரபுவின் குணாதிசயங்களைப் பற்றிப் பேசுவது.



ஸ்ரீராமாவதாரத்தின் உண்மை இதனை படிப்பவர்க்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். இதனைப் படித்தால் அநேக ஞான நூல்களைப் படித்த பயனை ஒருங்கே யடைதல் கூடும். ஸ்ரீராம பூஜா விதிகளும் அர்ச்சனைகளும் இதன்கண் விவரிக்கப்பட்டுள்ளன. இதுவரையில்வெளியான ராமாயணங்களை விட மும்மடங்கு மேலான தத்வ உபதேசங்கள் இதன் கண் [illegible]ம். உபந்யாசகர்களுக்கு வேண்டிய [illegible]ங்கள் [illegible] காண [illegible]ராம சரிதை [illegible] வாசிப்பதே இக பர நன்மை யளிக்கு மென்பர் பெரியோர். இதில் எண்ணிறந்த மிக்க அருமையான விஷயங்கள் அடங்கி யிருக்கின்றன. புஸ்தகம் சுமார் 520 பக்கங்கள் கொண்டது. இங்கிலீஷ் கிலேஸ்காகிதத்தில் டபுள்க்ரௌன் 8 பக்க அளவில் அச்சிடப்பட்டு முழு காலிகோ பைண்டு செய்யப்பட்டது.

இதன் விலை ரூபா 4.

ஆனந்தபோதினீச் சந்தாதாரர்களுக்கு 1928ஸு பிப்ரவரிமீ கடைசி வரையில் விலை ரூபா 3.

## விஷய ஸூசிகை

இதில் அடங்கியுள்ள விஷயங்களில் முக்கியமானவை.

### பாலகாண்டம்.

ஸர்க்கம் விஷயம்

1. தெய்வ வணக்கம், நூலின் பயன், நூலின் பெருமை, நூலிற் கூறப்படும் விஷயம், படன ச்ரவண பலன், முனிவர்களின் சமாகமம், ஸாதுக்களின் மகி[illegible]க்களின் சேர்க்கையாலு[illegible]ஙமை.
2. நைமி[illegible] புராணிக[illegible]கி "சில நூல[illegible]ங்களில் விஷ்ணுவே ஸ்ரீராம[illegible]வதரித்ததாகவும், ப்ர

ஸர்க்கம் விஷயம்

ஹ்மாவே ஸ்ரீராமனுக அவதரித்ததாகவும், சிவனே ஸ்ரீராமனுக அவதரித்தாரென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. இவற்றில் ஸ்ரீமத் வால்மீகிராமாயணம், பாலகாண்டத்தில் தேவர்கள் நாராயணனைப் பிரார்த்திக்கு மிடத்திலும் அயோத்யா காண்டத்திலும், யுத்தகாண்டம் உத்தர காண்டங்களிலும் நாராயணனே ஸ்ரீராமனுக அவதரித்ததாகக் கூறப்பட்டிருக்கின்றன.

26 JAN 192[illegible] 182479

ஸர்க்கம் விஷயம்

அவ்வாறே பத்மபுராணம், ஸ்ரீபாகவதம், கூர்மபுராணம், விஷ்ணுபுராணம், தர்மகண்டம், அகஸ்திய ஸம்ஹிதை, உமா ஸம்ஹிதை ஹிரண்யகர்ப்ப ஸம்ஹிதை, ராமதாபிநீயுபநிஷத், பாரதம் இவைகளிலும் நாராயணனே ராமனென்று கூறப்பட்டிருக்கின்றன—" இதனுண்மை யென்ன என்று கேட்பது.

3. உத்தர தர்மகண்டம், சேஷதர்மம், இவற்றில் சில இடங்களில் ஸ்ரீ சிவனே ஸ்ரீராமனாக அவதரித்ததாகவும் ஸ்ரீமத் ராமாயணம் பாலகாண்டம், புத்திரகாமேஷ்டி யாககட்டம், ஸங்க்ஷேப ராமாயணம், ப்ரஹ்மாண்ட புராணம், ப்ரஹ்மபுராணம் இவற்றில் ப்ரஹ்மாவே ஸ்ரீராமனாக அவதரித்ததாகவும் நிர்வாணகண்டம், ஸ்ரீமத்ராமாயணம், (ப்ரம்ஹா ஸ்ரீராமனை ஸ்தோத்ரம் செய்யுமிடம்) விஷ்ணுயாமளம், ஸ்காந்த புராணம், பத்மபுராணம் ப்ரஹ்மாண்ட புராணம் இவற்றில் த்ரிமூர்த்தி அதீதனாகிய பரப்ரஹ்மமே ஸ்ரீராமனாக அவதரித்ததாகவும், கூறப்பட் டிருக்கின்றன. இப்படிப் பலவாறு ஸ்ரீராமகதை வர்ணிக்கப்பட் டிருக்கின்றபடியால், இதனுண்மையைச் சங்கிரஹித்துக் கூறவேண்டுமென வினவுவது.

4. சூதபுராணிகர் செய்த ராமஸ்தோத்ரம்.

5. ஸ்ரீமந்நாராயண இரகஸ்யார்த்தம். காயத்ரி மஹா மந்திரத்தின் அக்ஷரங்கள், ஸ்ரீமத் ராமாயணத்திலிருக்குமிடங்களை விவரித்தல்.

6. சிவஸபாவர்ணனம், பார்வதி தேவியாரின் வினா.

7. ஸ்ரீராம பரதத்வ நிரூபணம்.

8. பார்வதி தேவியாரின் வினா, ராமநாம மஹிமை, ராமத்யானம்.

9. ஸ்ரீராமன் மூர்த்தித்ரயாதீதன் ராமத்யானத்தின் மஹிமை.

10. ஜயவிஜயர்களுக்கு ஸநகாதி யோகியர் கொடுத்த சாபம், ஸ்ரீமந் நாராயணன் அவர்களுக்களித்த [illegible] ப்ரதானம்.

11. ராவணன், கும்பகர்ண[illegible] சூர்ப்பநகை முதலியவர்களின் உற்பத்தி.

12. தேவர்கள் மஹாவிஷ்ணுவை ஸ்துதிப்பதும், மஹாவிஷ்ணு ப்ரஸந்நமாவதும், தேவர்கள் அவரிடம் ராக்ஷஸர்களால் தமக்கேற்படும் தொந்தரையைக் கூறுவதும், மஹாவிஷ்ணு ஸ்ரீராமனாக அவதரித்து அரக்கர்களை வதஞ் செய்கின்றேனென்று அவர்களுக்கு வரமளிப்பதும்.

13. மநுசெய்த தவம், விஷ்ணு அவருக்கநுக்ரஹித்தல், தசரதர் புத்திரகாமேஷ்டி யாகம் செய்தல்.

14. ராமலக்ஷ்மண பரத சத்ருக்நர்களின் உற்பத்தி.

15. ஸ்ரீராமநவமியின் ப்ரபாவம்.

16. ஸ்ரீராம பாலலீலை, விச்வாமித்ரர் தமது யாகரக்ஷணைக்காக ஸ்ரீராமனை யழைக்க வருதல்.

17. வஸிஷ்டர் திருவாய் மலர்ந்தருளிய ஸ்ரீராமதத்வம்.

18. ஸ்ரீராமன் விஸ்வாமித்ரருக்கு மாணவனானதற்கும், அவர் அவனுக்கு ஆசிரியனானதற்கும் காரணம்—தாடகை ஸம்ஹாரம்.

19. ஸ்ரீராமன் விஸ்வாமித்ருடைய யாகசம்ரக்ஷணை செய்தல், ஸ்ரீராமனை முநிவர்கள் பூஜித்தல்—சகுண, நிர்குணபேத ஸ்ரீராம உபாஸனாக்ரமம்.

20. சாளக்ராம பூஜாவிதி, தீர்த்த ப்ரஸாத வைபவம், ஸ்ரீராம தீர்த்த ப்ரஸாதத்தினால் தாஸி லோலனாகிய பிராமணனொருவன் விஷ்ணுலோகமடைந்த சரித்ரம்.

21. துளஸியின் மஹிமை, துளஸிதளத்தினாற் செய்யப்படும் ஸ்ரீராம பூஜையின் வைபவம்.

22. ஸ்ரீராமமந்த்ர மஹாத்மியத்தை முநிவர்களுக்கு விஸ்வாமித்திரர் அகஸ்தியர் கூறியபடி விவரித்தல்.

23. [illegible] நியமம், ஆஸனம், பிரா[illegible] ஹாரம் த்யானம், [illegible] ம் அஷ்டா[illegible] யோகங்க[illegible] ப நிரூபணம்.

24. விஸ்வாமித்ர[illegible]



ஸர்க்கம் விஷயம்

மனர்களுடன் மிதிலைக்குப் புறப்பட்டுச் செல்லல், ஸுமதியைச் சந்தித்தல், ராமமந்த்ர மஹிமா வர்ணனம்.

25. அஹல்யை உற்பத்திசரிதம், இந்த்ரன் அஹல்யையிடம் பிரியம் கொள்ளல், கௌதம அஹல்யா விவாஹம், இந்த்ரனும், அஹல்யையும் சாபமடைந்த வரலாறு.

26. அஹல்யா சாபவிமோசனம். அவள் செய்த ஸ்தோத்ரம்.

27. கௌதமர் செய்த ராமஸ்தோத்ரம். அவருக்கு ராமன் செய்த தத்வோபதேசம்.

28. மிதிலாநகர ப்ரவேசம்—ஜனகர் ராமதத்வத்தை யறிந்துகொள்ளல்.

29. ஸீதையின் திருமணவைபவங்காண தேவர்கள் விஜயம் செய்தல், ஸ்ரீராம அபேத முரைத்தல்.

30. சிவ தநுர்ப்பங்கம்—தசரதன் வருகை.

31. ஸீதையின் விவாஹ வைபவம்.

32. ப்ரஹ்மா செய்த ஸ்ரீராம ஸ்தோத்ரம்—விவாஹ பல சுருதி—கன்னிகாதான பல வைபவம்.

33. ஸ்ரீராம பரசுராம ஸம்வாதம்—சிவவிஷ்ணு தனுசுகளின் தாரதம்மியம்.

34. ஸ்ரீராம விபூதிவிளக்கம்.

35. ஸ்ரீராமன் ஸீதா ஸமேதனாய் அயோத்தியை யடைதல்.

---

## அயோத்தியா காண்டம்.

1. யுவராஜ்ய பட்டாபிஷேக ஆலோசனை—ஸ்ரீராமகுணவர்ணனம்.

2. யுவராஜ்ய பட்டாபிஷேகத்திற்குத் திரவியங்கள் சேகரித்தல்—வஸிஷ்டர் வருகை, அவர் கூறும் ராமதத்வம்.

3. ஸ்ரீராம பட்டாபிஷேகத்தைத் தடுக்கத் தேவர்கள் ஆலோசித்தல்-தமமஸ்வரூபங் கூறல் — ஸோமுகாஸுர வதம்-ராவணன் பெருமை.

4. ஸ்ரீராமரிடம் ப்ரஹ்மாவின் ஆஜ்ஞையின்படி நாரதர் வருதல்-நாரதர் வர்ணிக்கும் ராமன் பெருமை.

5. நாரதர் செய்யும் நாமஸ்தோத்ரம்-ப்ரஹ்மாவின்விஞ்ஞாபனங்கூறல்

6. ஸ்ரீராம பட்டாபிஷேகத்திற்கு மந்தரை செய்த இடையூறு-கைகேயி தசரதனிடம் வரம் பெறல்.

7. ராமர் வனஞ்செல்வதாகப் பிரதிஞ்ஞை செய்தல்.

8. லக்ஷ்மணன் கோபித்தல்-ஸ்ரீராமன் லக்ஷ்மணனுக்குச் செய்த தத்வோபதேசம்-உலகினியல்பு-அவிவேகத்தின் காரியங் கூறல்-பொறுமையின் பெருமை - கர்மத்தினாலேயே எல்லாம் நடைபெறுகின்றன.

9. ராமன் செய்த ப்ரதிக்ஞை-கௌஸல்யை ராமனுக்குச் செய்த மங்கள வாழ்த்து - ஸீதா ராமர்களின் இனிய ஸம்பாஷணை.

10. வாமதே[illegible]றிய ஸ்ரீராம பரதத்வம்.

11. ஸ்ரீராம பக்திப்ரபாவம் - ராமன் வனஞ்செல்லப் புறப்படல்-எல்லோருங் கூடவர ராமன் அவர்களைத் திருப்பி யனுப்புதல்-கைகேயி மறுபடி ராமனை ராஜ்யத்தை யாளும்படி வேண்டல்-ராமன் அவளுக்குத் தத்துவ முரைத்தல்.

12. ஸுமந்த்ரனுக்கு ஸ்ரீராமன் வைராக்யம் உபதேசித்தல்-பக்திஸ்வரூபநிரூபணம்.

13. குகன் ராமரைச் சந்தித்தல்-அவன் செய்த ஸ்தோத்ரம்-ராமன் பரத்வாஜருடைய ஆச்ரமம் அடைதல்.

14. ஸுமந்த்ரன் அயோத்தியை யடைதல் தசரதனுடைய ப்ரலாபம்.

15. தசரதன் ஸ்வர்க்கமடைதல்-தசரதனுடைய பூர்வசரிதம்-பரதனுடைய வருகை-அவனுடைய சபதம்.

16. பரதன் ராமனைக் காணப் புறப்படல் - அவனுக்கு பரத்வாஜர் செய்த விருந்து-அவன் சித்ரகூடப் பர்வதத்தில் ஸ்ரீராமனுடைய ஆச்ரமத்தைக் காண்பது.

ஸர்க்கம் விஷயம் ஸர்க்கம் விஷயம்

வேததரன் என்னும் விப்ரனுடைய அற்புத சரிதம்.

16. பவரோக ரஸாயன ப்ரசாதம்-ஜீவன் முக்த லக்ஷணம்.

17. கலியின் ஸ்வரூபம்-கலியின் குற்றம்-கலியின் குணம்.

---

## யுத்த காண்டம்.

1. ஸுக்ரீவ ஸேனாஸந்நாஹம்—ராவணனுடைய மந்த்ராலோசனை.
2. விபீஷணன் ராவணனுக்கு நீதி யுரைத்தல்.
3. ராவணன் விபீஷணனை நிந்தித்தல்-விபீஷணன் ராமனிடம் வருதல்-அவன் ராமனைச் சரணமடைதல்.
4. ராமன் வானரர்களுடன் ஆலோசித்தல் - ஹநுமார் விபீஷனனுடைய தன்மை கூறல் விபீஷணனுக்கு ராமன் அபயமளித்தல்.
5. விபீஷணன் ராமனை ஸ்தோத்தரித்தல்.
6. கன்யாகுமரி ராமனை வரித்தல்-ராமன் அவளைத் திரும்பி வருகையில் பாணிக்ரஹணம் செய்துகொள்ளுகிறேனெனல்-ராமன் தர்ப்பையில் சயனித்தல்-சக்ரதீர்த்தத்தின் பெருமை.
7. ஸ்ரீராமன் ஸமுத்ர ராஜனைக் கோபித்தல்-அவன் ராமனைச் சரணமடைதல்-ஸ்ருஷ்டி ஸ்வரூபங்கூறல்.
8. ஸேது பந்தோபாயங் கூறல்.
9. ஸேதுபந்தம்.
10. ஸேது மகிமையை வர்ணித்தல்.
11. சுகஸாரணர்களை ஸேனா பலமறியும்படி ராவணன் அனுப்புதல்.
12. சுகசாரணர்கள் வானரஸைன்யங்களின் வன்மையை ராவணனிடம் கூறல்.
13. ஸுக்ரீவன் ராவணன் மகுடத்தை வீழ்த்தல்.
14. ராமன் லங்கையின் கோட்டை வாயிலில் தன்படைகளை அமர் புரியுமாறு அணிவகுத்து நிறுத்தல்.
15. அங்கதன் தூது செல்லல், அங்கத ராவண ஸம்வாதம்.
16. நாகாஸ்த்ர பந்தனம் – தூம்ராக்ஷன் முதலியவர்களின் வதம்.
17. ராவணன்செய்த முதல்யுத்தம்
18. கும்பகர்ண வதம்.
19. நாரதர் வரவு, திரிசிரன் முதலியோர் வதம்.
20. அதிகாயன் வதம்.
21. கும்ப நிகும்ப வதம்-இந்த்ரஜித்தன் யுத்தம்.
22. இந்த்ரஜித்தன் வதம்.
23. படைத்தலைவர்களின் வதம்.
24. ராவணன் எங்கும் ஸ்ரீராமனைக் காணல்.
25. ஸஞ்சீவி கொண்டுவருவதற்கு மாருதி ஏகுதல்-ஹநுமத் த்வாதச நாமஸ்தோத்ரம்.
26. காலநேமி வதம்.
27. ராவணன் பாதாளத்தில் ஹோமம் புரிதல்.
28. ராவணன் மந்தோதரிக்குத் தேறுதல் கூறல்.
29. ராம ராவண யுத்தம்.
30. ராவணன் வதம்.
31, 32, 33. ராமகீதை.
34. மாயா ஸீதையின் அக்நி ப்ரவேசம்-ப்ரஹ்மஸ்துதி.
35. தனுஷ்கோடியின் பெருமை.
36. ப்ருகு மஹரிஷி த்ரிமூர்த்திகளின் குணங்களைப் பரீக்ஷித்தல்.
37. ருத்ரன் ஸ்ரீராமனை நோக்கித் தவம்புரிதல் – ஸ்ரீராமன் அவருக்கு அநுக்ரஹித்தல்.
38. ஸ்ரீராமன் பரத்வாஜாச்ரமம் வருதல்-அவர் செய்த ராமஸ்தோத்ரம்-விருந்து-பரத ஸமாகமம்.
39. ராமன் அயோத்திமா நகரத்திற்குள் ப்ரவேசித்தல்.
40. ஸ்ரீராம பட்டாபிஷேகம்.
41. தேவர்கள் ஸ்ரீராமனை ஸ்தோத்தரித்தல்.
42. ராமாயண படன ச்ரவண பலம்.



## உத்தர காண்டம.

ஸர்க்கம் விஷயம் ஸர்க்கம் விஷயம்

1. சதானனனை வதஞ் செய்யுமாறு மஹரிஷிகள் ஸ்ரீராமனைப் பிரார்த்தித்தல்.
2. சதானன வதம்-ஸீதா ஸஹஸ்ர நாமம்-பஞ்சமுக ஹநுமத்ஸ்தோத்ரம்
3. சுகர் பூர்வ சரிதம்-ஸ்ரீராம் அஷ்டோத்திரம்.
4. மாருதி அர்ஜுனனுடைய த்வஜத்திற்கு அடையாளமாக விளங்கும் விவரம்.
5. ஸ்ரீராமன் செய்த வனக்ரீடை.
6. ஸீதையை ராமன் பரித்யாகஞ் செய்ததன் காரணம் கூறல்-வால்மீகி ஸீதையைப் புத்திரியாக அடைந்ததின் காரணம்.
7. லவணாசுர வதம்.
8. ஸ்ரீராமாசுவமேதம்.
9. ஸீதை வைகுண்ட மேகுதல்.
10. பரத லக்ஷ்மணர்களுடைய மைந்தர்களுக்கு அரசு கொடுத்தல்.
11. ஸ்ரீராமனிடம் காலன் வருதல்.
12. துர்வாஸர் வருகை - லக்ஷ்மணன் தன் பதம் செல்லல்-ஸ்ரீராமன் பரமபதஞ் செல்ல விருப்பங் கொள்ளல்.
13. விபீஷணன் செய்த ஹநுமத் ஸ்தோத்ரம்-அவன் இலங்கை செல்வது.
14. ஸ்ரீரங்க மஹாத்ம்யம்.
15. ஸ்ரீராமன் மாருதிக்குத் தேறுதல் கூறல்.
16. ஸ்ரீராமன் ஹநுமாருக்குத் தத்வோபதேசம் செய்தல்-மனத்தின் ஸ்வரூபம்-வாஸனையின் காரியம்.
17. மனமடங்க உபாயம் கூறல்.
18. பட்டினத்து ஜனங்கள் ஸ்ரீராமனைப் பின்றொடர்தல்.
19. ஸ்ரீராமன் வைகுண்டம் செல்வது.
20. ஸ்ரீமத் ராமாயண ச்ரவண மஹிமை.
21. ஸ்ரீமத் ராமாயண ச்ரவண பலம்.
22. ஸ்ரீமத் ராமாயண படன ச்ரவண மஹிமையைக் கூறல்.

---

ஆசிரியரின்றி ஆங்கிலந் தெரிந்துகொள்ளும்

# ஆனந்த
# ஆங்கில பாஷா போதினி.

மூன்றும் பதிப்பு.

எம்.ஏ., எல்.டி. பட்டம் பெற்ற ஆங்கில போதகாசிரியராகிய திருவாளர் எம். ஷண்முக சுந்தர முதலியா ரவர்களால் இயற்றப்பெற்ற உயர்ந்த திருத்தங்களோடும், சிறந்த அமைப்புக்களோடும், நிறைந்த போதனைகளோடும் இப்பதிப்பு வெளிவந்திருக்கிறது.

**800 - பக்கங்களுக்குமேல்**

திக்கு காகிதத்தில் அச்சிடப்பட்டு சீமைகாலிகோ பைண்டு செய்யப்பட்டது.

பற்பல கதைகளும், பாரதக்கதைகளும், ஸ்ரீ கிருஷ்ணர் சரித்திர சுருக்கமும் அடங்கியது.

அவற்றிற்குப் பொருத்தமான அழகிற் சிறந்த 16-ஆப்டோன் படங்களுடன் கூடியது.

**ஆர்டருக்கு முந்துங்கள். விலை ரூபா 2-0-0**

இக்காலத்தில் இங்கிலீஷ் இராஜ பாஷையாயிருப்பதால் அதை எல்லோரும் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமா யிருக்கின்றது. அப்படிப் படிக்காத சிலர், பல சங்கடங்களை அடைகின்றனர். ஆதலின், அத்தகையினர் கற்றுக்கொள்வதற் குதவியாயிருக்கும்படி ஆங்கில பாஷையைத் தமிழ் மக்களுக்கு எளிதிற் போதிக்கும் அரிய போதனுமுறை நூலாகிய இது நம் ஆனந்தபோதினிச் சந்தாதாரர்களும், மற்றையருமாகிய நண்பர் பலர், பல மாதங்களாக வேண்டிக் கொண்டபடி எம்மால் வெளிப்படுத்தப் பெற்றிருக்கின்றது.




இதனைச் சிரத்தையுடன் கற்றுக்கொள்ளத் தொடங்குவோர் பணச் செல வில்லாமலும், வேறெவ்விதக் கஷ்டமில்லாமலும் மிக எளிதில் இங்கிலீஷ் பேசவும் படிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்ளலாம். சிலர் ஆயிரக்கணக்கான பணச்செலவுசெய்து 10 வருஷம் படிப்பதனுல் எவ்வளவு ஆங்கிலத் தேர்ச்சி யுண்டாகுமோ அவ்வளவு தேர்ச்சியை ஒரு மாதம் அல்லது 40 - நாளில் இப்புத்தகத்தின் உதவியைக் கொண்டு அடைந்து, ஆங்கிலத்தை அதி விரைவில் படித்துக்கொள்ளலாம். இப்புத்தகமொன்று வாங்கிக்கொண்டால், இங்கிலீஷ் கற்றுக்கொள்வதற்காக வாத்தியாருக்கு அதிகச் சம்பளங்கொடுத்து அவரிடம் புத்தகத்தை தூக்கிக்கொண்டுபோய் அலையவேண்டியதில்லை. ஒவ்வொருவரும் தாங்கள் இருக்குமிடத்திலேயே அதனைச் சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். மனிதர் தாமே சுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளத்தக்க மார்க்கங்களெல்லாம் இதில் விளக்கமாக அமைக்கப்பெற்றிருக்கின்றன.

இதில் இதுவரை வெளிவராத நூதன பாடமுறைகளெல்லாம் வெளியிடப்பட்டிருக்கின்றன. இன்னும் ஒரு ரூபா முதல் 10 ஆயிரம் ரூபாவரை சம்பளப்பட்டிக் கணக்கு, வட்டிக் கணக்கு, ஒவ்வொரு தேசத்திலும் ஏற்படும் மணி வித்தியாசம், அன்னியதேச நாணயமதிப்பு முதலியனவெல்லாம் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன.

இது, தமிழ் மாத்திரம் தெரிந்து ஆங்கிலம் தெரியாமலிருக்கும் சகலருக்கும் பயன்படக்கூடியதாயினும், முக்கியமாக மணியகாரர், கர்ணம், வில்லேஜ் முன்சிப் முதலிய கிராமவேலைக்காரருக்கும், சிலோன் தோட்டங்களிலிருக்கும் கங்காணிமார்கட்கும், மலேயா, பர்மா, தென்னுப்பிரிக்கா முதலிய இடங்களிலுள்ள மேஸ்திரிமார்களுக்கும், துரைமார்களிடம் வேலை செய்யும் பட்லர், மேட்டி, ஆயாள், தோட்ட மேஸ்திரி, கோச்மென் முதலியவர்களுக்கும் மிக்க உதவிசெய்யக்கூடியது. இன்னும் இங்கிலீஷ் தெரியாத கிராமவாசிகள் பலரும் இதனைப் படித்தால் இங்கிலீஷ் பேசவும், எழுதவும் தெரிந்து கொள்வார்கள்.

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

328 ஆ. 27
148

ஓம்
பரப்பிரஹ்மணேநம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 12 | அக்ஷயஹு பங்குனிமீ கஉ | 1927ஹு மார்ச்சுமீ 14உ | பகுதி 9

## கடவுள் வணக்கம்.

அரும்பொனே மணியேயெ னன்பேயெ [illegible]
அறிவேயெ னறிவி லூறும்
ஆனந்த வெள்ளமே யென்றென்று பா[illegible]
ஞடினே ஞடி நாடி
விரும்பியே கூவினே னுளறினே னலறினே[illegible]
மெய்ச்சிலிர்த் திருகை கூப்பி
விண்மாரி யெனவெனிரு கண்மாரி பெ[illegible]வே
வேசற் றயர்ந்தே னியான்
இரும்புநேர் நெஞ்சகக் கள்வனு னுலுமுனை
யிடைவிட்டு நின்ற துண்டோ
என்றுநீ யன்றுநா னுன்னடிமை யல்லவோ
யாதேனு மறியா வெறுந்
துரும்பனே னென்னினுங் கைவிடுத னீதியோ
தொண்டரொடு கூட்டுகண்டாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே. (1)

வாராய்நெஞ் சேயுன்றன் றுன்மார்க்கம் யாவையும் வைத்துக்கட்டிங்
காரா யடிக்கடி சுற்றுகின் றுயுன் னவலமதிக்
கோரா யிரம்புத்தி சொன்னுலு மோர்கிலை யோகெடுவாய்
பாரா யுனைக்கொல்லு வேன்வெல்லு வேனருட் பாங்குகொண்டே. (2)

மாதத்தி லேயொரு திங்களுண் டாகி மடிவதைநின்
போதத்தி லேசற்றும் வைத்திலை யேவெறும் புன்மைநெஞ்சே
வேதத்தி லேதர்க்க வாதத்தி லேவிளங் காதுவிந்து
நாதத்தி லேயடங் காதந்த வான்பொரு ளுடிக்கொளே. (3)

OFFICE OF THE REGISTRAR
20 APR 1927
MADRAS

## அரும்பொருள் விளக்கம்.

1. இறைவனே! உன்னைப் பலவாறு மனதாரப் போற்றிப் புகழ்ந்த யான் கடினசித்தமுடைய வஞ்சகனானாலும் அந்நெறியினின்றும் வழுவின துண்டோ? பரமாத்மாவாகிய நீயும் ஜீவாத்மாவாகிய நானும் ஆண்டான் அடிமையாக என்றும் இருக்கின்றோம். ஆதலால் பயனற்றவனாகிய என்னையும் கைவிடாது உன் மெய்யடியருடன் சேர்ப்பாயாக என்று இப்பாடலில் ஆசிரியர் கூறுகின்றார்.

உளறுதல்=உரை தடுமாறுதல்.
அலறுதல்=வாய்விட்டுப் புலம்புதல், அல்லது கதறுதல்.
மெய்சிலிர்த்தல்=உடல் புளகித்தல்.
வேசற்று அயர்ந்தேன்=மனம் வருந்தி யிளைத்தேன்.

2. இறைவனுடைய திருவருளை அடையும்வரையில் அறிவானது மனஞ்சென்றவாறே சென்று துன்புறும்; அவ்வருளை யடைந்ததும் அதன் மயமாக அந்த அறிவுநிற்கும்; அப்போது மனம் செயலற்று ஒடுங்கும் என்று இப்பாடல் தெரிவிக்கின்றது.

ஆராய்=ஆராய்வாயாக.
அவலமதி=சபலபுத்தி.
ஓர்கிலை=ஆராய்ந்து பார்க்கவில்லை.
அருள்பாங்கு=அருளாகிய ஆயுதம்.

3. மாதங்கள் தோறும் தோன்றிமறையும் பல சந்திரன்களைப்போல, காலந்தோறும் சரீரங்கள் தோன்றி மறையாநிற்கும். ஆதலால் சரீரம் உள்ள போதே குதர்க்க வழியைவிட்டு இறைவனையடைய முயலுதல் வேண்டும்.
திங்கள்=சந்திரன்.
போதம்=அறிவு.

விந்து நாதத்திலே யடங்காது=நாதவிந்துக்கள் சுத்தமாயா காரியங்களாதலின் அந்த மாயையைக் கடந்துநின்ற இறைவன் அவற்றி லடங்குவதில்லை.

வான் பொருள்=மேலான பொருள் (கடவுள்).

---

# ஆனந்தபோதினி

அக்ஷய௵ பங்குனிமீ ௧௨

## மனோ ராஜ்ஜியம்.

மனிதர், இராஜரீகம்போன்ற பெரிய பெரிய பதவிகளை யெல்லாம் அநுபவிப்பது போன்ற, அநுபவிக்கப் போவது போன்ற, பெருங் காரியங்களை முடிப்பதுபோன்ற, முடிக்கப்போவதுபோன்ற பல வீண் எண்ணங்களை மனதில் எழுப்பிவிட்டுப் பெருக்கிப் பெருக்கித் திருப்தியடையும் பயனற்ற தன்மையே மனோராஜ்ஜியமென்பதாம். இது பெரும்பான்மையான மனிதர்களிடத்தில் பிறப்பிலேயே அமைந்துள்ளது.

மனிதருடைய வாழ்வோ, வானிடு வில்லைப்போலவும், மேகத்திற்றோன்றும் மின்னலைப்போலவும், நீரில்தோன்றும் குமிழிபோலவும் தோன்றி மறையும் இயற்கையுடையது; அங்ஙனம் மறைதலும், 'மனிதர் நூற்றிருபது வயதுவரைதானிருப்பர்' என்ற ஓர் வரையறைக்குட்பட்டதுமன்று. சிலர், கருவில் உதித்தவுடனே இறப்பர்; சிலர், சில தினங்கள்சென்று மரிப்பர்; சிலர், கருப்பையிலிருந்து வெளிப்பட்டவுடன் மாய்வர்; பலர், குழந்தைப்பருவத்தில் உயிர்துறப்பர்; பலர் காளைப்பருவத்தில் மாள்வர்; சிலர், முதுமையில் மரணமடைவர். இங்ஙனம் வரும் மரணமும் இன்ன சமயத்தில்தான் வருமென்பது மனிதரால் உணரமுடியாததா யிருக்கிறது. "இன்றைக்கிருப்பரை நாளைக்கிருப்பரென்றெண்ணவோ திடமில்லையே" என்ற தாயுமானவர் உண்மை யுரைப்படி எவருடைய வாழ்வுக்கும் எல்லை இன்னதுதானென்பதும் நிச்சயிக்கமுடியாததா யிருக்கிறது. இந்நிலையில் மனிதர்களிருக்கும்போது அவர்கள்,

"ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல"

என்பதற் கிணங்க, கோடிக்கு மேற்பட்ட பற்பல வீண் எண்ணங்களை மனதில் விருத்திசெய்து வீண்காலம் போக்கி எதையும் முடிவுக்குக் கொண்டுவராமல், மானிடப் பிறவியெடுத்ததனாலடைய

வேண்டிய இம்மை மறுமைப்பயன்களை யிழந்துவிடுகின்றனர். இவர்கள் என்னென்ன விதங்களாக மனோராஜ்ஜியம் செய்கின்றார்களெனில், சிலர், தங்களிடம் கொஞ்சம் பூஸ்திதியிருந்தால், "நம்மிடம் நிறைந்த செல்வமிருக்கிறது; நாம் இஷ்டபோகங்களை யெல்லாம் அநுபவிக்கிறோம்; நமக்குமிஞ்சிச் சுகமனுபவிப்பவர்கள் எவர்களுமிருக்கமாட்டார்கள்; நம்மோடு எவரேனும் எதிர்ப்பார்களானால் அவர்களை நாம் ஒரே நசுக்கில் நசுக்கிவிடலாம்" என்று நினைக்கிறார்கள். பொருளில்லாத சிலர், கையில் ஒன்றுமில்லாமலிருக்கும்போதே "நமக்குப் பத்துரூபாய் கிடைத்தால் நாம் அதற்கு ஏதேனும் சரக்கு வாங்கி விற்று ஒரே நாளில் அதை இருபது ரூபாயாக்கிவிடலாம்; பின் நாற்பதாக்கலாம், எண்பதாக்கலாம், நூறாக்கலாம், இருநூறாக்கலாம், ஐந்நூறாக்கலாம், ஆயிரமாக்கலாம், இலட்சமாக்கலாம், பத்துலட்சமாக்கலாம்; பின் கிராமங்கள் வாங்கலாம், மாளிகை கட்டலாம், அழகிய பெண்ணை மணம்புரியலாம், வேலைக்காரர்களை வைத்து அவர்களிடம் வேலைவாங்கலாம், ஒரு ஜமீன்தாரராய்விடலாம், அப்போது நம்முடைய வாழ்க்கை அளவற்ற ஆனந்தமுள்ளதா யிருக்கும்" என்று பல வீண் முடிவுகள் செய்து வேலையற்று மனப்பால் குடித்துக்கொண்டிருப்பர்; இன்னும் சிலர், "நாம் இந்த உலகத்தை யெல்லாம் அடக்கியாளும் அரசனாயிருந்தால், நமக்கு விரோதிகளையெல்லாம் இரண்டு துண்டாக்கிவிடலாம், நேயர்களையெல்லாம் நிறைந்த சம்பத்துள்ளவர்களாக்கிவிடலாம், நினைத்தவற்றையெல்லாம் நினைத்தபொழுதே அநுபவிக்கலாம், நம் நோக்கத்திற்கு இணங்காதவர்களை யெல்லாம் இணங்கும்படி செய்யலாம், நாம் நூதனம் நூதனமாக அநேகம் சட்டதிட்டங்களை யேற்படுத்தி அவற்றை எல்லோரும் நம் மனநோக்கப்படி அநுசரிக்கச்செய்யலாம்," என்று மனத்திற்குள்ளேயே நினைத்து நினைத்து அவற்றை யடைந்தார்போலவே மகிழ்கின்றனர்; இன்னும் பலர், குதிரைப் பந்தயத்திலாவது லாட்டரியிலாவது பணம் கட்டினால் இலட்சக் கணக்கான ரூபாய் கிடைத்துவிடுமென்று சிந்தித்து வேறு வேலைகளையெல்லாம் விடுத்துப் பந்தயம் அல்லது லாட்டரி போடும் வேலையிலேயே திரிகின்றார்கள். இன்னும் சிலர், தாங்கள் தேகக்கட்டுடையவர்களா யிருந்தால் "நமக்கெவரும் நிகரில்லை; எவர் நம்மோடெதிர்த்தாலும் நாம் அவர்களை அடித்து நொறுக்கிவிடலாம்; எவரும் நமக்கஞ்சுவார்கள்" என்று மனோராஜ்ஜியம் செய்வர். இன்னும் சிலர், சிறிது கல்வியறிவுடை-



யவர்களாயிருந்தால், "நாமே கல்வியில் முதன்மைபெற்றிருக்கின்றோம்; நம்மோடு தர்க்கம்செய்து எவரும் வெற்றிகொள்ளுதல் முடியாது; நமக்கிணையான கல்வியுடையார் உலகத்தில் எவருமிரார்; நம்மைப்போன்று நூலியற்றும் ஆற்றல் எவருக்குமிராது" என்று மனத்தில் தற்பெருமைகொண்டு அதனாலேயே ஆனந்தமடைகின்றனர். இன்னும் எத்தனையோபேர் எத்தனையோவிதமான மனோராஜ்ஜியங்களைச் செய்துவருகின்றனர்.

இவர்களின் எண்ணங்களைப்போல் எதுவும் நடைபெறாது. நல்ல அநுபவங்களோ, தீய அநுபவங்களோ மனிதர்களுக்கு அவரவர்களின் பழவினைக்குத் தக்கவாறு நேரும். இவர்கள் இத்தகைய வீண் எண்ணங்களில் காலத்தைப் போக்கிக்கொண்டிருக்கும்போதே இவர்கட்கு மரணம் சம்பவித்துவிடும்; பொருளுள்ளார்க்குப் பொருள்போய்விடும்; தேகபலமுள்ளவர்க்கு அது தொலைந்துபோகும். மேலும் கைப்பொருளில்லாதவர்கள், வேறு தொழில் செய்யாமல் வீண் மனோராஜ்ஜியம் செய்துகொண்டிருப்பதால் வறுமைக்குட்பட்டு மரணத்தின் வாயிலும் சிக்குவர். வீண் எண்ணம் படைத்தவர்களுடைய கதி இங்ஙனமாவதால் அவர்கள் இம்மையில் நிலைநிற்பதாகிய புகழையும், மறுமையில் அடையவேண்டிய நற்கதியையும் இழந்துவிடுவார்கள். மனோராஜ்ஜியத்தால் கிடைப்பன இவைகளே.

ஆதலின், இம்மை மறுமைப் பயன்களை மனிதர் அடையவேண்டுமானால், இந்த வீண் எண்ணங்களுக்கு மனத்தில் இடங்கொடுக்காமல், பயனுடைய கல்விகளைக் கற்றல்வேண்டும்; பொருள் தேடுதற்குச் செய்யத்தக்க நன் முயற்சிகளை ஊக்கத்துடன் செய்து நன்மார்க்கத்தில் பொருள்தேடி அறநெறிகளிற் செலவிடவேண்டும்; தம்முடைய தொழில் முயற்சியிலோ அநுபவங்களிலோ துன்பங்கள் நேரினும் அவை பழவினைப் பயனென்று அவற்றைச் சகித்துக்கொண்டு தமக்குரிய நற்செயல்களில் தளர்வுறாதிருக்கவேண்டும்; தெய்வபக்தியிற் சிந்தை செலுத்தவேண்டும்; பெரியாரைத் துணைக்கொள்ளுதல் வேண்டும்; தேசசேவை செய்தல் வேண்டும். மனிதர் வாழ்வு நிலையற்றதாதலின், அவர், இவற்றை உயிருடனிருக்கும்போதே விரைந்து செய்தல் வேண்டும். அங்ஙனம் செய்வாரே இவ்வுலகப் பயனையும் மேலுலகத் தின்பத்தையும் அடைந்து ஆனந்த முறுவார்கள்.

ஓம் தத் ஸத்.

# தேசநலப் பகுதி.

## மகாத்மா காந்தியின் சரித்திரம்.

(349ம் பக்கத் தொடர்ச்சி.)

### இந்தியா விஜயம்.

தென் ஆப்பிரிக்காவில் பலவித கஷ்டங்களுக்கிடையில் சாத்வீகப்போரை வெற்றியுடன் நடத்திய காந்தி அடிகள் இந்தியாவுக்கு வந்ததும் இந்தியர்கள் "மகாத்மா" என்று அவரை வரவேற்று உபசரித்தனர். பிறகு அவர் ஆமதாபாத் நகரில் சபர்மதிநதிக்கரையில் தமது சத்தியாக்கிரஹ ஆச்ரமத்தை ஏற்படுத்தினார். பலர் அவரைப் பின்பற்றி, அங்கு உண்மையான வாழ்க்கையை நடத்திவந்தனர். உண்மைபேசுதல், அஹிம்சா தர்மத்தைப் பின்பற்றுதல், பிரம்மசர்ய விரதத்தை அனுஷ்டித்தல், சாதாரணமான உணவை உட்கொள்ளல் முதலியவைகளே அந்த ஆச்சிரமத்தில் இருப்பவர்கள் பின்பற்றி நடக்கவேண்டிய விரதங்களாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பின்பு அவர் காங்கிரஸ் இயக்கத்திலும் பொதுஜன ஊழியத்திலும் ஈடுபட்டு உழைக்க ஆரம்பித்தார்.

### பொதுஜன ஊழியம்.

பேகார் மாகாணத்தைச்சார்ந்த சம்பரான் ஜில்லாவில் உள்ள அவுரித்தோட்டங்களில் வேலைசெய்துவந்த விவசாயிகளின் கஷ்டங்களைக்கேட்டுக் காந்தி அடிகள், அவர்களுக்கு உதவிசெய்யச் சென்றார். ஆனால் அந்தஜில்லா மாஜிஸ்டிரேட் சம்பரான் ஜில்லாவுக்குள் காந்தி அடிகளை நுழையக்கூடாதென்று தடை உத்தரவினால் தடுத்துவிட்டார். காந்தி அடிகள் உடனே தாம் அந்த உத்தரவை மீறிநடக்கத் தயாராக இருப்பதாகவும், அதற்காக விதிக்கப்படும் தண்டனையை ஏற்று அனுபவிக்கத் தயாராக இருப்பதாகவும் அறிவித்தார். உடனே அந்த விவசாயிகளின் குறைகளைப் பரிசீலனைசெய்ய அதிகாரிகள் ஒரு கமிட்டியை நியமித்தனர். காந்தியடிகளும் அந்தக் கமிட்டியில் ஓர் அங்கத்தினராக நியமிக்கப்பட்டார். கமிட்டியார் விவசாயிகளின் குறைகளை விசாரித்து அவர்களுக்கு அளிக்கப்படவேண்டிய சௌகரியங்களைப்பற்றி சிபார்சு செய்தனர். அந்தச் சிபார்சுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

1918-ம் வருஷம் பம்பாய் மாகாணத்திலுள்ள கெயிரா ஜில்லாவில் விளைவு கெட்டுப்போய்ப் பஞ்சம் ஏற்பட்டது. கெயிராவாசிகள் தங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள நிலத்தீர்வையை வஜாசெய்யும்படி அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொண்டார்கள். ஆனால் அரசாங்கத்தார் அதை வஜாசெய்ய மறுத்துவிட்டனர். கெய்ராவாசிகள் காந்தி அடிகளை உதவிசெய்யும்படி கேட்டுக்கொண்டனர். உடனே அவர் நேரில் சென்று அவர்களது நிலங்களைப் பார்வையிட்டு, எல்லோரையும் ஒரேமனதாக வரியை மறுத்துவிடும்படி வற்



புறுத்தினர். அதிகாரிகள் வரியை வசூலிக்கப் பல வழிகளிலும் முயன்று பார்த்தனர். அவர்களுடைய முயற்சி பலிக்கவில்லை. ஜனங்கள் உறுதியுடன் வரி செலுத்தாமல் பல கஷ்டங்களைப் பொறுமையாக அனுபவித்தனர். கடைசியாக பம்பாய் அரசாங்கத்தார் அவர்களுடைய வரியை வஜா செய்து விட்டனர்.

### அரசாங்க உதவி.

பின்பு ஐரோப்பிய யுத்தம் ஏற்பட்டது. காந்தி அடிகள் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உதவிக்காக பல இந்தியர்களை ராணுவத்தில் சேரும்படி செய்தார். கெய்ராவில் பல இடங்களில் பிரசங்கங்கள் செய்து யுத்தத்திற்கு ஆள் சேர்த்துக் கொடுத்தார். பிரிட்டிஷார் யுத்தத்தில் ஜெயமடைந்ததும் இந்தியர்கள் செய்த உதவியை மறந்துவிட்டனர். 1919-ம் வருஷத்தில் இந்திய அரசாங்கத்தார் ரௌலட்சட்டங்களென்ற இரண்டு மசோதாக்களை நிறைவேற்ற முயன்றனர். காந்தி யடிகள் கொடிய ரௌலட்சட்டத்தை ஒழிக்கச் சத்தியாக்கிரஹத்தை நடத்தி அந்தக் கொடிய சட்டங்களை இருந்த இடம் தெரியாமல் மறையும்படி செய்தார். பிறகு பஞ்சாபில் இராணுவச் சட்ட அமூல் நடைபெற்றது. ஜாலியன் வாலாபாக்கில் பல நிரபராதிகள் ஜெனரல் டயரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். பஞ்சாபில் உள்ள இந்தியர்களும், பெண்மணிகளும் குழந்தைகளும் பலவித கஷ்டங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். பஞ்சாப் படுகொலை விஷயத்தில் இந்தியர்களுக்கு அரசாங்கத்தார் யாதொரு நியாயமும் வழங்கவில்லை. ஆகவே மகாத்மா காந்தி பஞ்சாப் படுகொலைக்கு நியாயத்தையும், கிலாபத் அநீதிகளுக்குப் பரிகாரத்தையும், இந்தியாவுக்கு சுயராஜ்யத்தையும் பெற ஒத்துழையா இயக்கத்தை ஆரம்பித்தார். ஆயிரக்கணக்கான இந்தியர்கள் காந்தியடிகளின் உபதேசத்தைப் பின்பற்றிச் சிறைக்குச் சென்றார்கள். பின்பு காந்தியடிகள் கைது செய்யப்பட்டுத் தண்டிக்கப்பட்டார். காங்கிரஸில் பல பிரிவுகள் ஏற்பட்டன. ஒத்துழையாமை நின்றது. காந்தி அடிகள் விடுதலையடைந்ததும் பெல்காம் காங்கிரஸுக்குத் தலைமை வகித்தார். இப்பொழுது அவர் இராட்டினத்தில் நூற்றல், மதுவிலக்கு, தீண்டாமை ஒழித்தல், ஹிந்துமுஸ்லீம் ஒற்றுமையை வலுப்படுத்தல் முதலிய காரியங்களில் ஈடுபட்டுப் பெரிதும் உழைத்து வருகின்றார். உலகம் போற்றும் அவ்வுத்தமர் வாழ்க. திரு. கே. சு.

---

## காங்கிரசும் தீண்டாமையும்.

பாரதநாட்டின்—மக்களின் நலத்தைப் பெருக்கப் பல துறைகளிலும் முயன்றுவருவது அகில இந்திய காங்கிரஸ் மஹாசபை. இதனுண்மையைச் சரிவரப் பின்பற்றி நடப்போர் வெகுசிலர். நாடகங்களில் சமயத்திற்கேற்றவாறு நடிக்கும் நடிகர்களைப் போலல்லாது, தாம் இந்தியரென்றும், மஹான்களின் இரத்தம் தமது சரீரத்தில் கலந்துள்ளதென்றும் உணர்ந்து, உள்ளும் புறமும் தூய்மை கொண்டொழுகி, தேச மஹாஸ்தாபனத்தின் நிர்மாண திட்டங்களை நிறைவேற்றும் பலரில்லாத காரணத்தாலேயே சுதேச இயக்கத்தின்

பலனை யடையச் சிறிது தடை யேற்படுகின்றது. சிலர் பத்திரிகைகளில் தமது பெயர் அடிக்கடி பிரசுரிக்கப்படுமென்றும், பதவிகளைப் பதமுடனே பெறலாமென்றும் கௌரவத்தையும் புகழையும் கருதி எழுத்திலும் பேச்சிலும் மட்டிலும் தமது தேசபக்தியை வெளிப்படுத்திவிட்டு ஒழுக்கத்தில் தாம் கூறியதற்கும் வரைந்ததற்கும் முற்றிலும் மாறுபாடாக நடந்து கொள்ளுகின்றார்கள். பாரதி,

> "கூட்டமாய்க் கூடி நின்று கூடிப் பிதற்றலன்றி
> நாட்டத்திற் கொள்ளாரடி—கிளியே—நாளில் மறப்பாரடி"

என்று கூறியதும் இவர்களைக் குறிபிட்டேபோலும். இதைக் குறித்தே காந்தியடிகள் "காங்கிரசின் திட்டங்களைப் பேச்சில் மட்டும் ஆதரிக்கும் பலரைவிட மௌனமாக மனத்திலும் ஒழுக்கத்திலும் தேசபக்தியுடையவர் சிலரிருப்பின் நமது இயக்கம் வெற்றி பெற்றுவிடும்" என்றனர். அடிகளருளிய நல்வழி பலவற்றுளும் தீண்டாமை யென்பது சமத்துவத்தையும் சகோதரத்வத்தையும் பெருக்கும் மாண்புடன் நிற்பது. இத்தீண்டாமையை யொழித்தலே யதன் சித்தாந்தம். பாரத நன் நாட்டிற்றோன்றிய மக்களுள் பிளவேற்படச் செய்யுமித் தீண்டாமையை விலக்குவதால் ஒற்றுமை பெருகும். அவ்வொற்றுமை, வேற்றுமையை அழிக்கும்; வறுமையை ஒழிக்கும்; பெருமையை அளிக்கும்; துன்பத்தைப் போக்கி இன்பத்தைத் தரும்.

இனி, வர்ணாஸ்ரம தர்ம ஏடுகளைக்கொண்டு வாதிக்கும் சிலருக்கு நாம் கூறுவதொன்றுண்டு. பண்டைக் காலத்தில் நமது நாட்டில் வர்ணாஸ்ரம தர்ம மிருந்து வந்தது. நான்கு வருணத்தாரும் தத்தமக்கான தொழிலைச் செய்து வந்தனர். அக்கால மன்னர்கள் குடிகளைக்காத்து வர்ணாஸ்ரம தர்மத்திற்கு அழிவேற்படாவண்ணம் அரசு புரிந்து வந்தனர். இவை சென்று போன நாட்களில் இருந்த இந்திய நாட்டின் நிலை. நிகழ்காலத்தில் 'பழயன கழிதலும் புதியன புகுதலு' மாகத்தேசம் முன்னேற்ற மடையும் வழிகளையே நாம் நாடவேண்டும். தேசம் அடிமை யென்னுங் கொடிய அரக்கன் வாய்ப்பட்டு வறுமைக்கும் சிறுமைக்கு மிருப்பிடமாகிப் பொன் விளைந்த நாட்டிலே மண்ணிடத்துக்கூடப் பலன் சரிவரப் பெறாத நிலையில் வருணாஸ்ரமதர்மத்தைச் சிந்தித்துக்கொண்டே தேசசேவையை வெறுப்பதெத்துணை விபரீதம்! காலமறிந்து நடவாதவர்கள் கோலம்மாறிக் குரங்காக வேண்டியதுதான். தேசியகவி தற்கால நிலையை யுணர்ந்து,

> "ஜாதி மதங்களைப் பாரோம்—உயர்—ஜென்ம மித்தேசத்தி லெய்தினராயின்
> வேதியராயினு மொன்றே—அன்றி—வேறு குலத்தவராயினு மொன்றே"

என்று பாடிய இசை இவர்களை நித்திரையினின்று எழுப்பட்டும்.

நாம் ஒற்றுமையுடன் நமது நாட்டில் சுகத்துடனும் சுதந்திரத்துடனும் வாழவேண்டுமானால்—சுயேச்சையை நமது பிறப்புரிமை யெனக் கொள்ள வேண்டுமானால்—நம் சகோதரர்களிடம் நாம் உள்ளன்பு கொள்ள வேண்டுமானால் ஒன்று செய்திடல் வேண்டும். அதை நன்றே இன்றே செய்திடல்



வேண்டும். தாழ்ந்த வகுப்பினரென்று கருதப்படும் பள்ளர், பறையர், சக்கிலியர் முதலானவரிடத்து நாம் இதுவரை நடந்துவந்த பான்மையை யொழித்து அவர்களுக்குச் சமத்துவத்தைக்கொடுத்து, அவர்களை நம் ஒத்துழையாமை இயக்கத்திற் கழைத்தல் வேண்டும். நம்முள், கிரிஸ்தவர், முஸ்லிம்கள், பிராமணர்—(அவர்களிடமுள்ள தென்கலை வடகலை வைணவர் சைவர் ஆகிய விபரீதக் கலைச்சண்டைகள்), பிராமணரல்லாதார் முதலான பேதபுத்தி மடிய வேண்டும். இத்தகைய புயற்காற்றினால் தாக்கப்படும் நமது நாடாகிய கடலிடத்து ஓடும் காங்கிரஸ் மஹாசபையான மரக்கலம் தத்தளிக்கின்றது. இதுவே தர்மஸ்வரூபியான காந்தியடிகளிடத்துத் தோன்றிய வாக்கியம்; இவற்றை நிறைவேற்றுவதே நமது பாக்கியம்; அதுவே சிலாக்கியம்.

சகோதர சகோதரிகளே! ஆதனூரடிகளின் உண்மைவாழ்வென்ன? அவர் தோன்றியது பள்ளர் குடியே! ஒரு வேதியர் அவரைப் பல துன்பங்களுக்கு மறக்கருணையால் ஆளாக்கினர். அவர், அவ்வந்தணரைத் தமது பக்தியின் பரிபக்குவத்தால் திருப்தி செய்துவிட்டுத் தில்லையம்பதியில் திருநடனம் புரிகின்ற எம்பிரானது திருவாதிரைத் திருநாள் தரிசனங்கண்டு நித்யானந்த சொரூபியுடன் இரண்டறக் கலந்து அறுபத்து மூவரில் ஒருவராகிச் சிறந்தனரன்றோ! திருப்பாணாழ்வார் திவ்ய சரிதையென்ன? இவர் வளர்ந்தது சோழநன் நாட்டுத் தலைநகராம் திரு உறையூரில். திருவரங்கனடித் தாமரைகளில் பக்தி பூண்டு, கையில் வீணை வாத்யங்கொண்டு அதன் நாதப் பிரமத்திலீடுபட்டு இன்பமாக இறைவனைப் போற்றிப் பாடிக்கொண்டு காவிரிநதியின் தென்கரையிலுட்கார்ந்து, தமேகத்தியான பராராயிருந்த இவரை அரங்கனுக்கு மஞ்சன நீர்கொள்ள மருவிவந்த அந்தணர்கள் கல்லாலடித்து நெற்றியிலுதிரத்தைப் பெருக வைத்தனர். 'அடியாருக்கடியனுமரங்கன்' தன் பக்தன் பட்ட துன்பத்தைக்கண்டு பதைபதைத்துத் தன்றிரு முகமண்டலத்தினின்றும் இரத்தத்தைப் பெருக்கினர். பின்பு ஆழ்வார் திருக்கோயிலை யடைந்து அரங்கனைப் போற்றி மறைந்தார். இப்பக்தரின் சரிதைகள் தீண்டாமையை யொழித்தலின் சார்பாகத் திகழ்வனவன்றோ! முதலாக இவ்வடியார்கள் தோன்றிய நமது செந்தமிழ் நாட்டிலே தீண்டாமை ஒழியவேண்டும்.

இங்கு "சிறப்புஞ் சீலமு மல்லது பிறப்பு நலந்தருமோ பேதையீரே!" என்ற கபிலரின் உயர்ந்த கொள்கையும் குறிப்பிடத்தக்கதாகும். தீண்டாமையை ஒழித்தலென்னும் தலைப்பின் கீழ் நமது தமிழ்நாட்டுக் காவியங்களினின்றும் பல மேற்கோள்களை எடுத்தெழுத இடமிருப்பினும் விரிவஞ்சி இத்துடன் விடுகின்றனம்.

"ஈனப் பறையர்களேனும் அவர் எம்முடன்கூடி வாழ்ந்திருப்பவரே! அவர் சீனத்தராகார்; பிறதேசத்தார்போற் பல தீங்கிழைக்கார்" என்ற பாரதிகளின் இசை தீண்டாமையை ஒழிக்க நமது நாட்டில் ஒலித்துக்கொண்டிருக்கின்றது. ஆகையால் தேசவிடுதலையைக் கருதுமின்! தீண்டாமையை ஒழிமின்! பாரதியினிசைகேட்டுத் துயில்விட்டெழுமின். நந்தனாரின் சரிதையை நன்குணர்ந்து தீண்டாமையென்னுங் கொடும்பேயை ஒற்றுமையென்னும்

கோல்கொண்டு கடிது விரட்டுமின்! பாணனாரைப் பேணுமின்! உண்மையின் ஒலியைப் போற்றுமின்! இவ்வாறொழுகின் இன்றே தணியும் நமது தாகம்! இன்றே பணியும் நம் வீண்மோகம். இத்தீண்டாமை யொழித்தலென்னு மியக்கத்திற்குப் புத்துயிரளித்த காங்கிரஸ் மஹாசபை வாழ்க! காந்தியடிகளுக்குப் பல்லாண்டு!

S. V. **வரதராஜய்யங்கார்**, *சரஸ்வதி நிலயம்*, **உறையூர்.**

---

## கிளப்புக்காரர்களுக்கோர் வேண்டுகோள்.

நான், கீழ்க்கண்டவற்றை எனது அனுபவத்தைக்கொண்டே எழுதுவதால் ஒரு சமூகத்தையோ அன்றி ஒரு வகுப்பாரையோ குறை கூறுவதாக நினையாமல் நமதுடன்பிறந்த இந்திய ஏழைச் சகோதரர் பலருடைய நன்மையைமட்டும் கருதி எழுதியதாகக்கொள்ளும்படி வாசகர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். போஜனவிடுதிகளையும், சிற்றுண்டிச்சாலைகளையும், மனைவி மக்களைவிட்டு வியாபாரம், உத்தியோகம், வேறு பலவிதத் தொழில்கள் இவற்றை முன்னிட்டுப் பிற ஊர்களுக்குச்சென்று வாசஞ்செய்யும், அல்லது ஊர் ஊராகச் சுற்றிவரும் பலருடைய சௌகரியத்தை உத்தேசித்தே பலர் ஏற்படுத்தி நடத்திவருகிறார்களாதலால் தங்களால் கொடுக்கப்படும் உணவுக்குரிய விலையை அவர்கள் வாங்கிக்கொண்டபோதிலும் அது புண்ணியச்செயல்களிலொன்றாகு மென்பதற் கையமில்லை. ஊர் ஊராய்ச் சுற்றி வருபவர்கள் பசியாலும், தாகத்தாலும் வருந்தி வேறு கதியின்றிக் கிளப்புகளையே நம்பி வரும்போது அன்னார் தங்கள் பசியாறித் திருப்தியடைவதையும், அன்னாரின் சுகாதாரம் கெடாதிருப்பதையும், ஆகாரங்கள் சுத்தம் முதலியவற்றில் குறைவுபடாதிருப்பதையும் கவனித்து அவற்றிற்குத் தக்கவற்றைச் செய்யவேண்டியது ஷை கிளப்புக்காரர்களின் கடமையாகும். இந்நெறி தவறி நடப்பவர்கள் புண்ணியத்தைவிட்டு பாவத்தையே மூட்டைகட்டுகிறவர்களாவார்கள். ஆனால் தற்காலம் இக்கருத்தை யறியாத சிலர் கிளப்புத்தொழிலில் பல அக்கிரமங்களை நடத்திவருகிறார்கள். அவர்கள் அவ்வாறு செய்யத்தொடங்கி, இத்தொழிலைக்கொண்டே சம்பாதித்துப் பெரிய பெரிய மெத்தைவீடு கட்டவும், தங்கள் பின்சந்ததியாருக்குப் புதையல் தேடிவைத்துப் போவதுபோலப் பணம் தேடிவைத்துப் போகவும் நினைத்துக்கொண்டு பேராசையென்னும் பேய்வாய்க்குட்பட்டு, மட்டுக்குமிஞ்சிச் சிக்கனம் செய்து, தயார்செய்த பண்டங்களை உயர்ந்த விலைக்குவிற்று, பிரயாணிகளின் வயிறெரியப் பண்ணிவிடுவதையும், அவர்களை மரியாதையீனமாய் நடத்துவதையும், மற்றுஞ்சில ஆபாசங்களுக்கும், அநியாயங்களுக்கும் உடந்தையாயிருந்து தரகு சம்பாதிப்பதில், பிறநாடுகளுக்குப் பிழைக்கப்போகும் ஏழைக் கூலிகளைத் தொந்தரவு செய்வதையும் கண்டு மனம் சகியாமலே நான் இவ்வியாசத்தை யெழுதலானேன். இந்தியாவில் உயர்ந்த ஜாதியாரெனப்படும் பிராமணர்களாலேயேதான் அநேகம் கிளப்புகள் நடைபெற்று வருகின்றன. அவைகளில் 100-க்கு 95-கிளப்புகளில் அநீத விலைக்கே பண்டங்கள் விற்கப்படுகின்றன. உதாரணமாக இதர சைவர்களுடைய் கிளப்புகளில் காலணாவுக்கு விற்கும் தோசை, இட்டலி, வடை, பக்ஷண வகையறாக்கள் முதலியன ஷை பிராமண விடுதிகளில் அவர்கள் அரையணா ஒரு அணாவுக்கு மேலாகவே விற்கிறார்கள். இவ்விரண்டு வகைகளிலும் ருசியிலோ மற்ற செலவிலோ எவ்வித மாறுதலுமில்லை. யான் இவற்றை வெகுகாலமாகக் கவனித்துக்கொண்டே வந்திருக்கிறேன். சில தினங்களுக்குமுன் இவ்வகையில் சில சம்பவங்கள் நடந்தன. அவை மிகவும் விசனிக்கத்தக்கவை.



சில வாரங்களுக்கு முன் சில அவசர வேலைகளை முன்னிட்டு நான் பல ஊர்களுக்கும் போகும்படி நேரிட்டது. அப்போது ஆங்காங்குள்ள கிளப்புகளிலேயே பசியாறவேண்டியதாயுமிருந்தது. ஒருநாள் காலையில் கும்பகோணத்தில் ரயில்வேஸ்டேஷன் பக்கத்திலுள்ள ஓர் பிராமணருடைய கிளப்புக்குப்போய் அங்குள்ளாரிடம் இரண்டு இட்டிலிகளும், 1 சேர் பாலும் கொடுக்கும்படி கேட்டேன். அப்படியே அவர்களால் அவை கொண்டுவந்து வைக்கப்பட்டன. இட்டலிகளிரண்டும் கபவாத ஜுரங்கண்டவைபோல் மிகவும் இளைத்துப்போயிருந்தன. பாலோ மிகவும் தெளிவாய் அரே அரைக்கால் சேர் அளவுதானிருந்தது. நான் இவைகளை யருந்தியபின் துட்டுக்கொடுக்கப்போனேன். அவர்கள் இட்டலி இரண்டுக்கும் 1-அணா, பாலுக்கு $1\frac{1}{2}$-அணா, ஆக $2\frac{1}{2}$-அணா கேட்டார்கள். நான் அதைக் கொடுத்துவிட்டேன். ஆனால் உண்மையில் அவைகளின் பெறுமானம் 9-பைசாதானிருக்கும். பிறகொரு நாள் நான் ஸ்ரீரங்கத்திலுள்ள போஜனவிடுதிகளி லொன்றில் பசியாறும்படி போனேன். அச்சமயம் கோர்ட்டுவிஷயமாய் வந்திருந்த இரண்டு மூன்று கிராமவாசிகள் அதிக பசியோடுவந்து அக்கிளப்புக்காரரிடம் சாதம் கிடைக்குமா என்று கேட்டார்கள். கிளப்புக்காரர் அவர்களைநோக்கி, "முழுச்சாப்பாடு கிடையாது; மூன்றுபேருக்கும் அரைச்சாப்பாடு வேண்டுமானால் போடலாம்" என்று சொன்னார். அக்கிராமவாசிகள் "எங்கே போனாலும் அங்கங்குள்ளவர்கள் இப்படியே சொல்லுகிறார்கள்; பசியோ தாங்க முடியவில்லை; தயவுசெய்து முழுச்சாப்பாடு போடுங்கள்" என்று கிளப்புக்காரரிடம் கெஞ்சிக் கேட்டார்கள். அப்போதும் கிளப்புக்காரர் "முடியாது" என்று வித்தியாசமாய்ப் பேசவும் ஆரம்பித்துவிட்டனர். அப்புறம் அவர்கள் மனவருத்தத்தோடும், களைப்போடும் சென்றார்கள். அக்காட்சியைப் பார்க்க என் மனது சகிக்கவில்லை. பிறகு நான் கிளப்புக்காரரிடம் எனக்கு அரைச்சாப்பாடு கொடுக்கும்படி கேட்டேன். அவர், உடனே என்னைப்பார்த்து 'இந்தக் கிளப்பில் அரைச்சாப்பாடு போடும் வழக்கமில்லை" யென்று நிர்த்தாக்ஷண்யமாய்ச் சொன்னார். நான் அவரைநோக்கி "சற்றுநேரத்திற்குமுன் அந்தக் கிராமவாசிகளுக்கு அரைச்சாப்பாடு போடுவதாகக் கூறிய நீங்கள் எனக்கேன் போடக்கூடாது" என்று அவரைக் கேட்டேன். அவர், "அடே அப்பா! அந்தப் பட்டிக்காட்டுப் பசங்க ஒவ்வொருத்தனும் 3-ஆள் சாப்பாட்டை அமுக்கிவிட்டுப் போய்விடுவானுங்கசார்! அதினால்தான் நான் அப்

படிச்சொல்லி வெருட்டிவிட்டேன்" என்று சொல்லிவிட்டு மேலும் என்னை நோக்கி "நீங்களெல்லாம் என்னசார் வயிற்றுக்குத்தானே சம்பாதிக்கிறீர்கள்; ஏன் அரைச்சாப்பாடு என்று கேட்கிறீர்கள்? மனிதர் இன்றைக்குச் செத்தால் நாளைக்கு இரண்டுநாளாச்சு; இறந்துபோகும்போது ஒன்றும் கூட வரப்போகிறதில்லை; உங்களைப்போலொத்தவர்கள் அரைச்சாப்பாடு கேட்டாலும் நாங்கள் போடுகிறதில்லை. அது எங்களுக்குப் பாவம்சார்" என்று முன்னுக்குப் பின் முரணான வேதாந்தம் பேச ஆரம்பித்துவிட்டார். பிறகு நான் முழுச்சாப்பாடே சாப்பிட்டுவிட்டு அதற்குரிய 6-அணாவும் கொடுத்துவிட்டேன். இதிலுள்ள தந்திரமென்னவென்றால், கிராமவாசிகள் கொஞ்சம் அதிகமாகச் சாப்பிட்டுவிடுவார்களெனக் கிளப்புக்காரர் பயந்து அவர்களிடம் அரைச்சாப்பாடுதான் போடமுடியுமென்று சொல்லி அவர்களுக்கு மிகக் குறைந்த அளவான சாப்பாடு போட்டுவிட்டு அவர்களிடம் 4-அணா வாங்கிவிடுவதும், அரைச்சாப்பாடுகூடச் சாப்பிடமுடியாத சில நாசுக்கான ஆசாமிகளைக் குறிப்பினாலறிந்துகொண்டு அவர்களிடம் முழுச்சாப்பாடு போடுவதுதான் இங்கே வழக்கம் என்று சொல்லி அவர்கள் சாப்பிடும் குறைந்த அளவான சாப்பாட்டிற்கு 6-அணா பிடுங்கிவிடுவதுமேயாம். மற்றொருநாள் நான் மணச்சநல்லூர் என்னும் ஊரிலுள்ள ஓர் கிளப்பில் போய்க் கிளப்புக்காரரிடம் பக்ஷணங்கள் வாங்கிக்கொண்டு ஓர் மைசூர் பாகுத்துண்டும் கொடுக்கும்படி கேட்டேன். உடனே சுமார் அரை அங்குல கனமும், 2½-அங்குல நீளமுமுள்ள ஓர் துண்டு அவரால் கொடுக்கப்பட்டது. அவ்வளவு சிறியதுண்டை வேறெந்தக் கிளப்பிலும் நான் பார்த்ததில்லையாதலால், அதன் விலை யென்னவென்று அவரிடம் கேட்டேன். அவர், 1-அணா என்று சொன்னார். நான் 8-பலம் கொண்ட 1-சேர் விலை என்ன என்று கேட்டேன். அவர் 12-அணா என்றார். நான் ஒருசேர் நிறுக்கச் சொல்லி வாங்கி அத்துண்டுகளை எண்ணினேன். அதில் 16-துண்டுகள் இருந்தன. ஆகவே அப்பாகு சேர்க்கணக்கில் விற்கப்பட்டால் 12-அணா விலையுள்ளதாகவும், சில்லறையாக விற்கப்பட்டால் 1-ரூபாய் விலையுள்ளதாகவுமிருக்கிறது. உண்மையில் அதன் பெறுமான மென்னவென்பதைக் காலவிலையைக் கொண்டு கணக்கிடுவோம்: கால் வீசை நெய் 0—12—0, கால் வீசை கடலைமா 0—1—6, அரை வீசை சீனி. 0—4—0, விறகு 0—0—6, வாசனைப்பவுடர் 0—0—3. ஆக மொத்தம் இவைகூடிய வீசை 1-க்கும் விறகு முதலியவற்றிற்கும் ரூபா 1—2—3 ஆகிறது. சற்று ஏற்றத்தாழ்ச்சி விலையை உத்தேசித்து ரூபா 1—4—0ம் ஆகலாம். இக்கணக்கின்படி சேர் ஒன்றுக்குச் சுமார் 0—4—0 தானாகிறது. இதனோடு சிப்பந்திச்செலவு, கட்டிட வாடகை, முதலுக்கு வட்டி, இலாபம் முதலியவற்றையும் சேர்த்து இவர்கள் சேர்-1, 0—6—0 வீதம் விற்றால் கட்டாதா? அதிக இலாபந்தேட நினைத்தாலும் ஒன்றுக்கொன்று இலாபம் வைத்து 0—8—0 விற்றாலும் பாதகமில்லையே. நாலணா அடங்கும் ஓர் சாமானை, மொத்தமாக முக்கால் ரூபாய்க்கும் சில்லறையாக 1-ரூபாய்க்கும் விற்பது படுமோசமும், வழிப்பறியுமாகாதா!



உயர்ந்த குலத்தோரென்று சொல்லிக்கொள்பவருக் கிதுமுறையா? ஓர் சமயம் மதுரைஜில்லாவிலுள்ள மேலூருக்குப் போயிருந்தபொழுது காலணா பெறுமான வடை யொன்றுக்கு 1-அணா ஓர் பிராமணர் கிளப்பில் வாங்கிக்கொண்டார். இதுவும் இங்குக் குறிப்பிடத்தக்கது. இவர்கள் செய்தி இப்படியிருக்க, மேற்கூறிய எனது பிரயாணத்திலேயே நான் திருச்சியில் ஓர் பிராமணர் விடுதியில் ½-சாப்பாடு கேட்டேன். அவர், மரியாதையாக எனக்குப் போதுமான சுத்தமான அரைச் சாப்பாடு போட்டுவிட்டு என்னிடம் 3½-அணா வாங்கிக்கொண்டார். மற்றக் கிளப்புகளைவிட பக்ஷணவகைகளையும் இவர் மலிவாக விற்றார். இவரைப்போல் மற்றவர்களும் ஏன் வியாபாரம் செய்யக்கூடாது? சிலர், அப்படிப்பட்ட அநியாயமான கிளப்புகளுக்கு மனிதர் ஏன் போகவேண்டுமென்று வினவலாம். அவர்கள் என்ன செய்வது? அவர்களோ நான் கணக்கில் பிரயாணம் செய்து பசியோடு ரயிலையோ, மோட்டாரையோ விட்டிறங்குகிறார்கள். இறங்கியவுடன் அலங்காரமான போர்டுகள் தொங்கிய இத்தகைய மோசக் கிளப்புகளே அவர்களுக்குத் தென்படுகின்றன; பசியோ அவர்களை வாட்டுகிறது; அவர்களுக்கு வேறு கதியோ இல்லை. இவ்வித நிலைமையில் அவர்கள் சமாளிப்பதெப்படி? இந்நிலையில் அவர்கள் அந்தக் கிளப்புகளுக்குப் போயே தீரவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

இவ்விதம், கிளப்புக்காரர்கள் பணம் தேடினும் கௌரவமடைகிறார்களென்று சொல்வதற் கிடமில்லை. சாதாரணமாக இவர்கள் கஷ்டப்படுவதற்குத் தகுந்தபடியே காசுபெற்றால் அதன் அருமை இவர்களுக்குத் தெரியும். அப்படிக்கின்றி ஒன்றுக்கு 3-மடங்கு 4-மடங்கு இவர்கட்கு அதிகம் கிடைப்பதால் இவர்கள் அநாவசியமாகவும், அக்கிரமமாகவும் செலவு செய்வதில் புலிகளாகிவிடுகிறார்கள்; சாமானியர் ஒருவர் 3-ரூபாய் வாடகைக்குப் பேசி முடிவு செய்த வீட்டை இவர்கள் ரூ. 15-க்கு அமர்த்திவிடுகிறார்கள். பால், மோர், தயிர், நெய் முதலியவற்றிற்கு அதிக விலை கொடுக்கிறார்கள்; அதனால் அவை மற்றவர்களுக்குக் கிடைப்பது அரிதாகிவிட்டது. இன்னும் இவர்கள் இராக்காலங்களில் நாடகத்துக்கும், சினிமாக்களுக்கும் போகத்தவறுகிறதில்லை; இவர்களுட் சிலர் பகிரங்கமாய்க் குடிக்கவும், இரகஸியமாய் மாமிசந் தின்னவும் ஆரம்பித்துவிட்டார்கள்; இன்னும் சிலர் தாசிகளுக்குத் தரிசனங்கொடாமல் தூங்குவதே கிடையாது; சிலர் சூதாடுவதில் பரம்பரைச் சூதாடிகளோடு போட்டி போடுகிறார்கள்; சிலர், தங்களைக் கோடீஸ்வரரைப்போல் நினைத்துக்கொண்டு பெரியாரையும் மதியாமல் பெரும்படியாகவும் நிகரில்லாமலும் பேசத்தலைப்பட்டுவிடுகிறார்கள். இவற்றால் சிலர் ஓட்டாண்டியாகியும் விடுகிறார்கள். இவையெல்லாம் எதினால் நேருகின்றன? அநியாயமாகப் பலரும் கஷ்டப்பட்டுச் சம்பாதித்து வருவதை இவர்கள் வழிப்பறிக்குச் சமானமாய் அவர்களுக்குச் சிறிது பக்ஷணத்தைக் கொடுத்துக் கொள்ளையடிப்பதினாலல்லவோ தலை கால்தெரியாமல் நடந்து பாவத்தை மூட்டை கட்டிக்கொள்ளுகிறார்கள். இதற்குதாரணமாகச் சில வருஷங்களுக்கு முன் நிர்க்கதியான

ஓர் ஏழைப்பிராமணர், ஒருவரிடம் 2-ரூபாய் கடன்வாங்கி அதன்மூலம் பக்ஷணக்கடைவைத்து அதிலிருந்து காப்பிகிளப்பு, போஜனவிடுதி முதலியவை ஏற்படுத்தி ஒவ்வொன்றுக்கும் ஒன்றுக்கு மூன்றுபங்கு லாபம் வைத்துப் பலகாரம் முதலியவற்றை விற்றுச் சம்பாதித்ததைக்கொண்டு ஒரு மாடி வீட்டையும் கட்டினார். பாவம்! அது வெள்ளையடித்து முடியுமுன் அவருக்குக் கஷ்டகாலம் ஏற்பட்டுக் கடன் உண்டாய் அந்த வீடும் ஜப்தியாகி, அவரும் கடன்காரருக்குப் பயந்து ஒளிந்து ஜீவனம் செய்யும்படியான நிலைமைக்கு வந்துவிட்டார். இதை யாம் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம். அன்னாருடைய பிற்கால நிலைமைக்காக நாம் அனுதாபப்பட்டாலும் அவர் செய்கைக்காக வருந்தாமலிருக்க முடியவில்லை. நியாயமற்ற வழியில் தேடிய செல்வம் சிறிது நாட்களுக்குள் பறந்துவிடுமென்பதற்கிது ஒரு அத்தாக்ஷியாகும். எவ்வித வியாபாரத்திலும் சரக்குகளுக்குச் சொற்ப இலாபம் வைத்தால் அவை ஏராளமாக விற்பனையாகி மொத்தத்தில் அதிகலாபம் கிடைக்கும்; கொள் முதல் செய்வோரும் மனமகிழ்ந்து அவ்வியாபாரிகளை வாழ்த்துவார்கள். ஈசன் அனுக்ரகத்தால் அவர்களுக்கு நாளுக்குநாள் வியாபார விருத்தியேற்படும். ஆகையால் இதை வாசிக்கும் கிளப்புக்காரர்கள் "வக்கீல்கள் மனிதர் பணங்களைக் கொள்ளையடிக்கவில்லையா? வண்டிக்காரர்கள் காசு பறிக்க மனிதரிடம் வம்பிழுக்கவில்லையா? கம்பெனிகளில் மோசம் நடைபெறவில்லையா? லேவாதேவிக்காரர்கள் ரூபாய்க்கு 0—3—0 வட்டி வாங்கவில்லையா? இவர்களைப்போல் நாமும் செய்கிறோம்" என்று தங்கள் செய்கைக்குச் சமாதானங் கூறிக்கொண்டு, எம்மோடு வாதுக்குவராமல் ந்யாயத்தைக் கண்டுணருமாறு வேண்டிக்கொள்ளுகிறேன். "பெருமையும் சிறுமையுந் தான்றரவருமே", "முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்", "ஒழுக்கம் உயர்குலம்" என்பவற்றை அவர்கள் உணர்ந்து நேர்வழியில் நடக்கும்படி ஈசன் கருணைபுரிவாராக.

A. மெத்துசலா உபாத்தியாயர்.

உ

சிவமயம்.

# சைவ சித்தாந்தப் பகுதி.

(353-ம் பக்கத் தொடர்ச்சி.)

## எறிபத்த நாயனார் புராணத்தின் சில விசேடக் குறிப்புகள்.

1. எறிபத்தர் பெருமையை அளவிடல் முடியாது:—

" மல்லனீர் ஞாலந் தன்னுண் மழவிடை யுடையா னன்பர்க்
கொல்லைவந் துற்ற செய்கை யுற்றிடத் துதவு நீரா
ரெல்லையில் புகழின் மிக்க வெறிபத்தர் பெருமை யெம்மாற்
சொல்லலாம் படித்தன் றேனு மாசையாற் சொல்ல லுற்றேன்."

(எறிபத்த நாயனார் புராணம்-1.)



எனச் சேக்கிழார் பெருமானே திருவாய்மலர்ந்தருளியதால் இவ்வெறிபத்த நாயனார் பெருமையை யார்தாம் அளவிடத்தக்கவர்?

2. சிவனடியார் வழிபாடே அஞ்ஞானத்தை யறுக்குஞ் சாதனம்:—

" அறுமாசை கோப மவைநாச மாக வறுமேறு பாவமறலு
மறவேசெய் பாவ மறனாக மாயு மதுமாய மாயை யகலு
மறமாயை தானு மகமாயை தீரு மதுதீர மூலமலமு
மறமூல நோயு மமலேசர் பாத மடைவார்கள் யோக ரடியார்."

(சிவதருமோத்தரம்-10. சிவஞான யோகவியல்-95)

" பூசிடுக நீற்றினையுந் தீவினையைப் போக்கப் புரிந்தார்க டிருநீறு
பூசினரைப் பணிந்து
பேசிடுக மதுரவுரை யவரேவற் றன்னைப் பெற்றிடுக முற்றிடுக
பேணியொருப் பட்டே
கூசினர்க ளவர்தம்மைக் கும்பிடவு மேவற் குறித்தியற்றி யிடத்தானுங்
கொடுநரகக் குழியாழ்
நீசரென நினைந்திடுக நின்மலனைத் தம்மு ணினைப்பாரை நினைப்பார்கள்
வினைப்பாவ நீங்கும்"

(சிவதருமோ-11. பரிகாரவியல்-62.)

" மண்ணுளு மன்னவன்றன் மகன்குணந்தீங் கிரண்டும்
வையகத்தார் பாராதே வணங்கிடுவ ரஞ்சி
யெண்ணுளு மிறையமலன் றிருவேடந் திருநீ
றிட்டார்கள் குணங்குணக்கே டெனுமிரண்டு மெண்ணார்
விண்ணுளத் தீவினையை வீட்டியிட விழைந்தார்
விரும்பியவ ரடிபணிவர் விமலனுரை விலங்க
லொண்ணாதே யெனக்கருதி யொருப்பட்டே யமல
னொப்பரிய புரிவாழ்வு மற்றையருக் குண்டோ."

(சிவதருமோ-11. பரிகா-63.)

" எவரேனுந் தாமாக விலாடத் திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி
யுவராதே யவரவரைக் கண்டபோதே
யுகந்தடிமைத் திறநினைந்தங் குவந்து நோக்கி
யிவர்தேவ ரவர்தேவ ரென்றுசொல்லி
யிரண்டாட்டா தொழிந்தீசன் றிறமேபேசிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே."

(திருநாவு-திருக்கன்றாப்பூர்-தேவாரம்-3.)

" பொருட்டிரு மறை கடந்த புனிதரை யினிதக் கோயின்
மருட்டுறை மாற்று மாற்றால் வழிபடுந் தொழில ராகி
யிருட்கடு வொடுங்கு கண்டத் திறையவர்க் குரிமை பூண்டார்க்
கருட்பெருந் தொண்டுசெய்வா ரவரெறி பத்த ராவார்."

(எறிபத்தநாயனார்-புரா-6.)

" எள்ளற் படுகீழ் மக்களெனு மிழிந்த குலத்தோ ரானாலும்
வள்ளற் பரமன் றிருநீறு மணியு மணிந்த மாண்பினரை
யுள்ளத் துள்ளே யிருபோது முணர்ந்து தெருண்டு சிவனெனவே
கொள்ளத் தகைய வறிவினரே பிறவிக் கடலிற் குளியாதார்."

(பிரமோத்தரகாண்டம்.)

" அதிக நல்லற நிற்பதென் றறிந்தனை யறத்து
ளதிக மாஞ்சிவ புண்ணியஞ் சிவார்ச்சனை யவற்று
ளதிக மாஞ்சிவ பூசையு ளடியவர் பூசை
யதிக மென்றறிந் தன்பரை யருச்சனை செய்வாய்."

(திருவிளையாடற்புராணம்.)

" எனைத்துயிர்க்கு முறுதியிக பரமென்ப வவைகொடுப்பா னெல்லாந் தானு
யனைத்துயிர்க்கு முயிராகு மரனென்ப வவனறிவார்க் கங்கம் வாக்கு
மனத்துறுமெய்ப் பத்திவழி வருமென்ப வப்பத்தி வழிநிற் பார்க்கு
வினைத்துயர்தீர்த் திடவெடுத்த வடிவென்ப தவனடியார் வேட மன்றே."

(ஷை-விருத்த குமார பாலரான படலம்-18.)

" அரந்தை தீர்க்கு மடியவர் மேனிமே
னிரந்த நீற்றெளி யானிறை தூய்மையாற்
புரந்த வஞ்செழுத் தோசை பொலிதலாற்
பரந்த வாயிரம் பாற்கடல் போல்வது.

(பெரியபுரா-திருக்கூட்டச் சிறப்பு-3.)

" திருப்பதி வணங்க வென்று சென்றுறுஞ் சிவநே சர்க்கு
மருத்தியாற் கங்கையாதி யாடிட நாடி னோர்க்கு
மருத்துக வன்ன பான மவரவர்க் குபயோ கங்கள்
பொருத்துக வூனைப் போக்கிச் சிவபுரம் புகுவர்தாமே.

(சிவதருமோ-12. கோபுரவியல்-178.)

" சிவனே சிவஞானி யாதலாற் சுத்த
சிவனே யெனவடி சேரவல் லார்க்கு
நவமான தத்துவ நன்முத்தி நண்ணும்
பவமான தின்றிப் பரலோக மாமே."

(திருமந்திரம்-6-ம், தந்திரம்-சிவகுருதரிசனம்-8.)

" வெள்ளியநீ றறப்பூசி மேதகுகண் மணிபூண்டே
யுள்ளியவஞ் செழுத்தினரா யுண்மைநெறி யியங்கடியார்
வள்ளியமா மலர்ப்பாத மரீஇப் பணிசெய் தொழுகினுற்
றெள்ளியஞா னசிரியற் சேர்ந்தனைத்தும் பெறலாகும்."

(திருப்பெருந்துறைப் புராணம்.)

என்பவற்றால் சிவனடியார் வேடமே ஏனையோர் வினைத்துயர் தீர்த்தற் குரியதென்பதும், அவர்தரிசனமே அஞ்ஞான அழுக்கை அகற்றுவதென்ப தும், அவர் வேடமே பிறவியை யறுப்பதென்பதும் பெறப்படுவதால், அதனை வழிபடுவோர்க்குப் பிறவி யறுமென்பதற் கேதேனு மையமுண்டோ? இல்லை! இல்லை!!

### 5. சிவகாமியாண்டார் என்பவர் சிறந்த முனிவர்.

" ஆனிலை யடிக ளார்க்குத், திண்ணிய வன்பு கூர்ந்த சிவகாமி யாண்டா ரென்னும், புண்ணிய முனிவர் "

எனச் சேக்கிழார் பெருமானே சிறப்பா யெடுத்தோதி யிருப்பதால் சிவ காமியாண்டார் சிறந்த முனிவர் என்பதற்கும், உண்மைஞானி என்பதற்கும் வேறு சான்றும் வேண்டுமோ?



### 4. சிவஞானி சரியையாதி நான்கினுக்கு முரியன்.

"ஞான யோகக் கிரியை சரியை நாலு நாதன் றன்பணி, ஞானி நாலி னுக்கு முரியன்."

எனச் சிவஞானசித்தி கூறுவதால், அகச்சார்பு புறச்சார்புகளை ஒழித்துப் பலசமயத் துணிவுகளையு மறிந்து, சைவசித்தாந்த சாத்திர சிரவணஞ்செய்து, அதிற் கூறப்பட்டிருக்கின்றவாறே காண்பான் காட்சி காணப்படும்பொருள் என்ற மூவகை யுணர்ச்சிக்கிடனற, முதல்வனிடத்தில் ஈடுபடுவதாகிய உண் மைச் சிவஞான நெறியையும்,

இயமநியமாதிகளை யுடையவனுய்ச், சுத்தபூமியில் ஏற்ற ஆசனத்தி லிருந்து பஞ்சேந்திரியங்களைத் தத்தம் வழியிற் செல்லாது மறித்து ஒடுக்கி, இடைகலை பிங்கலைகளில் இயங்கும் பிராணவாயுவைத் தடுத்து, மூலாக்கினி யைச் சொலிப்பித்துச் சுழுமுனை நாடியால் மூலாதாரமுதலிய ஆருதாரங் களின் வழியே நிராதார மீதானங்களிற் செலுத்தி, சந்திரமண்டலத்திலுள்ள அமுதகலைகளைச் சரீராதி யந்தம் தேக்கிப் பரசிவ தேஜசை நினைந்திருத்த லாகிய உண்மைச்சிவயோக நெறியையும்,

அகச்சுத்தி புறச்சுத்திகளை யுடையவனுய்த், திருமஞ்சனம் திருப்பள் ளித்தாம முதலிய பூசாதிரவியங்களைக்கொண்டு, பூசாமண்டபத்திலிருந்து, பூதசுத்தி, (ஆத்துமசுத்தி), தான சுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்க சுத்திகளாகிய ஐவகைச் சுத்திகளையுஞ்செய்து, சிவலிங்கத்தின்பீடத்திலே சத் தியாதி சத்தி பரியந்தம் ஷடுத்தாசனம் பூசித்து, அதன்மேல் ஆசனமூர்த்தி மூலத்தால் சிவபெருமானை அருட்குறியாகிய சிவலிங்கத்திடத்தில் ஆவாகித் துப் பூசித்து, வித்தியாதேகம் பூசித்து அருச்சித்துத் தோத்திரஞ் செய்வதா கிய உண்மைக்கிரியா நெறியையும்,

புனிதனுய்ச் சிவாலயத்தை யடைந்து, ஸ்ரீ பஞ்சாக்கரத்தைத் தியானித் துக்கொண்டே திருவலகிடல், திருமெழுக்கிடல், திருப்பள்ளித்தாமம் அமைத்தல், திருவிளக்கிடல் முதலிய திருத்தொண்டுகளை யியற்றிச், சிவசந் நிதியை யடைந்து அன்பு முறுகி உள்ளமுடைந்து உரோமஞ்சிலிர்ப்ப, கண் ணீர்ததும்பத் திருப்புகழ்களை ஓதிப்போற்றுவதும், சிவனடியாரைச் சிவ னெனவே கொண்டு அவர்களுக்குக் குற்றேவல் செய்வதுமாகிய உண்மைச் சரியா நெறியையும்,

உண்மைச் சிவஞானியார் செய்யக் கடமைபூண்டவராவர்.

(தொடரும்) பஞ்சாட்சரபுரம், வாலையாநந்தம்.

---

சந்தாதாரர்களுக்கு:—சந்தா நம்பர் தெரிய[illegible] மாதமாதம் வ[illegible] சஞ்சிகையின் மேலுள்ள விலாசத்தில் குறி[illegible]டிருக்கும் நம்பரைப் பார்த்துக் குறித்து வைத்துக்கொள்ளக் கோருகி[illegible]



187479

# ஆரியசித்தாந்தம்.

(356-ம் பக்கத் தொடர்ச்சி.)

## (பொதுத் தர்மம்.)

ஜபம் செய்வோர் ஸ்வஸ்திகம், குசேசயம், வீரம் என்கிற ஆசனங்களில் ஒன்றிலிருந்தே செய்யவேண்டும். ஸ்வஸ்திகம் என்பது வலது முழங்காலுக்கிடையில் இடதுபாதத்தையும், இடது முழங்காலுக்கிடையில் வலது பாதத்தையும் இறுக வைத்துக்கொண்டு நிமிர்ந்து இருப்பது. வீராஸனம் என்பது வலதுபாதத்தை இடது துடைமேலும், இடதுபாதத்தை வலது துடைமேலும் வைத்துக்கொண்டு சரீரம் கோணாமல் நிமிர்ந்திருப்பது. குசேசயாஸனமென்பது வீராஸனத்தைப்போல இரண்டு துடைமேலும் பாதங்களை வைத்துக்கொண்டு அவ்விரண்டு பாதங்களின் கட்டைவிரல்களை இருகையாலும் மாறிப் பிடித்துக்கொண்டு நிமிர்ந்திருப்பதேயாம். இவ்வாசனங்கள் எல்லாராலும் பூஜிக்கத்தக்கதேயாம். இதில் ஒன்றை அனுசரித்திருந்து கொண்டு ஜபாதிகள் செய்யவேண்டுமென்று பரத்துவாஜர் கூறினார். பிரதக்ஷிணம் ஹோமம் நமஸ்காரம் பூஜை ஜபம் இவைகள் செய்யும்பொழுதும் குருதெய்வ தரிசனம் செய்யும்பொழுதும் தோளிலாவது கழுத்திலாவது வஸ்திரத்தைப் போட்டுக்கொள்ளக்கூடாது என்று சாண்டில்யர் சொன்னார். வேதாத்தியாயனம் செய்யும்பொழுதும், அத்தியாயனோற்சர்க்கம் செய்யும் பொழுதும், தானம் செய்யும் பொழுதும், போஜன ஆசமனியங்கள் செய்யும் பொழுதும் உத்தரீயவஸ்திர மில்லாமலிருக்கக்கூடாது. ஹோமம், போஜனம், தானம், உபசாரம், பிரதிகிரகம், ஆசமனம் இவைகள் செய்யும்பொழுது முழங்காலுக்கு வெளியில் கையை வைத்துக்கொண்டு செய்யக்கூடாது. சிலர் முழங்காலை வஸ்திரத்தால் மூடிக்கொண்டு செய்யலாமென்பர். ஸ்நானம், ஆசமனம், ஹோமம், போஜனம், தர்ப்பணம், தெய்வாராதனை, அத்தியயனம் இவைகளைச் செய்யும்போது பிரௌடபாதனாக இருக்கக்கூடாது. ஆசனத்தின்மேல் காலைவைத்துக்கொண்டாவது, கணைக்கால் அல்லது முழங்காலில் வஸ்திரத்தைச் சுற்றிக்கொண்டாவது இருக்கிறவனுக்குப் பிரௌடபாதனென்று பேர் என்று போதாயனர் சொன்னார்.

இனி முற்கூறிவந்தவற்றுள் ஆசனம் என்று கூறியது அஷ்டாங்க யோகத்தைக் குறிப்பிக்கும். அஷ்டாங்கயோகமென்பது பிராணவாயுவை ஒடுக்கிச் சமாதியிலிருப்பதாம். இதைச்செய்ய முயல்பவர் முதலில் சரீரத்தைச் சுகமாக வைத்துக்கொள்ளவேண்டும். இதற்கு முக்கியம் உபவாசம் என்று பூர்வ ரிஷிகள் கண்டுகொண்டார்கள்; உபவாசம் என்றால் பட்டினியா யிருப்ப தென்று கருத்தல்ல. மித போஜனம் என்பதே அதன் கருத்தாம். இதை வியாசபகவான் தமது பாரதத்தில் விரித்துக் கூறினார். உபவாசமென்பது சுத்தப்பட்டினியென்பதல்ல. காலைமுதல் பகற்கால பரியந்தம் ஒன்றையும் புஜிக்கக்கூடாது. தண்ணீர்கூட அருந்தக்கூடாது. மத்தியான்னத்தில் நிரம்ப புஜிக்கலாம். பிறகு இராப்போஜனகாலம்வரையில் தண்ணீர்கூட அருந்தக்கூடாது. இரவில் ஜாமத்துக்குள் வேண்டிய அளவு புஜிக்கலாம். இந்த விரதத்தை ஆறுவருஷம் அனுஷ்டிப்பவன் அன்னத்தால் சுமக்கப்படும் விமானத்திலேறிக்கொண்டு சொர்க்கலோகம் போவான். மற்றொரு உபவாசம் முன்போலக் காலை முற்பகல் வரையில் ஒன்றும் புஜியாமலிருந்து பகலில் ஒருவேளையே புஜிக்கவேண்டும். இரவில் உண்ணக்கூடாது. இந்த உபவாசத்தை மூன்றுவருஷம் அனுஷ்டிப்பவன் மயிலால் சுமக்கப்படும் விமானத்திலேறிக்கொண்டு சொர்க்கலோகம் போவான். இப்படி உபவாசமிருந்து புஜிக்கும்போது மத்தியில் நீரருந்தக்கூடாது. அன்னம் கறி முதலியவற்றினால் அரைவயிற்றை நிரப்பி மேல் கால்வயிறு நிரம்பும்படி தண்ணீரை ஒரே தடவையாக அருந்தவேண்டும். இப்படிச் செய்வதனால் மலஜலச் சிக்கலுண்டாகாது. அது இல்லாதபோது நாடிகள் ஒழுங்காய் நிற்கும். நாடி கிரமமாயிருக்கக்கூடியவர்களே வாசியோகம் செய்வதற்கு அருகர்களாவார்கள். இவ்வாறின்றிக் கண்டபடி புஜிப்பதாலும் பலவேளை புஜிப்பதாலும் இடையிடையே சிற்றுண்டி உண்பதாலும் நாடிகள் ஒழுங்குதப்பிநிற்கும். இந்த உபவாசவிரதத்தை அனுஷ்டிக்கச் சக்தியில்லாதவர்கள் யோகப்பயிற்சிக்கு உபயோகமாகார். இதிலும் அமாவாசை, பௌர்ணை, அஷ்டமி, சதுர்த்தசி, ஷஷ்டி முதலியவைகளில் பலாகாரம் செய்யவேண்டும். பலாகாரம் என்பது கிழங்குகளையும் பழங்களையும் புஜிப்பதாம். இக்காலத்தில் பலாகாரமென்பதற்கு இட்டலி, தோசை, உப்புமா, அடை முதலியவைகள் பொருள்களாயிருக்கின்றன. பலம் என்பது மரம் கொடி செடிகளிலுண்டாகும் பழங்களையே குறிக்கும். பலாகாரம் செய்வதனால் இளைப்புக்களைப்பு நீங்குமென்பர். மாதத்தில் ஒருவாரம் பலாகாரம் செய்யவேண்டும். இதனால் அநேகமான வியாதிகள் ஒழியும். இந்த உபவாசத்தாலும் பலாகாரவிரதங்களாலும் சரீரம் நிர்மலமாய் வியாதியற்றுச் சுகசௌக்கிய முண்டானதாயிருக்கும். அப்போது நாடிகள் வசப்படும். இவ்வாறு வியாதியற்று நிர்மல சரீரமுடையவனாய் சற்கருமங்களை அநுஷ்டிக்கிறவனே யோகப்பயிற்சி செய்யவேண்டும். இவனுக்கு இடைகலை பிங்கலை என்ற நாடிகள் வசப்பட்டிருக்குமாதலால் இவன் தடையின்றிப் பிராணாயாமம் செய்யலாம். பிராணாயாமமே முதலங்கமாம். அது ரேசகம் பூரகம் கும்பகமென்று மூன்றுவகைப்படும். பூரகமாவது பிராணவாயுவை உள்ளுக்கிழுத்துப் பூரித்தல்; கும்பகமாவது பூரித்த வாயுவை உள்ளேயே நிறுத்தல்; ரேசகமென்பது கும்பித்த வாயுவைப் பொது வாய் வெளிவிடுதல். இவற்றுக்குப் பொதுவில் நாடிசோதனையென்றுபேர். இந்த ரேசகபூரக கும்பகங்களால் வாயுவை அடக்கிச் சுழுமுனையில் செலுத்துவதே நாடி சோதனையின் பயனுமென்பர். இடைகலை பிங்கலை வழியாகப் பிராணவாயுவை இழுத்து நிறுத்துவதற்கும் சுழுமுனைவாயில் திறப்பதற்கும் உபவாசமென்பது அவசியம் அநுஷ்டிக்கப்படவேண்டும். யோகப்பயிற்சியை விரும்பின முன்னோர் ஒருநாள்விட்டு ஒருநாள் புசித்தும், மூன்றுநாட்களுக்கொருநாள் புசித்தும், வாரத்துக்கு ஒருதரம் புசித்தும், பட்சத்துக்கொருதரம் புசித்தும், மாதத்துக் கொருதரம் புசித்தும், நீரைமட்டும் அருந்தியும் வாயுவை அருந்தியும் யோகசித்தி பெற்றார்கள்.

(தொடரும்.)

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

# அறநெறிப் பகுதி.

## பாரத நீதிகள்.

நீர் வளத்தாலும் நிலவளத்தாலுஞ் சிறந்த இப்புண்ணிய பூமியாகிய பரத கண்டத்தில் ஆடவர் பெண்டிராகிய இருதிறத்தாரும் அறம் பொருள் இன்பம் வீடென நான்கையும் முறையே அடைய உற்றதுணையாயிருந்து வருவனவும், உறுதுயரடையும் பொழுது செய்வதறியாது திகைக்கும் மானிடர்க்கு இன்னதுதான் தகுந்தது என்று காட்டப் பல நீதிகளைத் தம்முட் கொண்டனவுமானவை இராமாயண பாரதங்களாகிய இதிகாஸங்களே. இதனானே நம் முன்னோர் இவைகளைப் பெரிதும் போற்றித் துதித்து ஆராதித்து வந்தனர்.

ஆனால் தற்காலத்தில் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று திரியும் தான்றோன்றித் தம்பிரான்கள் பலர் இவையெல்லாம் கட்டுக் கதையென்று அவமதித்துத் தள்ள ஆரம்பிக்கின்றனர். அன்னவர்க்கு இச்சரிதங்கள் உண்மையாக நடந்தனவென்று நிச்சயப்படுத்த முடியாது. நடந்த விஷயத்தைக் கண்டோர் கூற அதனை மறுத்தால் யார்தான் நிரூபிக்கமுடியும். ஒருதாய், 'உன் தந்தை யிவர்தான்' என்றுகூற அதனை நம்பாத குழந்தையை உணர்த்துவிப்ப தெப்படி? முடியாத காரியமன்றோ? மேலும் அன்னவர் கட்டுக் கதையென்று கூறுவதாலேயே, அவ்விதிகாஸங்களுக்கும், அவைகளைப்போற்றும் இந்திய மக்களுக்கும் சிறிதும் குறைவந்ததில்லை. நமக்கு முக்கியமானவை நல்லொழுக்கத்திற்குச் சாதனமாகிய நன்னீதிகளே. அவை ஏராளமாய் இந்நூல்களில் பெருகிக் கிடக்கின்றன. உண்மையில் நடவாதிருக்கவும், புதிதாகக் கதை யொன்றைக் கற்பித்து அதன்மூலம் அரும் பெரும் நீதிகளைப் புகட்டியிருத்தல், ஆக்கியோருடைய பெருமையை விளக்கவில்லையா? அவர் காலத்துள்ள வழக்க ஒழுக்கங்களை உணர்த்தவில்லையா? ஒவ்வொருவரும் கடைப்பிடித்து ஒழுகவேண்டிய முடிவான குறிப்பை விளக்கவில்லையா? இவை இந்தியமக்களின் விலைமதியா மாணிக்கமன்றோ?

நிற்க, பாரதம் மானிடர்க்குப் புகட்டும் நீதியைச் சற்று ஆராய்வாம். இந் நூலில் பரக்கக் காணக் கிடப்பன, சகோதர வொற்றுமை, பொறாமையால் வருங் கேடு, கற்பு, ஆபத்துக்காலத்து ஆண்டவன் உதவிபுரிதல், தீமை செய்தார் தீமையுறுதல் என்பன முதலியனவாம்.

முதலில் பாரதத்தை நீதிபுகட்டுவதற்கே ஏற்பட்டநூல் என்றுகொண்டு பாண்டவர் துரியோதனாதியராகிய இருதிறத்தாரும் சண்டையிடுவது அவசியந்தானா? என்பதை ஆராய்ந்தால் அவ்வாறு மனம் வேறுபட்டு யுத்தஞ்செய்தல் பல்வேறு நற்குணங்களை விரிக்கின்றது என அறியலாம். முதலில், உல



கத்தில் பொறாமையால் ஒரு மனிதன் மற்றொருவனுக்கு எவ்வளவுதூரம் தீங்குசெயலாம் என்பதை இந்நூல் துரியோதனாதியர் மூலம் தெரிவிக்கின்றது. அவர்கள் சிறுவயதுமுதல் பொறாமை உருவெடுத்து வந்தாற்போன்று பாண்டவரைத் தொலைக்கவே சூழ்ச்சிசெய்து வந்தனர். விஷத்தை யூட்டினர். கங்கையிற் கழுமரம் நாட்டினர். பாண்டவரை அரக்குமாளிகையிலிட்டுத் தீமூட்டினர். இன்னும் இவையெல்லாம் போதாவென்று இராஜசூயயாகத்தில் பல்வேறரசர் மத்தியில் மேன்மைபெற்றிருந்த பாண்டவரை வெகுசீக்கிரத்தில் வஞ்சனையோடு மண்டபங் காணவேண்டுமென்னும் வியாசத்தால் வரவழைத்துச் சூதாடுவித்து எல்லாப் பொருளையும் பறித்து சுதந்தரமின்றி இருக்கும் அவர்கள் முன்னிலையில் அவர்களது மனைவியாகிய திரௌபதியைக் கூந்தல் பிடித்துக் கொணர்வித்ததுமன்றி ஆடை யுரியும்படிக்கும் ஆஞ்ஞையிட்டனர். இவற்றைவிடக் கொடுமை யாதேனுமுண்டோ?

ஆனால் வலியார் ஒருவர் கொடுமை செய்ய எளியவர் பயத்தினால் பொறுப்பது வழக்கம் என்று கூறுவர். அவ்வாறு பாண்டவர்கள் பலமற்றவர்களா? துரியோதனாதியர் அவர்களைவிட வல்லவர்களா? என்பதை நோக்குங்கால் பாண்டவர்களே எத்தனையோ மடங்கு வல்லவர்கள் என்பதுவெளிப்படும். இதனை யுணர்த்தவே சிறுவயதிலிருந்தே பாண்டவர்கள் துரியோதனாதியர்களைவிட வல்லவர்கள் என்பதைப் புராணிகர் காட்டியிருக்கின்றனர். விளையாட்டிலும் பாண்டவரே ஜயித்தனர். பகாசுரன் முதலிய ராக்ஷஸர்களையும் வென்றனர். துரியோதனாதியரால் ஜயிக்க முடியாத துருபதனையும் வென்றனர். இவ்வாறு தங்கள் பலத்தைப் பலசமயத்தில் காட்டியுள்ள பாண்டவர்கள் தங்கள் மனைவியைத் துச்சாசனன் துகிலுரியப் பார்த்திருப்பதேன்? போருக் கெழுந்தால் துரியோதனாதியர் முன்னிற்பரா? ஒருபோதும் இரார். இதைத் தெரிந்தும் பாண்டவர் வாளா இருந்தமை பொறுமையின் பொருட்டே என்பது தெள்ளிதின் விளங்குகின்றது. 'பொறுத்தார் பூமியாள்வார்' என்பதைக்காட்டுகின்றது. இதனால் அறியக்கிடக்கின்றது என்னவெனில் பொறுமையை இழக்கவேண்டியகாலம் ஒருபோதும் யாவருக்கும் ஏற்படாது என்பதே. பாண்டவர் அடைந்த துன்பத்தைவிட எவருக்கு எத்துன்பம் மிகுதியும் வரக்கூடும்?

பிறகு பரக்கக் காணக் கிடப்பன சகோதர வொற்றுமையும் மூத்தோர் சொற்குக் கீழ்ப்படிதலுமாம். பாண்டவர் ஐவரும் சரீரவல்லமையிலும், புத்தி வல்லமையிலும் ஒருவருக்கொருவர் தாழ்ந்தவரல்லர் எனினும் எக்காலத்தும் பொறாமை சிறிதுமின்றி ஒற்றுமையோடே எக்காரியத்தையும் செய்து வந்திருக்கின்றனர். உலகத்தில் மண் விஷயத்திலும் பொன் விஷயத்திலும் மற்றெவ்விஷயத்திலும் மனச் சஞ்சலமடையாத இருவர் பெண்விஷயத்தில் மாறுபட்டு உயிரிழப்பதும் சாதாரணமாயிருக்கிறது. பாண்டவர் ஐவரும் ஒரு மனைவியைப் பொதுவாக அடைந்திருந்தும் கனவிலும் மாறான எண்ணமின்றிக் காலங்கழித்தனர். இப்பரிசோதனையைவிட அவர்கள் ஒற்றுமையை நீக்க வேறு எச்செய்கையாற்றான் முடியும். இதனால் இந்தியமக்கள் அடைய

எண்ணும் ஒற்றுமையும் இத்தரத்ததே என்பது தெள்ளிதின் விளங்குகின்றதல்லவா?

இதனை யறியாதார் சிலர், பாண்டவர் ஐவரும் ஒரு மனைவியை யடைந்திருத்தலால் 'அவர் நாகரீக மற்ற காலத்தவர்' என்று கூறுகின்றனர். இன்னவர்

"உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங் கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே"

என்றவருக்கத்தைச் சேர்ந்தவரன்றோ? சூதாடிப் பொருள்களை யெல்லாம் பாண்டவர் தோற்ற பிறகு திரௌபதியைப் பிடித்திழுத்து வருங்கால் அவள் அழுஞ் சமயம் துரியோதனன்,

'"தலத்துக்கியை யாது" ஐவரை மணந்த நீ அழுவானேன்' என்று கூறுவதால் அக்காலத்துப் பலர் ஓர் பெண்ணை மணந்து கொள்ளும் வழக்கம் சாதாரணமாக இருந்ததில்லை என்பது விளங்கவில்லையா?

இது நிற்க, பெண்பாலர்க்கும் இந்நூல் நிறைந்த கற்பைப் புகட்டுகின்றது என்பதைத் திரௌபதியின் சரிதத்திலிருந்து நன்கு அறியக்கிடக்கின்றது. கற்பில் திரௌபதி அருந்ததியை யொத்திருந்தாள் என்பதைப் புராணிகர் பல இடங்களில் எடுத்துக் காட்டி யுள்ளார். அவள் சிறு வயதில் துருபதனால் வளர்க்கப்பட்டு மணஞ்செய்து கொடுக்கப்பட்டாள். பாண்டவர் ஐவரையும் ஒருங்கே ஒரே கணவனாகப் பாவித்து நடந்து வந்தாளாகலின் அவள் கற்பிற்குச் சிறிதும் குறை வந்ததில்லை. மேலும் அவ் வைவரையும் ஒரேகாலத்தில் வரித்தாள். ஆதலால் உடல் வேறுபடினும் உயிர் ஒன்றே.

இது நிற்க, கணவனன்றேல் கடவுளே கதியென்று எண்ணி, திரௌபதி, திருதராஷ்டிரன் அரண்மனையில், பாண்டவர் எப்பொருளையுந் தோற்றுச் செய்வதறியாது வீற்றிருக்குங்கால் கண்ணபிரானைத் துதிக்க, ஆபத்துக் காலத்து 'ஆதிமூலமே' என்றழைத்த கஜேந்திரனைக் காத்த கடவுள் அவள் கூடவிருந்து காப்பாற்றியதால் ஆண்டவன் அடியவர்க் கெளியவன் என்பது தெள்ளிதின் விளங்குகின்றது.

அருந்தமிழ் அறிந்த அன்பர்காள்! உண்மை யுணர விரும்பும் உத்தமர்காள்! மேற்கண்ட நீதிகளைப் போன்ற நல்லொழுக்கத்திற்குச் சாதனமான நன்னெறிகள் நந்தமிழ் இதிகாஸ புராணங்களில் பல்கிக்கிடக்கின்றன. உண்மையறியும் நோக்கத்தோடு விகற்ப புத்தியின்றி ஆராய்ந்தால் அவை தோன்றாமற்போகா. எப்பொருள் எத்தன்மையனவாகத் தோன்றினும் மெய்ப்பொருள் கண்டுய்வோமாக. சுபம்.

S. சுயம்பிரகாசம், விண்ணமங்கலம்.

## சுவாமி தரிசனம் செய்யவும் வரியா?

திருவண்ணாமலையில் திருக்கார்த்திகையின்போது சுவாமி தரிசனம் செய்யப்போகும் பக்தர்களிடம் அங்குள்ளவர்கள் வரி வசூல் செய்கிறார்கள்; அதற்கு, 1. சுவாமி உண்டி, 2. அம்மன் உண்டி, 3. சுவாமி அர்ச்சனை உண்டி, 4. அம்மன் அர்ச்சனை உண்டி, 5. விநாயகர் உண்டி, 6. நவக்கிரக உண்டி, 7. நந்தி உண்டி எனப் பல உண்டிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவ்வளவு உண்டிகளை ஏற்படுத்தினவர்கள் இன்னும் இரண்டு உண்டிகள் ஏற்படுத்த மறந்து விட்டார்கள். அந்த உண்டிகள் எவையென்றால், தர்மகர்த்தா உண்டியும், குருக்கள் உண்டியுமாம். இவற்றையும் சேர்த்திருந்தால் மிகப் பொருத்தமா யிருக்கும். போடமறந்தது பக்தர்களுக்குக் கொஞ்சம் அனுகூலமாகவே முடிந்தது. அன்னிய மதத்தில் சேருவோருக்குப் பிறமதப் பிரசாரகர்கள் பல வழியில் உதவிபுரிந்து வரும்போது நமது இந்து மதத்தார் கோயிலுக்குப் போவதற்கும் வரியேற்படுத்தி யிருப்பது நம்மதவிருத்தியைக் குறைப்பதாகும். கோவிலுக்குச் செல்வோரில் அநேகர் இந்த வரியைக் கண்டு பயந்து கோயிலுக்குள் போகாமல் திரும்பி விடுகிறார்கள். இந்த அக்கிரமத்தைப்பற்றி அங்குள்ளவர்களிடம் கேட்டால் அவர்கள் திருவிழாச் செலவுக்காக இவ்வரி வசூல் செய்யப்படுகிறதென்று சொல்கிறார்கள். திருவிழாச் செலவுக்காகப் பணங்கொடுக்கப் பெரிய மனிதர்கள் இல்லையா? தர்மகர்த்தா, தம் வரும்படியில் சுவாமிக்குத் திருவிழாச்செலவு செய்யக் கூடாதா? இவ் வக்கிரமம் இங்கு நடப்பதன்றி எல்லாவூர்களிலுமே திருவிழாக்காலங்களில் நடக்கிறது. எல்லாம் வல்ல இறைவன்தான் இதைத் தீர்த்து அருள்புரிய வேண்டும். இப்பேர்ப்பட்ட அக்கிரமங்களினாலேயே அநேக சிவஸ்தலம், விஷ்ணுஸ்தலங்கள் எல்லாம் பாழடைந்து வருகின்றன. தர்மகர்த்தாக்களினாலும், பூசாரிகளினாலும் இத்தகைய சீர் கேடுகளுக்கு இடமாகிறது. இத்தகைய தர்ம ஸ்தாபனங்களின் அக்கிரமங்களை, அதிகாரவர்க்கத்தினர் கவனிப்பாராக.

பி. எ. வி. ஐயர், திருப்பத்தூர்.



## வைணவப் பகுதி.

(361-ம் பக்கத் தொடர்ச்சி.)

### ஸ்ரீ ஆண்டாள்.

ஆழ்வார், குழந்தையுடன் இல்லஞ் சென்றதும், அக்குழந்தையைத் தம்முடைய மனைவியிடம், அதன் வரலாறு கூறிக் கொடுத்தனர். மனைவி தன் கணவர் அவ்வாறு குழந்தையின் பெருமையைக் கூறி வருகையில், மேன்மேலும் அக்குழந்தையினிடத்து அன்பு அதிகரிக்கத் தனது மனமும் கரங்களும் தம்முள் முந்த, இருகைகளாலும் அக்குழந்தையை ஏந்தினாள்; கண் மலர்ந்தாள்; கண்களால் குழந்தையின் அழகைப் பருகினாள்; முகத்தோடு முகஞ் சேர்த்தாள்; முகத்தில் முத்தமிட்டாள்; முறுவலித்தாள்; என்னே! என்றாள்; ஏது? என்றாள்; இன்னது சொல்வதென்று அறியாளாயினாள்; மகிழ்ந்தனள். பெரியாழ்வார் குழந்தையைப்பெற்றது ஊர் எங்கும் பரவியது. ஸ்ரீ கண்ணன் அவதாரங்கேட்டவர், பிள்ளை பிறந்தவிடம் புகுந்து

‘நம்பி எங்கு’ ‘நம்பி எங்கு’ என்று ஆவலுடன் சென்று குழந்தையைக்கண்டு ‘ஆணொப்பார் இவன் நேரில்லைகாண்’’ என்றும், “திருவோணத்தான் உலகாளும்’’ என்றும் பலபடித்தாகப் புகழ்ந்து மகிழ்ந்தனரன்றோ? அவ்வகையே ஆழ்வாருடைய இல்லத்திற்கும் பலருஞ் சென்று, சந்திரனைக்கண்டு மலரும் நீலோற்பலமெனக் குழந்தையின் மதிமுகங்கண்டு தம் இருகண்களாலும் அக்குழந்தையின் அழகை ஆரப்பருகி வியந்தனர். சிலர், ‘இக்குழந்தையின் கால் அழகைக் கண்டீர்களா’ என்று பாதத்தைப் புகழ்ந்தார்கள்; சிலர் ‘குழல் இருந்தவாறு கண்டீர்களா?’ என்று கேசத்தினைப் புகழ்ந்தனர்; இன்னும் பலர் மற்ற அவயவங்களை வியந்து புகழ்ந்தனர். ஆயர்பாடியில் ஸ்ரீ கண்ணன் அவதாரத்தால் பெற்றாரும், உற்றாரும், மற்றாரும், ஸ்ரீ கண்ணனுடைய பிறந்த வைபவம் கொண்டாடியதே போன்று, ஸ்ரீ வில்லிபுத்தூரார் அனைவரும் ஆண்டாளின் வைபவம் கொண்டாடினர். ஆழ்வார், தமக்கும் உலகுக்கும் பேரின்பமே பெருக ஆண்டாள் தமது புத்திரியாக வந்தவதரித்தது கண்டு ஆனந்தம் பெருகியவராய், பெற்ற குழந்தைக்குக் கோதை என்று நாமகரணம் செய்தனர். கோதை, ஏனைக் குழந்தைகளைப்போலவே தன்னைப் பெற்றவர் வளர்க்க வளர்ந்து வந்தாள்.

அங்ஙனம் வளர்ந்துவருங்காலத்துத் தாய், நெய்கூட்டியதும், பாலிற் கலந்ததுமாகிய சோற்றைத் தன் இடக்கையால் தலையை யணைத்து உண்பிக்க உண்டும், காலிற் புனைந்த சதங்கை ஒலிக்க, மடநடைப் புறவென்ன நடைகொண்டு, கிண்ணத்திலிட்டசோற்றைச் சிறு கையிட்டெடுத்துத் தரையிலிட்டும், துழாவியும், வாயாற்பற்றியும், உடலிற்படச் சிதறியும், தன்னைப் பெற்றார் தம் உணர்வுகலங்கித் தன்வயப்பட்டுத் தன்னை வாரியெடுத்துத் தழுவியபடியே வலமிடமாகச்சுற்றி முத்தமிட்டுக் குலாவுமாறு, அன்னாரையும், தன்னைச் சூழவிருந்த மற்றையரையும் மகிழ்வித்து வருவாளாயினள். மேலும் தன்னைப் பெற்றவர், தனது திருந்துதலில்லாத மழலைச் சொல்லைக் காதுகொடுத்துக் கேட்டு, ‘இது கேட்டார்க்கு வீணையும் குழலும் பாலும் அமுதமும் கைக்கும் கைக்கும்’ எனவும், தனது செந்துவர்வாயிடைச் செக்கர் நிறத்துவானில் சிறு பிறை முளைத்தது என்னும்படி சிறுபல் பிரகாசிக்கத் தான் முறுவலித்தல் கண்டு தாமும் முறுவலிக்கவும் காரணமானாள். இவ்வாறு பிள்ளைத்தொழில்களைச் செய்து எவரையும் மகிழ்வித்துவந்த கோதை வளர்ச்சிபெற்றுத் தன்னைநிகர் பருவத்துப் பெண்களுடன் விளையாடத் தொடங்கினாள்.

அங்ஙனம் தொடங்கித் தன்னுடைய அழகிலும், செய்கையிலும் எவரும் ஈடுபட்டுத் தன்வயத்தவராகுமாறு செய்ததே போன்று, தன்னுடன் விளையாடும் தன் தோழிப்பெண்களும் தன்வயத்தவராக அவர்களுடன் விளையாடி வந்தாள். கோதையின் அன்பு எல்லாப் பெண்களிடத்தும் குடிகொண்டது. கோதைக்கும் மற்றைப் பெண்களுக்கும் இடையே நிகழ்ந்த அன்பு நாளுக்குநாள் அதிகரித்தது. அந்தப் பெண்கள் ஆண்டாளைத் தமக்குத் தலைவி



யாகக்கொண்டனர். பல்வகை விளையாட்டுப் பொருள்களுடன் விளையாடும் சிறுமிகள், தமக்குள் உறவின்முறைமை வகுத்துக்கொண்டு, ஒருவரையொருவர், ‘அம்மான்’ என்றும் ‘அக்காள்’ என்றும், ‘தங்கை’ என்றும் அழைப்பாராய் விளையாடுவதோடு, பெரியார், பிள்ளைபெண்களுக்குக் கலியாணம் நடத்துதல் போன்று தாமும் பாவைகளுக்குக் கலியாணம் செய்து களித்தல் இயல்பாதலின், கோதையும் அவ்விளையாட்டில் விருப்புற்று அதற்குரிய பாவைகளுக்கு ஸ்ரீ திருமாலினுடையவும் ஸ்ரீ இலக்ஷ்மியினுடையவும் பெயர்களைச் சூட்டி அவற்றை அழைத்து அழைத்து மகிழ்ந்தாள்; ஸ்ரீ அரங்கநாதன் பெருமையினைச் சுட்டும் பாடல்கள் பலவும் சொல்லி அவற்றிற்கு விவாஹம் நிறைவேற்றி மகிழ்ந்தாள். மேலும் கோதை, மண்ணாலேயே கோயில் ஒன்றமைத்து அதில் ஒரு பாவையைக் கடவுளென்று வைத்துப் பக்கங்களிலுள்ள பல்நிறத்துப் புஷ்பங்களை மாலையாகக்கட்டி அப்பெருமானுக்கிட்டு, எல்லாப் பெண்களும் அவனைத் தொழும்படி அவர்கட்குக் கட்டளையிட்டாள். பெண்களெல்லாம் மிகவும் பணிந்தவராய் ஆண்டாளிட்ட வழியே செல்வாராயினர். இவர்கள் இவ்வாறு விளையாடி வருதல் இவர்களைப் பெற்றவர்க்கும் பேரின்பம் விளைத்து வந்தது. ஊரிலுள்ளார் எல்லாரும் தத்தம் மக்கள் ஆண்டாளுடன்கூடி விளையாடி வருவதைப் பார்த்துக் களிப்புற்று அதற்கிசைந்திருந்தார்கள். அங்ஙன மிசைந்து, தம் மக்கள் ஆண்டாளுடைய பழக்கங்களைக் கொள்ளுமாறு செய்வதே, தாம் அவர்களுக்குத் தெய்வசிந்தனையை யூட்டுவதற்குரிய வழியாகும் என்று எண்ணினர். சிலர், “ ‘ஆண்டாள் விளையாட்டிலும் தெய்வவழிபாடு செய்தலைப் பார்த்து, “இவள், ஆழ்வார்க்குப் பிறந்த குழந்தையன்றோ; ‘தாயைப்போல் பிள்ளை நூலைப்போல் சீலை’; இவள் தகப்பனார் அரிபக்தி கொண்டவரல்லரோ? அவர் பழக்கமே இக்குழந்தைக்கும்’’ என்று கொண்டாடுவாராயினர். அவருள் ஒருத்தி, ‘எல்லாம் இருக்கட்டும்; என்ன இருப்பினும், இக்குழந்தைக்கு இந்த வயதிலே இவ்வளவு அறிவு எங்கிருந்து வந்தது? நாமும் வயிறுதிறந்தோம், அசடுகளைப் பெறுதற்கு’ என்றாள்; மற்றொருத்தி ‘பெண்களுக்கு நற்கணவன் வாய்ப்பதும், சற்புத்திரன் பிறப்பதும், நல்லபெண் உற்பத்தியாவதும் அவரவர் வினைக் கேற்றபடி அமையும்’ என்றாள்.

இவ்வாறு அனைவரும் ஆண்டாளின் விளையாட்டையும், அவள்மூலம் மற்றைப் பெண்களுக்கும் உண்டான நல்லொழுக்கத்தையும், நல்ல எண்ணத்தையும் கண்டு அவளைப் புகழ்ந்ததோடு, அவளைப்பெற்ற பெரியாழ்வாரையும், அவர் தம் மனைவியையும் புகழ்வாராயினர். ஸ்ரீ கண்ணனைச் சுட்டி யசோதை, “ ‘இவனைப்பெற்ற வயிறுடையாள் என்ன நோன்பு நோற்றாள்கொலோ’ என்னும் வார்த்தை எய்துவித்த இருடிகேசா’’ என்று சொல்லி மகிழ்ந்தாற் போன்று ஆண்டாளைப் புத்திரியாகப் பெற்ற அவரும், தமக்கு ஆண்டாளால் ஏற்பட்ட பெருமைகண்டு அகம் மகிழ்வாராயினர்.

(தொடரும்.) N. திருவேங்கடத்தையங்கார்.

## ஞானப் பகுதி.

(315-ம் பக்கத் தொடர்ச்சி.)

### வேதாந்த சாரசங்கிரக வசனம்.

**ப**கவானானவர், தாமே பிரபஞ்சத்தின் அபிவிருத்தியின் பொருட்டுச் சிருஷ்டியை யுண்டாக்கும் காமுகராயுள்ள ஜனங்களைப் படைத்தார். அந்தக் காமிகளாலே உலகமானது, மோகமடைந்து, சந்திரனால் சமுத்திரம் விருத்தியாவதுபோல் விருத்தி யடைந்துகொண்டிருக்கின்றது. இந்தக் காமத்தை யுண்டாக்குபவன் காமன்; அவனே ஜகத்தைப் பிரமிக்கச் செய்கிறான்; ஸ்திரீ புருஷர்களின் சித்தத்திலிருந்துகொண்டு அவர்களைத் தன் தமோகுணத்தினாலும், ஆசையென்னும் கயிற்றாலும் கட்டிப் பிரபஞ்ச சிருஷ்டியை விருத்திசெய்கிறான்; பிரம்மஞானத்தை நசியச்செய்து ஸ்திரீ புருஷர்களுக்குப் பிரமையை யுண்டாக்குகின்றான். இவற்றை அடியிற்கண்ட அவனுடைய பெயர்கள் விளக்குவனவாம்: (சித்தஜன் = சித்தத்தில் தோன்றுபவன்; சித்தம் = மனம், ஜம் = தோன்றுதல்; காமன் = ஆசையை யுண்டாக்குபவன்; காமம் = ஆசை, அதை யுண்டாக்குபவன் காமன்; மன்மதன் என்பதற்கும் மனதைக் கலங்கச்செய்பவன் என்னும் பொருளாதல் காண்க.)

எல்லாப் பிராணிகளுக்கும் தம் சித்தத்தில் தோன்றும் காமமிகுதியால் போக்யவஸ்துக்களினிடத்தில் "இவற்றை யனுபவிக்கவேண்டும்; இது அனுபவ யோக்கியமானது; இது இன்பமாயிருக்கும்" என்னும் ஆசை யுண்டாகின்றது. இது உண்மையே. இவ்வாறில்லாவிடின் அறியப்படாத வஸ்துக்களினிடத்தும் வாஞ்சை எவ்வாறுண்டாகும்? உண்டாகாதல்லவா! இதனால் ஸ்திரீ புருஷர்களின் சித்தத்திலிருக்கும் காமனே அவர்களை ஆசையென்னும் கயிற்றால்கட்டி ஆட்டுகிறானென்பது உண்மையேயாகும். இதுபற்றியே இக்காமமானது எல்லாப் பிராணிகளிடத்தும் மிகவும் பிரபலமாகக் காணப்படுகின்றது. இவ்வுடல் முதுமையை யடைந்தாலும் காமமானது முதுமை யடைவதில்லை. யௌவனமாகவே யிருக்கும். ஆகையால் புத்திசாலியாயுள்ளவன் இந்திரியவிஷயங்களினிடத்தில் துன்பமுள்ளதென்றெண்ணிக் காமமாகிய பாசத்தால் கட்டப்படாமலிருக்கவேண்டும். அப்படி யிருப்பவனே வீட்டுநெறியை யறிந்தவனாவான்.

[இனி, இக்காமத்தை ஜெயிக்கத்தக்க உபாயம் யாதெனின் கூறுகிறார்.] நான் காமத்தை ஜெயிக்கும் சூட்சுமமான உபாயத்தைச் சத்புருஷர்களுக்குச் சொல்லுகிறேன். அது யாதெனில், சங்கற்பத்தை விடுதலேயாகும். கேட்கப்படுகின்றவைகளும் காணப்படுகின்றவைகளுமாகிய அனுபவயோக்கியமான எந்தப் பொருளிடத்திலும் 'இது நன்றாயிருக்கின்ற' தென்னும் புத்தியை விடவேண்டும். அப்படிவிட்டால் ஆசையானது ஒருபோதும் உண்டாகாது. (இது நன்றாயிருக்கும் என்னும் எண்ணமிருப்பதாலேதான் அப்பொருளிடத்து ஆசையுண்டாகின்றது. அவ்வெண்ணம் இல்லாவிட்டால் ஆசையுண்டாதலுமில்லை.) காமமானது சங்கற்பத்தினாலேயே யுண்டாகின்றது. ஆகையால் சங்கற்பமே காமத்திற்கு வேராகும். வேர் நாசமானால் முளை அழிந்துபோவதுபோல், வேராகவுள்ள சங்கற்பம் நசிப்பதால் காமமும் நசிக்கிறது. நன்றாயிருக்கின்றதென்னும் பாவமில்லாமல் போக்கிய வஸ்துவைக் கோருவதற்கு எவனாயினும் சக்தியுடையவனாவானோ? ஆகான். அதனால் காமத்தை ஜெயிக்க நினைப்பவன் பதார்த்தத்தினிடத்தில் இது நன்றாயிருக்கின்றதென்னும் பாவத்தை அறவே யொழிக்கவேண்டும். காமத்தை ஜெயிக்கும் விருப்பமுள்ளவன் பதார்த்தத்தினிடத்தில் 'இது சுகமுடையது' என்னும் எண்ணத்தைத் தொலைக்கவேண்டும். வஸ்துவினிடத்தில் இது சுகமுள்ளதென்னும் பிராந்தி எதுவரையிருக்கிறதோ, அதுவரையிலும் ஒருவன் காமத்தை ஜெயிக்கும் சக்தியுடையவனாகான். ஆகவே, சங்கற்ப முண்டாகாமலிருப்பதற்கு வஸ்துவினுடைய உண்மையான ஸ்திதியை ஆராய்ந்தறிதலும், சங்கற்பத்தினால் அநேக அநர்த்தங்களுண்டாகுமென் றெண்ணுவதுமே தக்க உபாயங்களாம். இவ்விரண்டு உபாயத்தையும் அனுசரித்தால் சங்கற்பமுண்டாவதற்கு இடமேயிராது. உதாரணமாக,

ஓர் இரத்தினத்தைக்கண்ட வொருவன் 'இது ஒருகல்' என்றெண்ணி, அதனிடம் விருப்பங்கொள்ளாமலிருப்பானானால், அதனால் நேரிடக்கூடிய பயம் அவனிடத்துண்டாகுமா? 'இது மிகவும் நல்ல இரத்தினம்; இது நமக்குக் கிடைத்தால் எவ்வளவோ ஆனந்தமாயிருக்கலாம்' என்று எண்ணுவானானால் பயம் உண்டாகாமலிருக்குமோ? 'இது கிரகிக்கத் தகுந்தது' என்னும் எண்ணமிருந்தாலும் பயமுண்டாகாதா! உண்டாவது திண்ணம். ஆதலால், பொருள்களின் நிஜஸ்திதியைப் பார்த்தலும், அநர்த்தத்தின் எண்ணமுமே, சங்கற்பத்தையும் காமத்தையும் நாசப்படுத்தத்தகுந்த மார்க்கங்களென்றறிதல் வேண்டும்.

'சங்கற்பந்தான் பவபந்தம், சங்கற்பம் தீர்ந்ததுமுத்தி' என்று ஞானவாசிட்டங் கூறுகின்றதும் இங்கு உணரற்பாலதாம். சங்கற்பம் உள்ளவரையில் இந்திரிய வியாபாரம் ஒழியாது. இந்திரிய வியாபாரமொழியாதவரை சுகதுக்கங்கள் தொலையா. சுகதுக்கமுள்ளவரை மனம் பரிசுத்த மடையாது. ஆகையால் எல்லா அநர்த்தங்கட்கும் காரணமாயிருத்தலின் சங்கற்பத்தை யொழிப்பதே காமத்தை ஜெயிக்கு முபாயம் என்றார்.

'பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளானும் மாணாப் பிறப்பு.'

'அவாவென்ப எல்லா வுயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாப் பிறப்பீனும் வித்து.'

'ஓடும் இருநிதியும் ஒன்றாகக் கண்டவர்கள்
நாடும் பொருளே என் நட்பே பராபரமே."

‘அற்றது பற்றெனில் உற்றது வீடு’

‘ஆசையெனும் பெருங்காற்றூ டிலவம்பஞ் செனவு மன
 தலையுங் காலம்
மோசம்வரு மிதனாலே கற்றதுங்கேட் டதுந்தூர்ந்து
 முத்திக் கான
நேசமும்நல் வாசமும்போய்ப் புலனாய்இல் கொடுமைபற்றி
 நிற்ப ரந்தோ
தேசுபழுத் தருள்பழுத்த பராபரமே நிராசையின்றேல்
 தெய்வ முண்டோ.

எனும் பிறவான்றோர் வாக்கியங்களும் ஈண்டு அறியத்தக்கனவாம்.

## தனத்தா லுண்டாந் தீமைகள்.

தனமானது பயத்தை யுண்டாக்கும்; துக்கத்தை எப்பொழுதும் அதிகரிக்கச்செய்யும்; உலகநிந்தையைப் பிறப்பிக்கும்; அந்நியரையெல்லாம் பந்துக்களாகச் சேர்க்கும்; நல்ல குணங்களைப் போக்கும்; லோபகுணத்தை விருத்தியாக்கும். இவ்வாறு பல தீமைகளையுண்டாக்குமேயன்றி, மோக்ஷசாதனத்தையேனும், சித்தசுத்தியையேனும் தராது. [தனத்தால் பயமுதலானவை யுண்டாவதெங்ஙனமெனின் விவரிக்கிறார்] பணமுள்ளார்க்கு அரசரால் பயம்; கள்வரால் பயம்; பங்காளிகளால் பயம்; இவ்வாறு பலவகையிலும் பயத்திற்கே காரணமாயிருத்தலால் தனமானது சுகத்திற்குச் சாதகமாவதில்லை. மேலும், தனமானது சம்பாதிக்கும்பொழுதும் சம்பாதித்ததைக் காப்பாற்றும்பொழுதும், தானஞ்செய்யும் பொழுதும், செலவிடும்பொழுதும் துக்கத்தையே யுண்டாக்குவதாகுமாதலின் சுகசாதனமாகாது. நல்லவர்களுக்கும் தனத்தின் சேர்க்கையால் குணம் மாறுபட்டு இன்னும் சேர்க்கவேண்டும் என்னும் ஆசை யதிகரிக்கும். அந்த ஆசையால் நன்மை தீமைகளை யறியும் விவேகம் குறையும். விவேகக் குறைவால் தீமையுண்டாகுமென்பதைச் சொல்லவேண்டியதில்லை.

செல்வம் சேராவிட்டால் வறுமையானது மனிதர்களை வாட்டுகின்றது. தனம் சேர்ந்தாலோ ஆசையானது மனிதரை வருத்துகின்றது. ஆதலால் தனமானது இருக்கிறவனையும் கஷ்டத்திற் காளாக்கும். இல்லாதவனையும் கஷ்டத்திற் காளாக்கும். எனில், வேறு யார்க்குத்தான் அது சுகத்தையுண்டாக்கும்! தனத்தை ஒருவன் தானே அனுபவித்தால் அது அவனுக்கு மதத்தை யுண்டாக்கும். தானதருமங்களைச் செய்தாலோ, அத்தானதருமத்தாலுண்டாகும் புண்ணியப்பேற்றை யனுபவிக்க மறுபிறவி யுண்டாகும். தான் அனுபவித்தல், பிறர்க்குக் கொடுத்தல் என்னும் இவ்விருவகையிலும் தனம் கன்ம ஏதுவாயிருக்கக்காண்டலின், வேறெவ்வகையில் தனம் இன்பம் தரும்! இவற்றைத் தவிர வேறு மார்க்கம் இல்லை.

(இங்கு தானதருமங்களும் பிறவிக் கேதுவாகலின், அதுவும் செய்யத்தக்கதல்ல எனக் கூறியது, கேவலம், மோக்ஷத்தைமாத்திரம் கோருபவர்க்கே



யாம், மற்றவர்க்கன்று. பேராசைகொண்டு செல்வந்தேடுதலும் தானு மனுபவிக்க விரும்புதலும் எவருக்கில்லையோ, அன்னார்க்கே இது கூறப்பட்டது. ‘இருவினையால் வரும் இன்பொடு துன்பம்’. பொன்னால்செய்த சங்கிலியாயினும், தளைப்படுத்தும்வகையில் இருப்புச்சங்கிலிக் கொத்ததேயாமாறுபோல், பாபத்தைத் துய்க்கத் தீவினை பிறவி தருவதுபோல், புண்ணிய கருமமாகிய நல்வினையும், பிறவியைத் தருவதாகலின், சகல துன்பங்கட்கும் இருப்பிடமாகிய பிறப்பை யொழித்துப் பிறவாநெறியை அடைய விரும்புவோர் இருவினையுமற்றவராதல் அவசியம். இதுபற்றியே நாயனாரும் ‘இருள்சே ரிருவினையும் சேரா இறைவன்—பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு’ என்றார். பிறவியற்ற நிலையே முத்தியாம்—புண்ணிய மிகுதியாலுண்டாம் பிர்மேந்திராதியர் பதமும் துன்பவேதுவாம் என்பது முன்னர் முதற்சாதனமாகிய நித்தியாநித்திய வஸ்து விவேகம் கூறியவிடத்து விளக்கப்பட்டிருக்கின்றது. ஆண்டுக்காண்க.

(தொடரும்.) பூ. ஸ்ரீநிவாசன், தமிழ்ப்பண்டிதர், சித்தூர்.

# மாணவர்பகுதி.

## ஆத்திசூடி உதாரணக்கதைகள்.

(365-ம் பக்கத் தொடர்ச்சி.)

### “காப்பது விரதம்.”

“காப்பது—(விரதத்திற்குரிய ஒழுக்கங்கள் தவறாமல் அவற்றைக்) காப்பாற்றிக்கொள்வதே, விரதம்—விரதமாகும்” என்பது இதன்பொருள்.

மனிதர், நல்லநீரில் குளித்துக் கடவுளைத்தொழுது, பரிசுத்தமானதும், குறைந்த அளவுள்ளதுமான உணவுண்டு, தம் முயிர்களைப்போலவே பிறவுயிர்களையும் நினைத்துப் பாதுகாத்து, தர்மகாரியங்களைச் செய்து வருதலும், இன்னும் பல புண்ணியச் செயல்களைப் புரிவதுமே விரதத்திற்குரியனவாம். இவற்றைச் செய்யவேண்டுமென்று உறுதிசெய்துகொண்டு காத்து வருவதுதான் விரதமென்று சொல்லப்படும். இவ்விரதத்தை நிறைவேற்றி வருவோர், கடவுள் அருள்பெற்று இன்பத்தை யடைவர். இவ்விரதங் கெடுத்து வாழ்வோர், இவ்வுலகத்திலும், மறு உலகத்திலும் துன்பத்தையே அடைவார்கள். விரதத்தின் தன்மை இவ்வளவு சிறந்ததாயிருந்தும் சிலர் இதனைக் கைவிட்டு நற்பயனிழந்து திரிகின்றார்கள்; சிலர் விரதத்தின் உண்மைக்கருத்தை உணராமல், பெருமைக்காக அதனைச் செய்பவர்கள்போல நடித்து இம்மை மறுமை இரண்டிடங்களிலும் இடர்ப்படுகின்றனர். இப்படிப் போலி விரதங்கொண்டு துன்பமுற்றார் பலருண்டு; அவருள் ஒருவர் கதையை இதனடியில் விளக்குவாம்:

சில ஆண்டுகளுக்குமுன், செம்பியன்பட்டியென்னும் கிராமத்தில், நச்சுவாய் நாகப்பன் என்னும் ஒரு மனிதனிருந்தான். இவன், எப்பொழுதும் ஓயாமல் பேசிக்கொண்டே யிருப்பான்; இவன் பேச்சோ, கேட்பவர்க்கு நஞ்சைப்போல் வெறுக்கத்தக்கதாயிருக்கும்; இந்த இரண்டுவகைக் காரணங்களினாலேயே இவனுக்கு இந்த 'நச்சுவாய் நாகப்பன்' என்ற பெயர் ஏற்பட்டது. இவன், கல்வியறிவில்லாதவன்; தற்பெருமை யுடையவன்; சாப்பாட்டில் மிகுந்த விருப்பமுடையவன்; சிறந்த கல்வியுடையவன்போலவும், உயர்ந்த சீலமுள்ளவன்போலவும், தெய்வபக்தியிற் சிறந்தவன்போலவும் நடிக்கத் தக்கவன்.

இவன், சாப்பாட்டில் மிகுந்த விருப்பமுள்ளவனாயிருந்தும் இவனுக்குத் தினந்தோறும் சரியான சாப்பாடு அகப்படவில்லை. இவன் மனைவி, கையழுத்தக்காரி; பணச்செலவானால் அவளுக்கு வயிறெரியும்; அதனால் அவள் அதிகச் செலவுசெய்து ஒருநாளாவது நாகப்பனுக்கு நல்ல சாப்பாடு சமைத்துப் போடுவதில்லை. நாகப்பன் சாப்பாட்டில் மிக்க ஏக்கங் கொண்டிருந்தான். அதனால் இவன், 'நம் மனைவியை ஏமாற்றி நல்ல சாப்பாடு சாப்பிடுவதற்கு என்ன தந்திரம் செய்யலாம்?' என்று ஆலோசித்தான். 'தான் பற்பல விரதங்களை யேற்படுத்திக்கொண்டு மகாவிரததாரிபோல நடித்துவந்தால் பெருந்தீனிக்கு இடமுண்டாகும்' என்பது இவனுக்கு விளங்கிற்று. அதுமுதல் இவன், அமாவாசை, கிருத்திகை முதலிய இரண்டு மூன்று விரதங்களை ஏற்படுத்திக்கொண்டான். சில மௌட்டிக விரதக்காரர்கள் விரதத்திற்குக் காலையில் வயிறுநிறைந்த பலகாரமும், மத்தியானம் விலாப்புடைக்கும் சாப்பாடும், இராத்திரியில் தொண்டைவரைநிறையும் பலகாரமும் விழுங்கி யேப்பமிடுவது வழக்கமாதலால் அந்த வழக்கத்தையே இவனும் தன் பெருந்தீனிக் கனுகூலமாக ஏற்படுத்திக்கொண்டான். இவன் மனைவி செலவைக்குறைக்கும் கெட்டிக்காரியாயிருந்தாலும் விரதத்திற்குக் குறைவு செய்யக்கூடாதென்று பயந்து, விரததினங்களில் மாத்திரம் பலகாரபக்ஷணங்களையும, சாப்பாடுகளையும் குறைவில்லாமற் செய்து இவனுக்குப் போட்டுவந்தாள். அவ்வாறு போட்டுவரவே நாகப்பன், 'விரதம் நம்முடைய பெருந்தீனிக்கு நல்ல உதவிபுரிகிறது; இதையே நாம் இன்னும் அதிகப்படுத்திக்கொண்டால் அடிக்கடி ஆனந்தச் சாப்பாடு சாப்பிடலாம்' என்று முடிவு செய்து கொண்டு முன்னிருந்த விரதங்களுடன், ஞாயிற்றுக்கிழமை விரதம், சோமவாரவிரதம், செவ்வாய்க்கிழமை விரதம், வெள்ளிக்கிழமை விரதம், சனிக்கிழமை விரதம் ஆகியவற்றையும் ஏற்படுத்திக்கொண்டான். ஒருவாரத்தில் புதன், வியாழம் என்னும் இரண்டுநாட்கள்தாம் இவனுக்கு விரதமில்லாத தினங்கள். 'எல்லாத்தினங்களையும் விரதத்திற் சேர்த்துவிட்டால் மனைவிக்குச் சந்தேகமுண்டாகும்; அதனால் உள்ளதும் கெட்டுவிடும்' என்று பயந்தே இவன், அந்த இரண்டுதினங்களையும் விட்டுவைத்தான்; இல்லாவிடில் அவற்றையும் விரதத்தில் சேர்த்தேவிடுவான்.

இவ்வாறு விரதத்திற்கு ஏற்படுத்திக்கொண்ட ஐந்துதினங்களிலும் இவன், காலையில் எழுந்தவுடன் இட்டலியில் எழெட்டும், தோசையில் பன்னிரண்டும், புட்டில் அரைப்படியும் உள்ளே தள்ளிவிட்டு முக்காற்படி மோரை மூச்சுவிடாமற் குடித்துவிடுவான்; மத்தியானத்தில் சீக்கிரம் குளித்துவிட்டுச் சாப்பாட்டை நினைத்துக்கொண்டே மந்திரம் சொல்லும் பாவனை காட்டி, ஐந்தாறுவகைக் கறிகளுடன் சாப்பாட்டை இலையில் பரப்பிச் சுவாமிக்கென்று தீபாராதனை காட்டிவிட்டுத் தொண்டைக்குழிவரையில் வரும்படி எல்லாவற்றையும் விழுங்கி ஏப்பமிட் டெழுந்திருப்பான். இரவில் இருபத்தைந்து தோசையை வயிற்றிற்போட்டு நிரப்பிவிடுவான். இவ்வகையான சாப்பாட்டு விரதத்தை இவன் நெடுங்காலமாக நடத்திவந்தான்.

இவ்வாறு பெருந்தீனி விரதம் நடைபெற்று வருங்காலத்தில், ஒரு சமயத்தில் ஒரு முக்கியமான விரததினம் வந்தது. அன்றைக்கு அதிகமான பலகாரவர்க்கங்களும், பலமான சாப்பாடும் செய்யவேண்டுமென்று நாகப்பன், தன் மனைவியிடம் கேட்டுக்கொண்டான். அவள் அவ்வாறே அவற்றைச் செய்தாள். நாகப்பன் அன்று காலையில் விரதத்திற்காகப் பன்னிரண்டு இட்டலியும், இருபத்துநான்கு வடையும், மூன்று கப் உப்புமாவும், இரண்டு கப் காப்பியும் உட்கொண்டான். பலகாரங்கள் அதிகரித்திருந்ததால் அவனுக்குப் பன்னிரண்டுமணிவரை பசியெடுக்கவில்லை; பலகார ஏப்பம் பலமாகக் கிளம்பிக்கொண்டிருந்தது. அப்படியிருக்கும்போதே அவன், குளித்துத் தெய்வசிந்தனை சிறிதுமின்றிக் கடவுளுக்குப் பூசனை புரிபவன்போல நடித்துவிட்டுச் சாப்பாட்டில் உட்கார்ந்து, நெய்யிலும் பருப்பிலும் ஓர் இலைசோறும், குழம்பில் ஒருமுறம் சாதமும், இரசத்தில் அரைப்படி அன்னமும், தயிரில் காற்படி சாதமும், ஐந்தாறுவடைகளும், இரண்டு மூன்று அப்பளங்களும், தேங்காயளவு சர்க்கரைப்பொங்கலும் உட்கொண்டு அரைப்படி பாயசத்தையும் குடித்துவிட்டு அன்றுமுழுவதும் மூச்சுவிடமுடியாமல் திணறிப் படுத்துப் புரண்டுகொண்டிருந்தான். அப்படிப் புரண்டவன் அன்றிரவு சும்மாவிருந்து தொலையாமல், தன் மனைவியிடம், "இன்றைக்குப் பசியில்லை; ஆனாலும் இரவில் சும்மா படுக்கக்கூடாது; இராத்திரிக்கு இருபது தோசைமாத்திரம் சுட்டெடுத்துக் கொஞ்சம் எள்ளுப்பொடி செய்து வைத்துவிடு" என்றான். அவள் அப்படியே எள்ளுப்பொடியுடன் இருபது தோசையும் சுட்டுவைத்தாள். நாகப்பன் அவற்றையும் தின்று, பகலில் மீதிப்பட்டிருந்த பாயசத்தில் காற்படி குடித்துவிட்டுப் படுத்துக்கொண்டான்.

சிறிது நேரத்திற்குள் அவனுக்கு வயிற்றுவலி யுண்டாகிவிட்டது; வயிறு மிடாப்பானைபோல் பொருமிக்கொண்டது; அவன் வேதனை சகிக்காமல் கதறினான்; அப்பால் அவனுக்கு அஜீரணபேதியாகத் தொடங்கிவிட்டது. அவன் விடியும் வரையில் படாதபாடெல்லாம் பட்டான். விடிந்தபின் அவன் ஒரு வைத்தியரை அழைத்து அவரிடம் தனக்குண்டான வயிற்று வேதனையைக் கூறினான். அவர் அதற்கு மருந்து கொடுத்தார். அவன் நெடுநாட்களாகப் பெருந்தீனி தின்றுவந்ததால் இரைப்பை கெட்டுவிட்டது. அதனால் அந்த மருந்தினாலும் அப்போ தவனுக் கேற்பட்ட அஜீரண வியாதி நீங்க

வில்லை; நிலையாக அவனிடத்தில் நின்றுவிட்டது. அதன்மேல் அவன் சிறிது ஆகாரமும் உட்கொள்ளமுடியாமல் நாடோறும் வருந்தி முடிவில் அளவற்ற ஆகார ஆவலோடு உயிர்விட்டான்; இவ்வுலகத்தில் ஏற்படும் இன்பத்தை யிழந்து, போலிவிரதம்புரிந்து கடவுளை ஏமாற்றியதால் மறுமையில் நரகத்திற் சேர்ந்தான்.

(தொடரும்.) **செம்பூர். வீ-ஆறுமுகஞ்சேர்வை.**

## சன்மார்க்கத்துக்கேற்ற சற்போதங்கள்.

அன்பை வளர்ப்பவர் இன்பம் பெறுவர்
ஆசை யழித்தவர் ஈசனைச் சேர்வர்
இருமைக்கு மேற்றதைப் பெருமையாய்ப் பேணு
ஈனருக் கீவது தானமா காது
உண்மையில் நிற்பவர் தண்மை யடைவர்
ஊருடன் சேருதல் யாருக்கும் நன்மை
எந்தச் செயலையும் சிந்தித்துச் செய்
ஏற்பவர்க் கீபவர் போற்றப் படுவர்
ஐந்து புலன்வழி சிந்தை விடாதே
ஒற்றுமை நன்மையைப் பெற்றிடச் செய்யும்
ஓரா துரைத்தல் சீரா காது
ஔவிய மகத்தின் அழகைக் கெடுக்கும்
கல்வியின் மேலாம் செல்வமிங் கில்லை
காசினியில் முற்றாய்ப் பாசம்வை யாதே
கிழவரை மதிப்போர் அழகுற வாழ்வர்
கீழோர் கெட்ட வூழினைச் சேர்ப்பர்
குருபணி மறுப்போர் இருநர கெய்துவர்
கூடிப் பிரிதல் கேடு விளைக்கும்
கெட்டவர் கூட்டம் விட்டிட விரும்பு
கேடு புரிந்தால் நாடு பழிக்கும்
கைத்தொழி லெமக்கு மெய்த்துணை புரியும்.

(தொடரும்.) **கா. சின்னப்பா,** யாழ்ப்பாணம்.

## "நல்லுரைத் திரட்டு."

(226-ம் பக்கத்தொடர்ச்சி.)

(151) பெண்ணின்றேல், ஆண்தோன்றுதற்கு வழியில்லை. ஆகவே, பெண்ணை வெறுத்துக் காட்டுக்குச் செல்லுவோர் உண்மைக்கு மாறுபட்டு நடப்பவரேயாவர். (152) இவ்வுலகிலேயே எல்லாமுண்டு. (153) ஓரே பத்திராசிரியரால் முற்றும் வரையப்பெற்றுவரும் பத்திரிகையைவிட, பல அறிஞர்களால் எழுதப்பட்டுவரும் பத்திரிகையே மக்கட்கு நலந்தரவல்லது. என்னை?



ஓர் ஆசிரியர் எத்தகைய பேரறிஞராயிருப்பினும், அவ்வொருவரின் கருத்தே அப்பத்திரிகையில் தோன்றும்; பலவேறு அறிஞர்களின் உளத்தைத் தன்னகத்தே தாங்கிவரும் பத்திரிகையோ அங்ஙனமன்று; பல அறிஞர்களின் கருத்தைத் தன்னுட்கொண்டு மக்களை உய்விக்குமாறு எழுந்த "நவசக்தி," "ஆனந்தபோதினி""லட்சுமி""தமிழர்" முதலிய பத்திரிகைகளைத் தன் மனதாரப் போற்றுதிருக்க இயலவில்லை.(154)வருமுன் காப்போர் அறிஞர்.(155) அந்நியநாட்டுத் துணி அணிவோர் அவமானத்தையும்,டம்பத்தையும், அறியாமையையும் விலைகொடுத்து வாங்குகிறவராகிறார்.(156) கணவன் எத்தகைய துன்மார்க்கனாயிருப்பினும்,மனைவியின் அன்பாலும்,காதலாலும், சாமர்த்தியத்தாலும் அவன் சன்மார்க்கனாகிவிடுவான். (157) நாம் கதருக்காகச் செலவிடும் ஒவ்வொரு பைசாவும், நமது ஏழைச்சகோதரி சகோதரர்களுக்கே கிடைக்கிறது;இஃதுமட்டுமன்று, நமது நன்மதிப்பையும், எளிய-இயற்கையான-இன்ப வாழ்வையும், அறிவையும் பெறுகிறோம். (158) "கதர்"த் துணியை "முரட்டு"த் துணி எனக் கூறுவோரே "மூடர்" என்பது எனது தாழ்மையான கருத்து. இதனால் ஒருகால் பாவமாதல், பிறதீங்காதல் உண்டாமேல் அவற்றை ஏற்றுக்கொள்ள அஞ்சுவேனில்லை. (159) ஒத்தமனம், ஒத்த கல்வி உடைய ஆண், பெண் ஆகிய இவருள்ளத்தினின்று மலரும் "அன்பு" எதுவோ, அதுவே நல்லோரால் சொல்லப்படும் "காதல்" என்பது.

(தொடரும்.) திரு. வீ. மு. பொன்னையா.

# விவசாயப் பகுதி.

(375-ம் பக்கத் தொடர்ச்சி.)

## வரிக் கஷ்டம்.

தற்காலத்தில், நன்செய்ப் பயிர் செய்யும் நிலங்களும், புன்செய்ப் பயிர் செய்யும் நிலங்களும் ஒரு காலத்தில் நம்மை ஆளப்படுபவர்களால் நமக்கு விடப்பட்டவைகளே. அவர்கள், தங்களுடைய சைனிய முதலிய பிரஜைகளைக் காக்கும்படியான செலவுகளுக்காகவும், இதர செலவுகளுக்காகவும், தங்களுடைய நிலங்களை, பிரஜைகளுக்கு இலவசமாகக் கொடுத்து வரி முகாந்தரம் வரும்படியை இராஜாங்கத்தில் உண்டு பண்ணியிருக்கிறார்கள். அத்தகைய நிலங்களுக்குக் கூடியமட்டில் தம்மால் இயன்றவரையில் அவ்வக்காலங்களிலிருந்து ஆட்சி புரிந்தவர்கள் கால்வாய்களும், ஏரிகளும், கணவாய்களும், மடுவுகளும், ஆறுகளும் ஏற்படுத்திக் குடிகளுக்கு உதவி புரிந்தார்கள். அவ்வாறு ஜல ஆதாரம் தேடி வைத்துள்ள நிலங்கள் நன்செய் நிலங்களாயின. அத்தகைய நன்செய் நிலங்களுக்கு, ஆட்சியாளர், ஜல ஆதாரத்துக்கு ஏற்பட்ட செலவுக்குத் தக்கவாறு அதிக வரி ஏற்படுத்தி வசூலித்து வந்தார்கள். ஜல ஆதாரம் தேடி வைக்க முடியாத நிலங்களுக்குப் புன்செய் நிலங்களென்ற பெயராயிற்று. அவற்றிற்கு ஆட்சியாளர் குறைந்த தீர்வையை வசூலித்தும் வந்தார்கள். இப்போதோ ஜல ஆதாரங்களுக்குப் புதிதாகச் செலவு செய்யாவிட்டாலும் புன்செய் நிலங்களுக்கும், நன்செய் நிலங்களுக்கும் 30 வருடங்களுக்கொரு தடவை தற்போது ஆட்சி புரிவோர்கள் நிலங்களின் வளங்களை

அனுசரித்து, ரெவினியூ செட்டில்மெண்டு என்னும் வரி விகிதத்தை ஏற்படுத்தி விடுகின்றார்கள். மேற்படி ரெவின்யூ செட்டில்மெண்டு செய்கின்றவர்களால் நிர்ணயிக்கப்பட்ட வரிப்படி 30 வருஷங்கள் வரையில் அதாவது அடுத்த ரெவின்யூ செட்டில் மெண்டு வரையில் ஒரேபடித்தாய் வரி வசூலிக்கப்பட்டு வருகின்றது. செட்டில்மெண்டு செய்யும் காலத்தில் வளமாய் இருந்த நிலங்கள் சில வருஷங்களுக்குள் கேவல ஸ்திதி அடைந்து ஜல ஆதாரம் குறைந்து, உற்பத்தியும் குறைந்து விட்டபோதிலும் அவற்றிற்கு ஒரு காலத்தில் ஏற்பட்ட ரெவின்யூ செட்டில்மெண்டுப்படி, அடுத்த 30 வது வருஷத்தில் ஏற்படும் செட்டில்மெண்ட் வரையில் ஒரே படித்தாக வரி வசூலிக்கப்படுகின்றது. இது நிற்க ஆட்சியாளர்களால் வரி வசூல் செய்வதற்காக இனுமாகவும், தர்க்காஸ்து மூலமாகவும் குடிகளுக்கு நிலங்களைக் கொடுத்து அவர்களிடம் வரி வசூலித்துக் கொண்டு வருவதில், விவசாயிகள், ஒருவித செலவுமில்லாமல் நிலங்களை அவரவர் பேர்களுக்கு கவர்ன்மெண்டு கிஸ்தியைக் கட்டிச் சுவாதீனப் படுத்திக் கொண்டு குடிவார மேல் வார பாத்தியதையை மாற்றவும், விற்கவும், தானம் செய்யவும் உரிமை யிருக்கும் படி ஆட்சியாளர் சட்டம் விதித்திருப்பதாலும், குடிகள் கிஸ்தி பாத்தியத்தை ஆட்சிபுரிவோருக்கு விட்டு விட்டுக் குடிவார மேல் வார பாத்தியதையை தஸ்தாவேஜு மூலமாக விற்கிரயம் செய்யச் சட்டம் இருந்து வருவதாலும் நாளடைவில் குடிகளின் பரபரப்புக் கேற்றவாறு அவ்வவ்வூர்களில் நிலங்களைக் கிரயம் வாங்குதல் அதிகப்பட்டு இலவசமாகக் கிடைத்த நிலங்களுக்குத் தற்காலத்தில் குடிவார மேல்வார பாத்தியதைக்காக ஏக்கர் ஒன்றுக்கு 1000, 2000 ரூபாய் கொடுத்து வாங்கும் வழக்கம் ஏற்பட்டு விட்டது. இப்படி வாங்குகிறவர்கள் தம்மால் சம்பாதிக்கப்பட்ட பொருள்கள் யாவையும் சேகரித்து நிலத்திற்குக் கொடுத்துத் தங்களுக்கும் தங்கள் சந்ததிக்கும் சாஸ்வத ஜீவனத்திற்காக அந்த நிலங்களின் குடிவார மேல் வார பாத்தியதையை வாங்கி அதன் மூலிய வரும்படியைக் கொண்டு ஜீவனம் செய்து வருவதால், எத்தகைய கஷ்டங்கள் நேர்ந்தாலும், எத்தகைய வரி விகிதங்கள் ஏற்படினும், ஏற்பட்டிருந்தாலும் வரி கொடா இயக்கத்தைச் சாதிக்க வல்லமை யற்றவர்களாய் இருக்கின்றார்கள். சாகுபடி குறைந்து மழையில்லாமலும், தக்கபடி ஏரியில் ஜலமில்லாமலும், 2 மாதம் 3 மாதம் ஜல ஆதாரங்களைக் கொண்டு பயிர் செய்து கதிர் வரும் சமயம் ஜலத்தட்டினால் அப்பயிர்கள் சாவியாய் விடுவதற்கும், ஒரு அணா இரண்டணா பலிதங்களுக்கும் வரிவஜா கேட்பதைத் தவிர வேறு வழியின்றித் தவிக்கும் அந்த விவசாயிகளுக்கு, கலெக்டர் அவர்கள் ரெவின்யூ செட்டில்மெண்டுக்கு மாறுதலாயும், ஒரு அணா இரண்டணா பலிதங்களுக்கு வரிவஜா கிடையாது என்ற சட்டத்துக்கு மாறுதலாயும் ஒன்றும் செய்ய இயலாதவர்களாய், ஜமாபந்தியில் பார்ப்பதாய்ச் சமாதானங் கூறிவிட்டு, ஜில்லாவில் வரி வசூலிக்கும் தொகை குறையும் பட்சத்தில் இராஜாங்கத்தாரால் காரணம் கேட்கப்படும் என்னும் பீதியால் வரிவஜா செய்யாமல் ஏதோ சில காரணங்களைச் சொல்லி அவர்களால் வரி வசூலித்து வரப்படுகின்றது. ஆகையால் ரெவினியூ செட்டில்மெண்டு 30 வருஷத்திற்கு ஒரு முறை என்றிருப்பதைத் திருத்திக் குறைந்தது 5 வருஷத்திற்கு ஒரு தரம் செட்டில் மெண்டு அமைக்க வேண்டுமெனத் தற்கால ராஜாங்க கௌன்சிலர்கள் சட்ட சபையில் கிளர்ச்சி செய்து தீர்மானித்தல் வேண்டும். ஒரு கால் இராஜாங்கத்தார் ரெவினியூ செட்டில்மெண்டுக்கு அதிக செலவுகள் ஏற்படும் என்று ஆக்ஷேபிக்கும் பக்ஷத்தில், ஒவ்வொரு ஜில்லாக்களிலும் கர்ணம், முன்சீப்,



தாசில்தார் இவர்களோடு ஊர் ஜனங்களையும் அனுசரித்து ஊரார்களில் இலவச பஞ்சாயத்தார்களை நேமித்து அவர்களைக் கொண்டு குறைந்த செலவுகளில் செட்டில்மெண்டு செய்து விடலாம் என்று அதற்குப் பதிலளிக்க வேண்டும்.

ஒரு அணா இரண்டணா பலிதங்களுக்கு வரிவஜா கிடையாது என்ற சட்டத்தைமாற்றி ஒரு அணா இரண்டணாபலிதங்களுக்கு வரி வசூலித்தல் ஆகாது என்னும் சட்டத்தை நிர்ணயிப்பதும் அன்றி, இரண்டணாமுதல் எட்டணா பலிதம் வரையில் விளையும் நிலங்களுக்கும் வரி வஜா செய்தல் வேண்டும் என்னும் சட்டத்தை ஏற்படுத்துதல் வேண்டும். அதிகப் பொருள் கொடுத்து நிலங்களின் மேல்வார குடிவார பாத்தியதையை வாங்கிய விவசாயிகளின் நிலைமையை விசாரிக்கப்புகின் அது கவலைக்கிடமுள்ளதாயிருக்கும். சுமார் 2000 ரூபாய் கொடுத்துக் கிரயம் வாங்கப்பட்ட ஒரு ஏக்கர் நிலத்தில் குடிவார பாத்தியதையைப் பயிர் செய்வோர்களுக்கு விட்டு விட்டு மேல்வார பாத்தியதையை அடையும் நிலச் சொந்தக்காரர்களுக்கும், குடிவார பாத்தியதையை அடையும் பயிரிடுபவருக்கும் உள்ள கஷ்டங்களும், அவற்றின் நிவர்த்தியும் பின்வரும் சஞ்சிகையில் என் அறிவிற்கு எட்டிய அளவு எழுதப்படும்.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்.

## வைத்தியப் பகுதி.

### வைத்தியக் குறிப்பு.

(872-ம் பக்கத் தொடர்ச்சி.)

முன் சொன்ன சிற்றாமணக்கெண்ணெயைப்பற்றிச் சிறிது கூறுவாம்.

தற்காலத்தில் பலர் மிஷின்களினால் செய்யப்பட்ட விளக்கெண்ணெயில், வீசைக்கு $\frac{1}{8}$ படி விகிதம் சுத்தஜலத்தைச் சேர்த்து அவ்வாறு சேர்க்கப்பட்ட ஜலம் சுண்டும் வரையில் அதைக் காய்ச்சுகிறார்கள்; இப்படி இரண்டு மூன்று தரம் காய்ச்சினபிறகு அந்த எண்ணெய் தெளிவாகவும், வெண்ணிறமாகவும் மாறுகிறது. பிறகு அதைப் போத்தல்களில் அடைத்துக் கார்க்கிட்டுச் சீல் செய்து, லேபில் ஒட்டி (காஸ்டார் ஆயில்) அல்லது விளக்கெண்ணெய் என்று கடைகளில் விற்கிறார்கள். இதனையே சகலரும் குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் உட்கொள்ளக் கொடுக்கிறார்கள். வைத்தியர்களாலும், மற்றவர்களாலும் செய்யப்படும் வாய்வு எண்ணெய் குளிர்ச்சி எண்ணெய் முதலிய பலவித எண்ணெய்களுக்கும் மேற்சொன்ன எண்ணெயே உபயோகித்து வரப்படுகின்றது. முற்காலங்களில் உள்ளவர்கள் மேற்சொன்னமாதிரியில் செய்யும் விளக்கெண்ணெயை உபயோகித்தால் உஷ்ணம் அதிகரிக்கும் என்று கருதி, விளக்கு எரித்தல் முதலியவைகளுக்குச் செக்கினாலும் மிஷினாலும் செய்யப்பட்ட விளக்கெண்ணெயைக் கையாண்டும், உள்ளுக்குச் சாப்பிடுவதற்கும் மருந்துகள் செய்வதற்கும் வேறுவிதமாகச்செய்யப்பட்ட விளக்கெண்ணெயை உபயோகித்தும் வந்தார்கள். அதை எப்படிச்செய்து உபயோகித்தார்களெனின், பெரிய முத்துக்கொட்டைகளை நீக்கிச் சிறிய ஆமணக்குக் கொட்டைகளைப் பொறுக்கி எடுத்து உரலில் போட்டு தோசைமா ருப்புவதைப்போல் ஆட்டி அதில் சுமார் 2-படி கொட்டைக்கு 12-படி வீதம் ஜலம் விட்டு அதைக்கலக்கி ஒரு பெரிய பானையில்விட்டு மூன்றுநாள்முதல் ஏழு

நாள் பரியந்தம் புளிக்கவைத்துப் பின் அடுப்பில் ஏற்றி ஜலத்தில் உஷ்ணம் ஏறும்படி நெருப்பைமூட்டிச் சிறு தீயாக எரிப்பார்கள். அப்போது ஆமணக்கின் எண்ணெய் வெளிப்பட்டு ஜலத்தின்மேல் மிதக்கும். அதைக் கையால் வழித்துக் கோப்பைகளில் சேர்த்துச் சூரியபுடத்தில் ஜலம் சுண்டும்வரையில் வைத்துப் பழயகுடுவைகளிலாவது அல்லது போத்தல்களிலாவது அடைத்து வைத்துக்கொள்வார்கள். முன்னோர் இதனை ஊற்றின சிற்றாமணக்கெண்ணெய் என்று உபயோகப்படுத்தி வந்தார்கள். இத்தகைய எண்ணெய் சரீரத்திற்கு எக்காரணத்தாலும் உஷ்ணத்தை உண்டுபண்ணாது. இதற்கு மாறாய்ச் சரீரத்திற்குக் குளிர்ச்சியையும், சரீரபுஷ்டியையும் தந்து, உஷ்ண சம்பந்தமான வியாதிகளை நிவிர்த்திசெய்யும். முன் சஞ்சிகையில், முன்னோர் கணச்சூடு உள்ளவர்களுக்கு விளக்கெண்ணெயில் பேயம்பழத்தைத் துண்டுகளாகச் செய்துபோட்டுச் சூரியபுடத்தில் வைத்து உபயோகப்படுத்தி வந்தார்கள் என்று நாம் சொல்லியது நண்பர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அதற்கு அவர்கள் பின்னால் சொல்லிய முறைப்படி செய்த எண்ணெயையே உபயோகப்படுத்திவந்தார்கள். ஆதலால், இதைக் கண்ணுறும் சகலரும் வைத்திய முறைகளுக்குப் பின் சொல்லிய விளக்கெண்ணெயையே உபயோகிக்குமாறு வேண்டுகிறோம்.

டாக்டர். மே. மாசிலாமணி முதலியார்.

---

## தேனின் உண்மைக் குணங்கள்.

அன்பர்களே! கடந்த தை மாத ஆனந்தபோதினி சஞ்சிகையின் 320-ம் பக்கத்தில் "N. A" என்று கைச்சாத்திட்ட நண்பர் ஒருவரால் வரைந்துள்ள "தேனில் தேகாரோக்கியம்" என்ற கட்டுரையைப் பார்வையிட்டேன். அது தமிழ் அல்லாத வேறு எந்த மொழியிலிருந்தோ மொழிபெயர்க்கப்பட்டிருக்கவேண்டும் என்பதும், அதிற் கூறப்பட்டிருப்பவை புறநாட்டார் அபிப்பிராயங்கள் என்பதும் எனக்கு விளங்குகின்றன. ஏனெனில் நம் தமிழ் நாட்டுப் பெரியோர்களின் மூலமாவது, தமிழ் வைத்திய நூல்களிலாவது கண்டும் கேட்டுமிராத சில விஷயங்கள் அக்கட்டுரையிற் காணப்படுகின்றன. அவை நம் நாட்டினர்க்குப் பொருந்தாதனவும், நலந்தாராதனவுமாம். ஆதலின், முதலில் அதிலுள்ள சில வாக்கியங்களையே திருத்திக் கூறிவிட்டுப் பிறகு தேனில் அமைந்த உண்மைக்குணங்களிற் சிலவற்றைக் கூறுவோம்.

(1) தேன், கூட்டிலிருந்து எடுத்தபடியே பருகுவதற்கு முற்றிலும் யோக்கியமானதல்ல. (2) வேறு அசுத்தசத்தின் கலப்பும் அதில் சிறிது உண்டு. (3) அதைச் சுத்திசெய்யவேண்டியது அவசியம். (4) ஜீரணசக்திக்கு தனித்த தேன்மட்டும் போதுமானதல்ல. (5) தேன் மலத்தைச் சரிவர வெளிப்படுத்தாமல் பந்தனப்படுத்திவிடும். (6) ஆதலால் இது சிறுவர்களின் ஆகாரத்திற்குச் சிறிதும் உபயோகமற்றது. (7) அதனாலேயே நம் பெரியோர்கள் சிறுவர்களின் ஆகாரத்தில் தேனை ஒதுக்கிவைத்திருக்கிறார்கள். இவ்வேழு உண்மைகளையும் நமது நாட்டுத் தமிழ்வைத்தியர்களும், ஒப்புக்கொண்டுள்ளார்கள். இதற்கு ஆதாரம் சித்தவைத்திய நூல்களிற் காணலாம்.

### தேனின் சில உயரிய குணங்கள்.

(1) உடனே கறந்ததும், தண்ணீர்க் கலப்பில்லாததுமான அரைக்காற்படி பசும்பாலை மெல்லியதுணியால் வடிகட்டி எடுத்து அதில் வீசம்படி



சுத்திசெய்யப்பட்ட தேனைக் கலந்து காலைநேரத்திற் சாப்பிட்டுவந்தால், நல்ல தாது விர்த்தி உண்டு.

(2) இஞ்சியைத் தோல்போக்கி, நசுக்கிச் சாறுபிழிந்து, அந்தச் சாற்றைச் சற்றுநேரம் வைத்திருந்தால் அதில் உள்ள சுண்ணாம்புபோன்ற ஒருவித இஞ்சிச்சத்து கீழேதங்கிவிடும். அதை நீக்கிச் சாற்றைமட்டும் மெல்லிய துணியில் வடிகட்டி அதில் ($\frac{1}{2}$) அரை அவுன்ஸ் எடுத்து அச்சாற்றில் $\frac{1}{2}$ அவுன்ஸ் சுத்திசெய்யப்பட்ட தேனைக்கலந்து காலைநேரங்களில் தொடர்ச்சியாகச் சாப்பிடுவதினால், ஜீரணசக்தியும், இரத்தசுத்தியும், இரத்தவிர்த்தியும், நரம்புவலுவும் தீவிரமாக ஏற்படும்.

(3) வாதரோகங்கள் ஆரம்பதிசையில் இருக்குமானால் இரண்டாவது லக்கத்திற் குறிப்பிட்ட அதேமுறையால் குணமாகும். அவ்வாறு சில குணங்களை அநுபவமாய்க் கண்டிருக்கின்றோம்.

(4) சரீரத்தில் எந்தப் பாகத்திலேனும் நெருப்பினால் ஏற்பட்ட இரணங்களில் உடனே கலப்பில்லாத சுத்தமான தேனைத்தடவி வருவதால், அவற்றில் தழும்பு உண்டாகாமலும், நீர்க்கொள்ளாமலும் அவை ஆறிவிடும்.

5. தேனைத் தனியாகவாவது, சுத்திசெய்யாமலாவது உட்கொண்டால் அது கண்டிப்பாய் மலத்தைக்கட்டும். முக்கியமாகக் குழந்தைகளுக்குத் தனியாகவாவது, வேறு பதார்த்தங்களுடனாவது தேனைக் கொடுத்தல் கூடாது.

6. மலக்கட்டுப்பரிகாரம்:—தேனைச் சாப்பிடுவதினால் ஏற்படுகிற மலக்கட்டுகளுக்கு உடனே சுத்தமான தண்ணீரை அரைக்காற்படி யளவுக்குக் குறையாமல் உட்கொள்வதால், அது மலத்தைப் பிரித்து வெளிப்படுத்திவிடும்.

7. தேனை சுத்திசெய்யும்விதம்:—மண்பாத்திரம் அல்லது பீங்கான் கோப்பை (பித்தளைப் பாத்திரங்கள் முதலியன ஆகா) யில் தேனை ஊற்றி மெல்லிய துணியால் அதன்மேல் மூடிக்கட்டி, அதை நல்ல வெயிலில் காய வைத்து. எடுத்துப்பார்த்தால், மேலே நுரை உண்டாயிருக்கும். அதை வழித்து எடுத்துவிட்டால், தேன் சுத்திசெய்யப்பட்டதாகும்.

இன்னும் தேனினால் ஏற்படுகிற சில தீங்குகளும், அதன் உயரிய குணங்களும் பல உண்டு. அவைகளை அங்கங்கே உள்ள நம் தமிழ் வைத்தியர்களாகிய அறிஞர்களைக்கொண்டு நேரில் அறிந்துகொள்ளலாம். நாம் கூறியபடி "தேனில் தேகாரோக்கியம்" என்ற கட்டுரை மேல்நாட்டார் ஒருவரின் கட்டுரை மொழிபெயர்ப்பாயிருக்குமானால், நம் நாட்டுவைத்தியமும், நம் பெரியோர்கள் மூளையைச் செலவழித்து அவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட அபாரமான உண்மைகளும் இக்காலத்தில் அன்னியரால் எவ்வாறு சீரழிக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தமிழ்மக்கள் உணர்ந்துகொள்ளலாம்.

கி. ஆ. பெ. விசுவநாதபிள்ளை, திருச்சிராப்பள்ளி.

---

## அறிஞரின் அமுதமொழிகள்.

(377-ம் பக்கத் தொடர்ச்சி.)

55 Many are the names of God and infinite the forms through which He may be approached. In whatever name and form you worship Him, through it He will be realised by you *Sri Ramakrishna.*

ஈசுவரனுக்கு அநேக நாமங்களும் எண்ணிறந்த உருவங்களுமுண்டு. நீ எந்த நாமத்தோடும் உருவத்தோடும் அவரை உபாசிக்கிறாயோ அவ்வாறே யவர் உனக்குக் காட்சி யளிக்கிறார். (ஸ்ரீ ராமகிருஷ்ணர்)

56 Talk of fame, honour, pleasure, wealth: all are dirt compared with affection *Charles Darwin.*

புகழ்ச்சி, கௌரவம், சந்தோஷம், ஐஸ்வரியம் ஆகியவைகளைப் பற்றி எவ்வளவு வேண்டுமானாலும் (புகழ்ந்து) பேசலாம். ஆனால் இவைகளை "அன்பு" என்பதோடு ஒத்திட்டுப் பார்த்தால் இவையாவும் துரும்புக்குச் சமானமாய்ப் போய்விடும். (சார்லஸ் டார்வின்)

57 There is nothing in the world gives as much pleasure as poetry—except little children *John Bright.*

குழந்தைகளின் மழலைச்சொற்கள் தவிர மற்றவையாவும் உலகத்தில் பாடல்போல் அவ்வளவு இன்பம் பயக்கக்கூடியனவல்ல. (ஜான் பிரைட்)

58 Think all you speak, but speak not all you think (*Delarme.*)

நீ பேசப்போகும் எல்லாவற்றையும் நன்றாய் யோசி. ஆனால் யோசிப்பதையெல்லாம் பேசிவிடாதே. (டெலார்மி)

59 We know what we are, but know not what we may be (*Shakespeare* )

நாம் எத்தன்மையா யிருக்கிறோம் என்பதை அறிவோம்; ஆனால் நாம் எப்படி யாவோம் என்பதை யறியோம். (ஷேக்ஸ்பியர்)

60 There is no treasure the which may be compared unto a faithful friend (*Roxburghe Ballade.*)

உண்மையுள்ள நேசனுக்கு ஒப்பிடத்தக்க பொக்கிஷமே கிடையாது. (ராக்ஸ்பர்க் பல்லேட்)

61 Art is long, time is short (*Tennyson.*)

கல்வியோ அதிகம்; (கற்கும்) காலமோ கொஞ்சம். (கல்விகரையில கற்பவர் நாள்சில.) (டென்னிஸன்)

62 Idleness is the holiday of fools (*Chesterfield* )

சோம்பேறித்தனமே மூடர்களின் ஓய்வுநாள். (செஸ்டர்பீல்ட்)

63
Oh, it's excellent
To have a giants strength ; but it is tyrannous
To use it like a giant (*Shakespeare.*)

(நமக்கு) ராக்ஷஸபலம் இருப்பது நல்லது. ஆனால் அதை ராக்ஷதனைப்போல் உபயோகிப்பது கொடியது. (ஷேக்ஸ்பியர்)

(தொடரும்.)

A. P. இராமன், B. A.



## கைத்தொழிற்பகுதி.

(369ம் பக்கத் தொடர்ச்சி.)

### தோல் பதனிடுதல்.

மிருகத்தின் தோலை அதனிடத்துப் பொருந்தியிருக்கும் ரோமங்களையும் மாமிசம் போன்றவற்றையும் நீக்கிப் பதனிடும் சாமான்கள் (Chemicals) நிறைந்த தொட்டியிலிட்டு வைக்கின்றனர். அதில் எட்டிப்பட்டை (Chestnut) என்னும் விஷமூலிகை ரசம் (Quebracho) மாம்பட்டை (Mango-bark) முதலான கந்தமூலச் சரக்குகளே கலக்கப்படுகின்றன. இத்தகைய சாமான்களின் சக்தியால் தோல் மிருதுவாகி வளைக்கவும் மடக்கவும் கூடியதாகின்றது. கந்தமூலங்களைக்கொண்டு பதனிடும் இம்முறையானது பாதரக்ஷைபோன்ற உபயோகங்களுக்கு மிகவும் இன்றியமையாததாகும். ஆனால் மேற்கூறிய வழியில் பதனிடும் முறை சிறிது காலதாமதத்தை விளைவிக்கின்றது. குரோம் (Chrome) என்ற ஒருவிதத்தோல் பதனிடும் முறையிலோ முற்றிலும் ரசாயன சம்பந்தமான திராவகங்களே உபயோகப்படுத்தப்பட்டு, பட்டை வேர் முதலானவற்றை உபயோகப்படுத்தும் முறையைப்போலல்லாது வெகுசீக்கிரத்தில் அது வெட்டவும் நீட்டவும் சாதகமாகச் செய்யப்படுகின்றது. வெண்ணிறமான தோல்வகைகளைப் படிக்காரத்தைக் கொண்டும் பதனிடலாம். மிருகங்களின் கொழுப்பு, மூளை, எண்ணெய் முதலானவற்றைக்கொண்டு ஆடுமாடுபோன்ற மிருகங்களின் தோலைப் பாடஞ்செய்கின்றனர். பசையுள்ள கொழுப்பு, மிருகங்களின் சதையினின் றெடுக்கப்படும் எண்ணெய் முதலானவைகளால் தோலைப்பதனிடுதலுமுண்டு. மலைகளிலெதேச்சையாகத்திரியும் மாடு, ஆடுகளின் தோலைப்பதனிடவே இம்முறை சாதகமாம். சமீபத்தில் மிகவும் துரிதமாகவும் காலந்தாழ்க்காமலும் தோற்பாடஞ் செய்ய மின்சார உதவியால் ஓர் முறை கண்டுபிடிக்கப்பட்டது. அதாவது சாராயம் நிறைந்த தொட்டியில் தோலையிட்டு மின்சாரசக்தியை அத்திராவகத்திற் பரவச்செய்யத் தோலானது வதங்கி நிமிஷக்கணக்கான நேரத்தில் பதனிடுவதாம். (இண்டஸ்டிரி).

### சாயத் தொழில்.

சாயவேலை ஆடைகளை உற்பத்திசெய்யும் அவசியக் கைத்தொழிலின் ஓர் பிரிவாகும். உள்நாட்டி லிச்சாயவேலை எண்ணிக் கூறவியலாத காலந்தொட்டு நிலவியிருக்கின்றது. தேசத்தில் நாகரீகம் பெருகப் பெருக இக்கைத்தொழிலும் விருத்தியடைந்து வருகின்றது. சாயமேற்றக்கூடிய பலவித வர்ணசத்துள்ள செடிகொடிகளைமட்டுங்கொண்டு இக்கைத்தொழில் நடைபெறுவதாயின் இதன் அபிவிருத்தியும் தொழிற்றிறமும் சீக்கிரத்தில் மேன்மையை யடையவியலாது. ஆடையில் நிறம் பற்றக்கூடிய வகையில் உபயோகமான செடி கொடிகளிலுள்ள சாயத்தைச் சாறுக்கி அதில் ஆடைகளை நனைத்துவிடுதல் சாயவேலையின் சாதாரண அம்சமாகும். ஆனால் சாயம் விடாத நீலி (Indigo) செந்திருக்கம்பூ (Safflower) ஆகிய இரண்டைத் தவிர மற்ற உறுதியான வர்ணமுள்ள தாவரங்கள் நம்நாட்டில் அநேகமாக

இல்லை. இவ்விரண்டு நிறங்களுங்கூட நூலாடைகளுக்கு உபயோகப்படுத்தப்படின் நீண்டகாலம் நீடித்திருப்பதில்லை.

நூலாடைகளை மக்களால் பெரும்பாலும் அணியப்படுவதாலும், அவற்றில் சாயம் ஸ்திரமாக நில்லாது அழிந்துவிடுவதாலும் அத்தொழிலாளிகள் தம் கைத்தொழிலை விருத்திசெய்யப் புதிய முறைகளையும், வழிகளையும் தொழிற் பழக்கத்தா லாராய்ச்சிசெய்து கண்டுபிடிக்க முற்பட்டனர். இவ்வாராய்ச்சியின் வாயிலாக உறுதியான நிறங்களையுடைய பலசாய வஸ்துக்கள் கண்டு பிடிக்கப்பட்டன. அவற்றில் இரண்டொன்றைத் தவிர மற்றவை பலவிதமான பஸ்மங்களிற் காணப்படுகின்றன. நிறத்தைத்தாத்தக்க சக்தி அவற்றில் கலந்திருக்கும்விதம் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது. சாயம் திடமாகப் பற்றக்கூடிய வர்ணவஸ்துக்கள் அலுமினியம், தகரம் (Tin) இரும்பு முதலான உலோக பற்பங் (தூள்) களில் பெரும்பாலும் அதிகம். இவற்றின் தூள்களில் காணப்படும் வர்ணவஸ்துக்கள் சில திராவகமாக்கக்கூடியனவாயும் சில வியலாதனவாகவு மிருக்கின்றன. திராவகமாக்க முடியாதவற்றை மாற்றுச் சேர்த்துத் திராவகமாக்குவதும் வழக்கம். இவ்விதமுறையில் சிற்சில சாதகங்களைக்கொண்டு அழகாகப் பலவிதமான வர்ணங்களை ஆடைகளில் விருத்திசெய்யலாம். உதாரணமாக ஒரேநிறத்தை ஒரே ஆடையின் ஒருபாகத்திற் சிறிது அதிகமாகவும் மற்றொருபாகத்தில் இலேசாகவும் அல்லது பூராவும் பிடிக்கச் செய்யலாம். இம்முறையில் ஆடைக்குச் சாயத்தைமட்டுமல்லாது ஒருவித பளபளப்பையும் அளிக்க இயலும். இவ்வித பளபளப்பைத் தருதலே உலோகங்களி னியற்கை. நூல்களுக்குச் சாயமேற்றும் முறை அதிக ஜாக்கிரதையாக அனுசரிக்கப்படவேண்டும். பட்டையினின்றும் எடுத்த சாய உப்பு (Bichromate of Potash) படிக்காரம், ஆக்சாலிக்ஆசிட் (Oxalic acid) (ஒரு திராவகம்) முதலானவை கலந்து உபயோகமாகும் முறையால் உரோம ஆடைகளுக்கு (Wool)ச் சாயம் வெகு நேர்த்தியாகக் கொடுக்கப்படும். மயிற்றுத்தத்தைக் (Sulphate of Copper) கொண்டு பஞ்சாலான ஆடைகளுக்குக் கருப்புநிறம் பெரிதும் கொடுக்கப்படும்.

(தொடரும்.) ஸ்ரீதான், திரிசிரபுரம்.

---

## ஆனந்தபோதினி 11-ம் தொகுதி புரட்டாசிமீ வெளியான வேண்டுகோளுக்கு விடை.

### அநுபவ ஆசிரியர் என்பதின் பொருள்:—

தொழில் செய்வோர் தங்கள் தங்கள் தொழிலில் நன்றாய்ப் பயின்றிருக்கவேண்டும். அவரவர் அனுதினமும் செய்து வருகிற தொழிலின் காரண காரிய தாற்பரியங்களை யதார்த்தமாய் யூகித்து அறியக்கூடிய சக்தி உள்ளவர்களே அநுபவ ஆசிரியராவர்.

### அநுபவ ஆசிரியர்களுக்கு அதிகசம்பளம் கொடுப்பது:—

ஒரு தொழிலில் ஒருவர் பிரவேசித்தவுடன் அதில் நேரிடும் கஷ்டம் சுகம் இரண்டையும் சமமாகப்பாவித்து நடக்கவேண்டுமல்லவா? அதைப் போல்தான் உபாத்தியாயர் தொழிலிலும் நடக்கவேண்டும். இத்தொழிலிலும் பல கஷ்டங்கள் உண்டு. சிறு பயிர்களாகிய சிறுவர்களை முன்னுக்குக் கொண்டுவருவதற்குத் தங்களுடைய கஷ்டத்தையும் பாராட்டாமல், அவர்கள் விர்த்தியாகும் பொருட்டு, அவர்களுக்குக் கல்வி கற்பித்துக்கொடுக்கும்



நன்மைக்காக, அத்தகைய குழந்தைகளுடன் தாமும் ஒரு குழந்தையாகப் பாவனைசெய்துகொண்டும், ஒவ்வொரு குழந்தைகளுடைய நோக்கத்தை அறிந்துகொண்டும், அவர்களுக்காகப் பாடுபடும் கஷ்டத்தை உத்தேசித்துத் தான் அநுபவ ஆசிரியர்கட்கு சம்பளம் அதிகமாகக் கொடுக்கவேண்டும்.

இந்த ஆசிரியர்களுக்குத் தகுந்த சம்பளம் கொடுத்துத் திருப்திசெய்து அவர்கள் உபாத்திமைத் தொழிலில் கண்ணும் கருத்துமாக இருந்து பிள்ளைகளின் மேன்மையைக் கோரும்படி செய்வதால், நம் நாட்டுக் கல்வி முன்னிருந்த நல்ல நிலைமைக்குவர முன்னேற்றத்தை யடையக்கூடும்.

### மூலாதாரக் கல்வியில் முதல் வகுப்புச் சிறுவர்களுக்குப் போதிக்கும் ஆசிரியர்கள்:—

எந்த உபாத்தியாயனும் தான் கற்பிக்கும் அளவிற்கு மிகவும் அதிகமாகப் பல நூல்களையும் நன்குணர்ந்திருந்தாலொழிய, ஒருவிஷயத்தையாவது சரியாக வியாக்கியானம் பண்ணமாட்டான். பல நூல்களை நன்கு கற்பதனால் வரும் அறிவை ஒருவாரத்திலாவது மாசத்திலாவது வருஷத்திலாவது அடையமுடியாது. அவ்வறிவை அடைவதற்கு நன்றாய் உழைக்கவேண்டும்; பலகால் சிந்தித்து ஐயம் திரிபின்றித் தெளியவேண்டும். அப்படிச் செய்பவனுடைய அறிவு இயற்கையறிவுபோல் அத்தனை தெளிவும், உறுதியும் பெறும். அறிவு முதலில் ஆழ்ந்து அப்புறம் விரிதல்வேண்டும். எவ்வளவு நூல்களைக் கற்றாலும் உத்தமந்தான் என்றாலும் கற்கும் எந்த நூலையும் நன்றாய்க் கற்கவேண்டும். உபாத்தியாயன் மேலு மேலும் வாசித்துத் தன் அறிவை அபிவிர்த்தியாக்க முயலவேண்டும். ஊற்றில்லாக் கிணற்றுநீர் சீக்கிரம் வற்றுவதுபோல், அறிவின் விர்த்தியை எண்ணாத உபாத்தியாயனுடைய அறிவும் ஒழிந்துபோம். அவன் தன் தொழிலுக்கு உபயோகமானவைகளைத் தெரிந்து வாசிக்கவேண்டும். தன் தொழிலில் சிந்தைவைக்கும் உபாத்தியாயன், தான் கற்பிப்பதை உணர்த்துவதற்கு ஏதுவான விஷயங்கள் அனைத்தையும் தன் மனக்களஞ்சியத்தில் வைத்து, அப்போதைக்கப்போது காரியத்திற்கு ஏற்ப வெளிப்படுத்திப் பயன்படுத்துவான். ஒருவன் இரண்டு மூன்று நூல்களை நன்றாய்க் கற்றால், அவற்றின் விஷயங்களுக்கு உண்டாயிருக்கும் பேதாபேதங்களைக் கண்டு உணர்ந்து, தான் கற்றவைகள் எல்லாவற்றையும் பயன்படச் செய்வான்.

கல்விப்பொருளை மாணாக்கருக்குத் தெளிவாகப் போதிக்கும் சாமர்த்தியம் விசேஷமானதாகையால், அதை அடையும்படி ஆசிரியன் விசேஷ முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். கற்பதினால் வருவது கல்வி; அக்கல்வியைப் பிறர்க்குக் கற்பித்தாலொழியக் கற்பிக்கும் சாமர்த்தியம் ஆசிரியனுக்கு உண்டாகாது. ஒருவன் இருபதுவருட காலமட்டும் கற்பிக்கும் வகையைத் தெரிவிக்கும் நூல்களை வாசித்தாலுமென்ன? பிரசங்கங்களைக் கேட்டாலு மென்ன? அவன் கற்பிக்கத்தொடங்கி நெடுநாள் அநுபவப்பட்டாலொழியப் போதனாசக்தியை அடையான். போதனாசக்திக்கு ஏற்ற குணம் ஒருவனுக்கு இயற்கையாய் இல்லாவிட்டால், அவன் உபாத்திமைத் தொழில் நடத்தும் திராணியுடையவனாகமாட்டானென்று எண்ணுவோர் சிலர் உண்டு. ஒருவன் ஒன்றைச் செய்யத் தீர்மானித்து அப்பியசிப்பதினால் அடையும் தேர்ச்சியை அவர்கள் அறியார் போலும். "ஆசை உண்டானால் வகையும் உண்டாம்" என்கிற சாதாரண பழமொழி தவறுமோ? ஒருவன் செய்யத்தக்க ஒன்றைத் தீர்மானித்துத் திடசித்தத்துடன் செய்வானாகில் பயனடைவான். சிறுவரைப்போன்ற குணசிந்தனை, யௌவன

லம், கற்பிக்கும் பொருளை எளிதில் விளக்கும் திராணி, வாக்கு வல்லபம் முதலான குணங்களை உடையவர்கள் சிலர் உண்டு. இவர்கள் மற்றவர்களைப் பார்க்கிலும் அதிக சாமர்த்தியமாய்க் கல்வி கற்பிப்பார்கள். ஆனாலும், தாங்கள் கண்டு கேட்டறிந்திருக்கும் முறைகளைப் புத்திபூர்வமாய் உபயோகித்து, பிறர் கண்டு கேட்டு எழுதிய சங்கதிகளை வாசித்து, தங்கள் செய்கைக்கும் அவர்கள் செய்கைக்கும் உள்ள தாரதம்மியத்தை நன்றாய்ப்பார்த்து, அவர்கள் விதித்த பிரமாணங்களைக் கைக்கொண்டு, குற்றம் களைந்து இவ்வாறு தங்கள் தொழிலைச்செய்து அது நிறைவேறும்படி முயன்றால் சித்தி பெறலாகும். சிறுவனுடைய உள்ளத்தில் புகுந்து, அவன் யூகிப்பவைகளைக் கண்டு, அவன் சொல்லும் உத்தரம் தப்பானால் அது தப்பாவதற்கு ஏது என்னவென்றும், தப்பாய் இருக்கும் எண்ணம் என்னவென்றும் அவன் மனத்தில் கொண்ட இணங்காத பொருத்தம் என்னவென்றும் நிதானித்தறியும் சாமர்த்திய திறமையுள்ள உபாத்தியாயர்களையே மூலாதாரக் கல்வியில் முதல் வகுப்புச் சிறுவர்களுக்குப் போதிக்க வைக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் எங்கும் நிறைந்த கருணாமூர்த்தி அருள்புரிவாராக.

என். கோவிந்தராவ், பெங்களூர் தண்டு.

---

## நடுவெழுத்து வினாவிடை.

தைமீ ஆனந்தபோதினி 334-ம் பக்கத்தில் வெளியிடப்பட்டிருந்த வினாவிற்கு, அதைப் பிரசுரித்தவர் குறிப்பிட்ட விடைப் பெயர்கள்,

1. முதலை.
2. தினம்.
3. மஞ்ஞை.
4. பூசம்.
5. ஈயம்.
6. கன்னி.

என்பனவாம். இவற்றின் நடு வெழுத்துக்களைச் சேர்க்க 'தனஞ்சயன்' என்னும் அக்கினிதேவனுடைய பெயர் அமையும். இவ்வாறே மார்ச்சுமீ 5உ வரை 231-பேர்கள் சரியான விடையெழுதி யனுப்பி யிருக்கிறார்கள். 31 - பேர்கள் உலோகங்களில் ஒன்றின் பெயர்மட்டும் வேறாக அயமென்று எழுதி யிருக்கிறார்கள். அது வினாக்காரர் குறிப்பிட்டதாயில்லாவிடினும் உலோகங்களில் ஒன்றின்பெயராயும், நடுவெழுத்து எடுக்கப் பொருத்தமானதாயு மிருப்பதால் அப்பெயரைக் குறிப்பிட்டெழுதினவர்களுடைய விடைகளும் சரியான விடைகளாகவே மற்ற சரியான விடைகளோடு சேர்த்துக்கொள்ளப்பட்டன. இவ்விருவகைகளிலும் உள்ளவர்க்கு நம்பர் கொடுத்ததில் மொத்தம் 262-நம்பர்கள் ஏற்பட்டன. இந்த நம்பர்களை எழுதிப்போட்டுக் குலுக்கி யெடுத்ததில் 52-ம் நம்பர் எடுபட்டது. அந்நம்பர்க்குரிய "யாழ்ப்பாணம், சுண்ணாகம் போஸ்டு, புன்னாலைக்கட்டுவன், பொ. சி. வாலாம்பிகை, 4-வது வகுப்பு மாணவி அவர்களுக்குக் குறிப்பிட்டபடி பரிசு கொடுக்கப்பட்டிருக்கிறது. கல்வியறிவுள்ள பலர் எழுதியவற்றுள் மாணவியாகிய இப்பெண்மணிக்குப் பரிசுகிடைத்தது பலரும் கொண்டாடத்தக்கது.

மதுரைத் தமிழ்ப்பண்டிதை - சா. வேலுத்தாயம்மாள் முதலிய சில பெண்மணிகளும் சரியான விடை எழுதியிருக்கிறார்கள். இவை மிகப் பாராட்டத்தக்கவை. சரியான விடை யெழுதின இரண்டுவகையிலும் 262-பேர்கள் தவிர, வினாக்காரர் குறிப்பிட்ட விடைக்கு மாற்றமாக 148-பேர்களும் பலவகையான விடைகளை யெழுதியிருக்கிறார்கள். ஆக எல்லாவகையிலும் மொத்தம் 410-பேர்கள் இதை ஆராய்ச்சிசெய்யும் விஷயத்தில் புத்தியைச் செலுத்தி யிருக்கிறார்கள். இவர்கள் இந்தச் சிறு பரிசை யுத்தேசித்து இவ்



விடை யெழுதத் துணியவில்லை யென்பதும், தங்கள் கல்வி யறிவை விளக்கவே முன்வந்திருக்கிறார்களென்பதும் விளங்குகின்றன. இதனால் நம் தமிழ் நாட்டில் தமிழ்க்கல்வியில் பற்றுடையாரின் தொகை அதிகரித்திருக்கிறதென்பதை, எவரும் உணர்ந்துகொள்ளலாம். இதுபற்றி மிகுதியும் மகிழ்கின்றோம். விடை யெழுதினவர் தொகை அதிகரித்துவிட்டதால் அவர்கள் பெயர்களையெல்லாம் விளக்குவதானால் மூன்றுபக்கங்களுக்கு மேலாகும். ஆதலால், அவ்வாறு செய்யக்கூடவில்லை. பெயர்களை வெளிப்படுத்தும்படி எழுதிக் கேட்டுக்கொண்ட நண்பர்கள் இதனைக் கவனிப்பாராக.

நமது ஆனந்தபோதினிப் பத்திரிகைக்கு வருஷக்கடைசி சமீபித்திருப்பதினாலே சில மாதங்கள் வரையில் வேலை அதிகமாயிருக்கும். ஆகையால், இனிச் சில மாதங்கள்வரை இத்தகைய வினாக்கள் பிரசுரிக்கமுடியாது. ஆதலின் நண்பர்கள் அடுத்த பிரபவளு ஆடிமீ வரை வினா எழுதாதிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

பத்திராதிபர்.

# நாவல் பகுதி.

(379-ம் பக்கத் தொடர்ச்சி.)

## அம்பாலிகை அல்லது அதிசய மரணம்

**ஆனந்:**—நீ மற்ற எல்லாவிஷயங்களிலும் திருப்திகரமாய் நடந்துகொண்டால் கிடைக்கும்.

**கறுப்:**—அப்படியாயின் நான் உன் ஏற்பாட்டின்படி ஒப்புக்கொள்ளுகிறேன்.

**ஆனந்.**—சரி; அந்த இலாயர் குமஸ்தா கொல்லப்பட்டவிதம் எப்படி?

**கறுப்:**—அவன் வேணுமென்று கொல்லப்படவில்லை. அவன் எங்களைப்போன்ற ஒரு பக்காதுஷ்டப்பயலே. கடைசியில் அவன் எங்களுக்கே விரோதியாய்த் திரும்பிவிட்டான். மலையாளத்தானுக்கும் அவனுக்கும் உண்டானசண்டையில் மலையாளத்தான் தன்னுயிரைக் காப்பாற்றிக்கொள்ள அவனைக் கொல்லவேண்டியது அவசியமாயிற்று. திருட்டாந்தமாய் அச்சமயம் மலையாளத்தானுக்குப்பட்ட காயங்களை யின்னும் நீ காணலாம்.

ஆனந்தஸிங் மயானத்தில் லாயர் குமஸ்தாவின் சவத்தை மிக்க ஜாக்கிரதையோடு சோதித்தான் என்று முன்னமே கூறினோமல்லவா. அப்போது அவன் கண்ட குறிகளால் இப்போது இவ்விஷயத்தில்மட்டும் கறுப்பண்ணன் கூறுவது உண்மையேயென்று ஆனந்தஸிங் மனதில்பட்டது.

**ஆனந்தஸிங்:**—"அம்பாலிகை யெவ்வளவுநேரம் சவக்குழியில் இருந்தாள்?" என்றான்.

**கறுப்:**—"ஒருமணிநேரத்திற்குமே லில்லை" யென்றான்.

**ஆனந்:**—அவள் சவம்போல் காணும்படி என்ன தந்திரம் செய்தாய்?

**கறுப்:**—அது மலையாளத்தானுடைய இரகசியம்; எனக்குத் தெரியாது.

**ஆனந்:**—மெய்யான மரணசாசனத்தைக் கொடுத்துவிடுகிறாயா?

**கறுப்:**—இருபத்தையாயிரம் எனக்குச் சேரும் என்று உறுதியாய்த் தெரிந்தால் கொடுத்துவிடுவேன்.

**ஆனந்:**—அதைப் பெற்றுக்கொண்டதே நாட்டைவிட்டுப் போய்விடுவாயா?

**கறுப்:**—ஆகா உடனே போய்விடுவேன்.

**ஆனந்:**—அந்த மெய்யான மரண சாசனம் எங்கேயிருக்கின்றது?

**கறுப்:**—நவீனபுரியிலுள்ள மாளிகையி லிருக்கிறது.

**ஆனந்:**—இந்த மூன்றுபேருக்கும் இவ்விஷயங்களைப்பற்றிய விவரம் தெரியுமோ?

**கறுப்:**—தெரியாது.

அதன்பின் ஆனந்தஸிங் அம்மூவரிடமும் சற்றுநேரம் சம்பாஷித்திருந்து அவர்களை யனுப்பிவிட்டுக் கறுப்பண்ணனை யழைத்துக்கொண்டு நகரத்திற்குப் புறப்பட்டான்.

பாதையில் ஆனந்தஸிங் கறுப்பண்ணனிடமிருந்து இன்னும் சில சங்கதிகளைக் கிரகித்தான். அவை யவனுக்கு மிக்க சந்தோஷத்தை யுண்டாக்கின.

ஆனந்தஸிங் பிரம்மச்சாரி; ஸ்திரீகளின் விஷயத்தில் நாட்டத்தை எப்போதும் செலுத்தியவனல்ல. நாம் முன் கூறியபடி ஒருகாலத்தில் அவன் ஒரு பிரக்யாதிபெற்ற கள்ளப்பத்திரம் பிறப்பிக்கும் கள்ளனைக் கைதுசெய்தபோது அவன்கூட மிக்க அழகுவாய்ந்த ஒரு கன்னிகையைக் கண்டான். முதல் முதல் அவளுடைய வனப்பே யவன் மனதைக் கவர்ந்தது. ஆனால் அவள் அக்கள்ளனுடைய மனைவியாகவாவது வைப்பாட்டியாகவாவது இருக்குமென்று அவன் எண்ணிக்கொண்டான்.

அதுமுதல் அவள் உருவம் அவன் உள்ளத்தைவிட்டு நீங்கவில்லை யெனினும் பொதுவாய் ஸ்திரீகள் விஷயத்திலேயே யவனுக்குச் சந்தேகத்தையும் வெறுப்பையும் உண்டாக்கிவிட்டது. பல வருடங்களுக்குப்பின் அதே கன்னிகை வனப்பில் முதிர்ந்து நல்ல மங்கைப்பருவத்தை யடைந்திருந்தபோது திடீலென்று ஒருநாள் படகில் அவளைக் கண்டான். அவள்தான் அமிர்தம்மாள்; நகருக்குச்சென்று கொண்டிருக்கையில் ஆனந்தஸிங் அமிர்தம்மாளைப் பற்றிக் கறுப்பண்ணனைக் கொஞ்சம் விசாரிப்போமென்று விருப்பமுடையவனாகி,

"அமிர்தம்மாளென்கிற அம்மாது யார்?" என்றான்.

கறுப்பண்ணனிடம் ஒரு நற்குணமுண்டு. அதாவது வீணாய் ஒருவர் மேல் குற்றம் சுமத்தமாட்டான். அதாவது அதனால் தனக்குப் பயனிருந்தாலன்றி; ஆகையால் ஆனந்தஸிங் அமிர்தம்மாளையும் இக்குற்றத்திற்கு உடந்தையாக்க நினைக்கிறானென்று கருதிச் சட்டென்று,

"அம்மாதை யிதில் எள்ளளவேனும் சம்பந்தப்பட்டவளாய் நீ கருதலாகாது" என்றான்.

**ஆனந்:**—அவள் உனக்கு உடந்தையாயிருப்பதால் நீ யவளைக் காப்பாற்றுகிறாய்.



**கறு:**—இல்லை. சத்தியமாகவே கூறுகிறேன்.

**ஆனந்:**—அப்படியானால் அவள் எப்படி அம்பாலிகைக்குக் காவலா யிருக்கிறாள்?

**கறுப்:**-உண்மைப்படி நடந்த சங்கதிகளில் ஒன்றுமே யவளுக்குத் தெரியாது. நான் கூறிய கட்டுக்கதைகளையே யவள் பூரணமாய் நம்பிக்கொண்டு, வேறொருவரால் ஆபத்திற் சிக்கிக்கொண்ட அம்பாலிகைக்கு நான் உதவிபுரிந்து காப்பாற்றவே அவளை மறைத்துவைத்திருப்பதாய் நம்பித்தான் அவளும் பரிதாபத்தால் எனக்கு உதவிபுரிவதாய் எண்ணிக் கொண்டிருக்கிறாள். அம்பாலிகையே தன் காதலனால் தனக்கு நேரிடும் ஆபத்திலிருந்து நான் தன்னைக் காப்பாற்றுவதாய் நம்பியிருக்கிறாள்.

**ஆனந்:**—அவள் உனக்கெப்படிப் பழக்கமானாள்?

**கறுப்:**—நான் சில வருடங்களுக்குமுன் அவளைக் கண்டிருக்கிறேன். அப்போது குற்றமென்பதே யெனக்குத் தெரியாது. நான் எள்ளளவு குற்றமேனும் செய்யக்கூடியவனென்றே யவளுக்குத் தெரியாது.

**ஆனந்:**—அவளை நான் அறியேனென்றும் அவள் சரித்திரம் எனக்குத் தெரியாதென்றும் நீ எண்ணியிருக்கிறாயோ?

**கறுப்:**—அவளைப்பற்றிய சமாசாரம் மிக்க துக்ககரமானது.

**ஆனந்:**—அதோடு குற்றசம்பந்தமானது.

**கறுப்:**—அது பொய், சுத்தப்பொய்.

**ஆனந்:**—நீ பொய் கூறுகிறாயென்று இப்போது நிச்சயமா யறிந்துகொண்டேன். நானே அவள் கணவனைக் கள்ளக் கையொப்பமிட்டுக் கள்ள உண்டிகள் பிறப்பித்த குற்றத்திற்காகக் கைதுசெய்திருக்கிறேன்.

**கறுப்:**—சரிதான்; அவளுக்குக் கணவனேயில்லை.

**ஆனந்:**—சே. கையில் மோதிர மிருக்கும்போது......

**கறுப்:**—மோதிரமிருப்பது நிஜமே. அவள் கலியாணமாய்விட்டவள்போல் நடித்துக்கொண்டிருப்பதற்கும் மாறுபெயர் வைத்துக்கொண்டிருப்பதற்கும் அது தகுந்த காரணமா யிருக்கிறது.

**ஆனந்:**—ஏனெனில் அவள் புருடனாகிய " * னால் அவளுக்கு நல்ல பெயர் கிடைக்கவில்லை.

கறுப்பண்ணன் வெறுப்போடு "சேசே! " * ன் அவள் கணவனல்ல. உனக்கு அவள் உண்மைச்சரித்திரமே தெரியாதென்று இப்போது எனக்கு விளங்கிவிட்டது" என்றான்.

**ஆனந்:**—"ஏதோ அவளுடைய சரித்திரத்தைக் கொஞ்சம் கூறு பார்ப்போம்." என்றான்.

(தொடரும்) **ஆரணி-குப்புசாமி முதலியார்.**

மு. சோம

## விநோதப் பகுதி.

**ஈ யோட்டி மீசைப் பரிசு:**—மூக்குத்தூள் போடுகிறவர்களுக்குக் கருப்புச்சளி இரண்டுநாசிகளின் துவாரங்களுக்குக் கீழே வாயில் ஒழுகுவதை நிகர்த்திருக்கும்படியாகவும், நாசித்துவாரங்களுக்குக் கீழே இரண்டு ஈக்கள் உட்கார்ந்திருப்பதைப் போன்று விளங்கும்படியாகவும் இஞ்சுமீசை அல்லது ஈ யொட்டி மீசைவைத்துக் காட்டுகிறவர்களுக்குச் சிகரெட் பாக்கெட் ஒன்று பரிசு கொடுப்பதாக வெண்டலைச்சங்கத்தார் ஒரு விளம்பரம் செய்திருக்கிறார்களாம்.

**அற்புத தேசோபகாரிகள்:**—இக்காலத்தில் சில நூதன தேசநலப்பிரியர்கள் தோன்றியிருக்கிறார்கள்; இவர்கள், "நம் தேசம் வறுமை யடைதற்குக் காரணம் அன்னியநாட்டுப் பொருள்களை விலைக்கு வாங்கிக்கொண்டு நம்முடைய பணத்தை வெளியிற் போக்கிவிடுவதே; ஆதலின் புறநாட்டுப் பொருள்களை விலக்கவேண்டும்; ஆனால் இரண்டாயிரம் மூவாயிரம் அதிக விலையுள்ள மோட்டார்களைவாங்கி வீட்டிற் கொன்றாக நிற்கும்படி பரப்பி நம்முடைய பணங்களை அன்னியதேசங்களுக்குப் போக்குவதால் ஒரு கெடுதியுமில்லை; கால்ரூபா அரைரூபா விலையுள்ள புறநாட்டுப் பொருள்களை வாங்குவதுதான் கெடுதி என்று அபிப்பிராயங்கொண்டு மோட்டார்களிலேயே சவாரி செய்துகொண்டு வருகிறார்கள்.

**எமனுக்குக் கண்டிப்பான கட்டளை:**—"கூற்றுவனே! இந்தியாவுக்கு அன்னியநாட்டார்கள் இலட்சக்கணக்கான மோட்டார்களை அனுப்பி வருகிறார்கள்; அவை எங்கும் பரவி உயிர் கவர்தலாகிய உன்னுடைய வேலையைத் துரிதமாகச் செய்துவருகின்றன; உனக்கு அதிக வேலையில்லை; ஆதலின், நீ உன் வேலையிலிருந்து விலகிக்கொள்ளவேண்டும்" என்று பிரமதேவர் எமனுக்குக் கண்டிப்பான ஓர் உத்தர வனுப்பியிருக்கிறாராம்.

**மூட்டுப்பூச்சிகளின் முணுமுணுப்பு:**—சென்னையில் நூதனமாகக் கும்பகோணம் கொசுக்கள் உற்பத்தியாகி நாகரீகப் பெண்மணிகளைப்போல நூதனகீதம்பாடி மனிதரைக்கடித்து இராக்காலத்தில் வருத்தி வருகின்றன. இவைசெய்யும் வேதனையால் சென்னைவாசிகள் தூக்கங்கெட்டு ஏக்கமுற்று வருந்திக்கொண்டிருக்கிறார்கள்; இவர்கள் வருத்தம் ஒருபுறமிருக்க, முந்தியே வீடுகளில் இரகசியமாகத்தங்கி மனிதர்களின் இரத்தத்தைக் குடித்துக் கொழுத்திருந்த மூட்டுப்பூச்சிகள், "இதென்ன அனியாயம்! நாங்கள் நெடுங்காலமாக எங்களுக்குச் சொந்தமாக வைத்திருக்கும் மனிதர்களின் இரத்தத்தை நூதனமாகவந்த கொசுக்கள் குடித்துவிடுகின்றனவே; நாங்கள் ஆகாரத்திற்கு எங்கே ஓட்டை யெடுத்துக்கொண்டு போவோம்" என்று முணு
லாகாது · ¬க் கொசுக்களை அப்புறப்படுத்தும்படி நகரசங்கத்தாருக்கு மனுச்
ஆனந்:—அவன் டிருக்கின்றனவாம்.
பார்க்கிறாய்.



## வர்த்தமானக் குறிப்பு.

**ஓர் ஆச்சரியமான பசு:**—மணப்பாறை என்னும் ஊருக்குத் தெற்கே 5 மைலிலுள்ள ஓரூரில் ஒரு பசுமாடு தன்னைப்போலவே உருவமைந்த பெண் கன்றுகள் மூன்றை ஒரேகாலத்தி லீன்றதென்றும், சிலநாட்களுக்குப் பின் ஒரு கன்று இறந்துவிட்டதென்றும், மற்ற கன்றுகள் இரண்டுடன் அப்பசு மாமுண்டி நல்லாண்டவர் கோயிலில் இப்போது விடப்பட்டிருக்கிறதென்றும் நமது ஆனந்தபோதினி 13616-ம் சந்தா நண்பர் மாணிக்கம் செட்டியார் தெரிவிக்கின்றார். இது கலிகால விந்தையிலொன்றே.

*　　*　　*　　*

**ஓர் அதிசயப்பிறவி:**—மாண்டலே (Mandalay) B ரோட்டில் 24-1-27ல் ஒருவெள்ளாடு இரண்டுதலைகள், நான்கு கண்களுள்ள ஒருகுட்டியுடன் மற்றொரு சாதாரணமான குட்டியை யீன்றதென்றும், இந்த அதிசயக்குட்டிமட்டும் படுத்தபடியே யிருக்கிறதென்றும், ரப்பர்புட்டியின் மூலமாகப் பாலருந்தி வருகிறதென்றும், இக்காட்சியைக்காண இரண்டணா கட்டணச்சீட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்றும், அனேகர் பார்த்துவருகின்றனரென்றும் நமது சந்தாநேயர் (நெ. 118.) S. சிவானந்தம்பிள்ளை அறிவிக்கின்றார். இதுவும் ஆச்சரியமே.

*　　*　　*　　*

**கதர் விவாகச் சடங்கு:**—பரமக்குடி கீழத்தெருவில், 7-2-27ல் சின்னப்ப செட்டியார் என்பவருக்கு விவாகஞ் செய்யப்பட்டது. இந்த விவாகத்தில் மணமகன், மணமகள், புரோகிதர் முதலிய எல்லோரும் கதராடையையே உடுத்துக்கொள்ள ஏற்பாடாயிற்றென்று நம் சந்தாநேயர் (நெ. 19055) M. M. கான்சாயபு தெரிவிக்கின்றார். இக்கொள்கை நமது தேசமுன்னேற்றத்திற்கு அத்தியாவசியமானதே.

*　　*　　*　　*

**பாரபட்சம்:**—சத்திரம், தண்ணீர்ப்பந்தல், பாடசாலை முதலிய தர்மஸ்தாபகங்களில் தனவந்தர்கள் பிராமணரையே பெரிதும் ஆதரித்து வருகின்றனரென்றும், மற்ற வகுப்பினரைக் கவனிப்பதில்லையென்றும், இத்தகைய பாரபட்சங்கூடாதென்றும், இது தேசநலத்திற்கு விரோதமாமென்றும், திருச்சி இந்திரன்பிள்ளை யென்பவர் குறை கூறுகிறார். தனவந்தர்கள் இதைக் கவனிப்பாராக.

*　　*　　*　　*

**ஒருமகான்:**—கரிவலம்வந்த நல்லூரில் சுமார் 120-வயதுடைய பசுபதியென்னும் ஒரு மகான் இன்னும் சில தினங்களில் சமாதியடையப் போவதாயும், தளர்ந்தவயதிலும் நல்லநிலையிலிருப்பதாகவும், அச்சமாதியின்பொருட்டுச் சட்டிடவேலை நடந்து வருவதாயும், மகத்துவம் பொருந்திய அவரை ஜனங்கள் பார்ப்பது நல்லதென்றும் நமது சந்தா நண்பர் (நெ. 1149) மு. சோமசுந்தரம்பிள்ளை எழுதுகின்றார்.

# "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

பிரபவஸு சித்திரைமூ—கலியுகாதி 5029, சாலிவாகனம் 1850,
பசலி 1336—கோல்லமாண்டு 1102—ஹிஜரி 1345,
இங்கிலீஷ் 1927ஸு எப்ரல்மூ—மேமூ

| தேதி | எப்ரல் | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 13 | புத | து49-45 | பூரம்60 | அமி60 | சாந்திர துவாதசி திதி, விஷு புண்யகாலம் |
| 2 | 14 | வியா | திர55-55 | பூர2-10 | சித்2-10ம | தமனத் திரயோதசி |
| 3 | 15 | வெ | சது60 | உத்9-38 | சித்9-38அ | திருதினஸ்பிருக் |
| 4 | 16 | சனி | ச○1-58 | அஸ்17-3 | மர60 | சித்ரா பௌர்ணமி |
| 5 | 17 | ஞா | பௌ7-43 | சித்23-58 | சித்60 | தானியஞ் செலவிட |
| 6 | 18 | திங் | பிர13-5 | சுவா30-30 | அ30-30ம | கரிநாள், சைத்ரபகுளம் |
| 7 | 19 | செவ் | துதி17-43 | விசா36-25 | ம36-25சி | மரணயோகம் |
| 8 | 20 | புத | திரி21-43 | அனு41-33 | சித்60 | நிஷேகம், சர்வமுகூர்த்தம் |
| 9 | 21 | வியா | சது24-40 | கேட்45-43 | பி45-43சி | குளம் கிணறு வெட்ட |
| 10 | 22 | வெ | பஞ்26-35 | மூல48-43 | அ48-43பி | |
| 11 | 23 | சனி | சஷ்27-5 | பூரா50-15 | சித்60 | |
| 12 | 24 | ஞா | சப்25-58 | உத்50-13 | அமி60 | |
| 13 | 25 | திங் | அ23-13 | திரு48-43 | அ48-43சி | |
| 14 | 26 | செ | நவ18-45 | அவி45-23 | சி45 23ம | |
| 15 | 27 | புத | தச12-50 | சதை40-43 | சி40-43ம | |
| 16 | 28 | வியா | ஏகா5-38<br>து57-23 | பூரட்34-58 | சித்60 | |
| 17 | 29 | வெ | திர48-40 | உத்28-23 | சி28-23அ | |
| 18 | 30 | சனி | சது39-40 | ரேவ21-18 | ம21-18சி | |
| 19 | 1 | ஞா | ●30-45 | அஸ்14-20 | சித்60 | சர்வத்திர அமாவாசை |
| 20 | 2 | திங் | பிர22-38 | பர※8-0 | சித்8-0மர | கிருத்திகை, வைசாகசுத்தம் |
| 21 | 3 | செவ் | துதி15-38 | கிரு2-28<br>ரோ58-25 | சித்2-28அ | அவமாகம், அக்ஷயத்திரிதிகை, கடன் நீக்க |
| 22 | மேமீ 4 | புத | திரி10-3 | மிரு56-3 | சித்60 | கத்திரி ஆரம்பம், அக்கினி நக்ஷத்திராரம்பம் நா-9-28 |
| 23 | 5 | வியா | சது6-10 | திரு55-38 | ம55-38அ | வியாதியஸ்தர் குளிக்க |
| 24 | 6 | வெ | பஞ் 4-18 | புன57-8 | சித்57-8ம | சஷ்டி, கிருஷியாரம்பம் |
| 25 | 7 | சனி | சஷ்4-25 | பூசம்60 | சித்60 | கெங்கோற்பத்தி |
| 26 | 8 | ஞா | சப்6-23 | பூசம்0-35 | சித்60 | நவக்கிரகசாந்தி செய்ய |
| 27 | 9 | திங் | அ10-3 | ஆயி4-53 | சித்5-43ம | குளம் கிணறுவெட்ட |
| 28 | 10 | செவ் | நவ14-53 | மக12-0 | சித்60 | எருவிட, விதை விதைக்க |
| 29 | 11 | புத | தச20-40 | பூர19-5 | அமி60 | சித்திரம் எழுத, மாடுவாங்க |
| 30 | 12 | வியா | ஏகா26-45 | உத்26-35 | ம26-35சி | சர்வ மத்வ ஏகாதசி |
| 31 | 13 | வெ | து32-38 | அஸ்53-53 | அ33-53சி | பும்சவனம், காதுகுத்த, கதிரறுக்க, கோடியுடுக்க |

| | | | |
|---|---|---|---|
| புத | சூரி | சுக் | ராகு செ |
| குரு | 14-மீன-குரு<br>20-மே-புதன்<br>24-மிது-சுக் | | |
| | | | |
| கே | சனி | | |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,
AT THE " ANANDA BODHINI" POWER PRESS,
15, VENKATESA MAISTRY ST., MADRAS.

# மலையாள பகவதி.

## (இரண்டாம் பதிப்பு.)

ஆனந்தத்தை அடிக்கடி யுண்டாக்குவது; அடங்காச் சிரிப்பை விளைவிப்பது; அகங்குளிரச் செய்வது; அறிவை வளர்ப்பது; தமிழ்ஞானத்தைத்தருவது; உலக இயற்கையை உள்ளபடி உணர்த்துவது; தந்திரமந்திரக்காரர்களின் தன்மைகளை விளக்கமாகத் தெரிவிப்பது; சமஸ்தானப் புரட்டர்களின் தன்மைகளைச் சவிஸ்தாரமாகக் கூறுவது; படிப்பவர் மனதைக் கவரத்தக்கது.



இதில், அரண்மனைச் சேவகரின் அக்கிரமங்கள், இலஞ்சம் வாங்குவோரின் இழிவான நடக்கைகள், உண்மைப்புலவர் தன்மைகள், போலிப் புலவர் பொய் வேடச் செயல்கள், விகடக்காரர் தன்மைகள், அக்கிரமக்காரர்களுக்கு அளவற்ற துன்பங்களுண்டாகும் விதங்கள், பரத்தையர் இயல்பு, கடன்காரர் வேடிக்கை, மூடர் இயற்கை, மடையரின் மூடசாஸ்திரக் கொள்கைகள், பேதை மனிதரின் விநோதச் செயல்கள், முழுமோசக்காரரின் மதிமோசச் செயல்கள், மந்திரக்காரர் இயற்கை, பூசாரிகள் புரட்டு, கோடாங்கியின்கூத்து, பேய்க்கூத்து, பெண்களின் பேயாட்டு, கோடாங்கிப்பாட்டுக்கள், பேயோட்டுதல், கழிப்புக்கழித்தல், கிரகசாந்தி செய்தல், எமனை வரவழைத்து இறப்பவனைப் பிழைப்பித்தல், கோடாங்கிக்காரரை நம்புவோர் குடிகெட்டுப்போதல், பேயாட்டத்தை நம்புவோர் பெண்களை பிழத்தல் முதலிய பற்பல விஷயங்கள் மிக்க அற்புதமாகவும் விரிவாகவும் எழுதப்பட்டிருக்கின்றன. இதன் சிறப்புநோக்கிப் பலரும் இதில் விருப்பஞ்செலுத்தியபடியால் முதற்பதிப்புப் புத்தகங்கள் சீக்கிரம் செலவாகி இப்போது இவ்விரண்டாம்பதிப்பு வெளிவந்திருக்கிறது. இதனை ஒவ்வொரு குடும்பத்திலுமுள்ள ஆண், பெண், பாலர், விருத்தர் முதலிய எல்லோரும் வாங்கி வாசிக்கலாம். இதன் விலை ரூபா 1 0 0

## மதனபூஷணம்.

இதில் குற்றவாளி உயிரோடிருப்பவனை இறந்து விட்டவனாகவும், இறந்து போனவனை உயிரோடிருப்பவனாகவும், படித்தோர் நம்பும்படி செய்வது மிக்க வியப்பையுண்டாக்கும். அத்தகைய கள்ளனுடைய குற்றங்களைக் கண்டுபிடிக்கும் துப்பறிபவன் சாமர்த்தியத்தையும் படித்துப் பார்ப்பது மிக்க அவசியமானது. இதன் விலை ரூபா 1.

## சுவர்ணம்பாள்.

இதில் துப்பறிபவன் கதவிற்பட்டிருந்த ஒரு பெருவிரற்குறியின் அடையாளத்தைக்கொண்டு குற்றவாளியைக் கண்டுபிடிப்பதில் அவனுடைய நுட்ப அறிவும் சாமர்த்தியமும் நன்கு விளங்கும். பேராசையானது மிக்க பாபச்செயல்களையும் செய்யத் தூண்டக்கூடிய கொடிய குற்றமென்பதும் முடிவில் அதனால் அவமானமும் இராஜ தண்டனையும் கிடைக்கும் என்பதும் இன்னும்அநேக நீதிகளும் தெரியவரும். இதன் விலை அணா 12.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# ஞானசெல்வாம்பாள் அல்லது

## இரண்டு சகோதரிகள். 5-பாகம்.

நம்மிடம் இதுவரை வெளியாகியிருக்கும் அநேகம் நாவல்களில் இது தான் மிகப் பெரியது. நூற்றுக்கு மேற்பட்ட பல அத்தியாயங்களையுடையது; "இரும்பைக் காந்தம் இழுக்கின்றவாறுபோல்" படிப்போர் மனத்தை இழுத்துக்கொள்ளத்தக்கது. கதை மிகப் பெரிதாயினும், வாசகர்களின் மனம் சிறிதும் அயர்ச்சியடையாமல் மேலும் மேலும் ஆனந்தமாக முடிவுவரை சென்றுகொண்டேயிருக்கும். படிப்பவர்கள் இப்புத்தகத்தைக் கைவிடாதபடி ஆகாரமுண்ணுங் காலத்திலுங்கூட விரித்தபடியே பார்த்துக்கொண்டு சாப்பிடும்படி அவ்வளவு இனிமை இந்நாவலில் அமைந்திருக்கின்றது.

கதாநாயகிகளாகிய ஞானம்பாள்; செல்வாம்பாள் என்ற இரண்டு சகோதரிகளும், தங்களுக்கு மேலதிகாரிகளின்றித் தங்கள்இஷ்டம்போல் எங்குமுலவிச் சகல ஆடவர்களுடன் பழகிக்கொண்டிருந்ததால் அடைந்த பலவகைத் துன்பங்களும், வஞ்ச நெஞ்சர்களாகிய படுமோசக்காரர்களால் நிரபராதிகளாகிய பலர் பெரிய பெரிய விபத்துக்களுக்குள் சிக்கி மீண்டதும், பஞ்சமாபாதகர்கள் அஞ்சாமல் நல்லோர்க்கியற்றும் சஞ்சலச் செயல்களும், நெஞ்சு திடுக்கிடும் விஷயங்களும், முடிவில் தீயோர் பல ஆபத்துகளில் சிக்கி அடியோடொழிவதும், நல்லோர் சுகமடைவதும், இன்னும் எண்ணிறந்த பற்பல அற்புத விஷயங்களும் இதில் அடங்கியிருக்கின்றன.

நான்கு பாகங்களில் தனித்தனி ஒவ்வொன்றுக்கு விலை ரூபா 2 0 0
ஐந்தாவது பாகம் மாத்திரம் விலை ரூபா 1 10 0

ஆனந்தபோதினிச் சந்தாதாரர்களில் ஐந்து பாகங்களும் சேர்த்து
வாங்குவோருக்கு 30-8-26 வரையில் அவற்றின் விலை ரூபா 8.

## வீ ர நா த ன்

தேவராஜனும் அவன் மனைவியும், காணமற்போன குழந்தை சிக்கினது, மலைமேல் நடக்கும் அதிசயங்கள், வீரநாதனும் கன்னியும், இரண்டாவது கலியாணமுடிவு, மலைநாட்டுப் பாடசாலை, சர்க்கரைத் தோட்டத்தில் கொண்டாட்டம், உபாத்தியாயர் ஜெகன்னாதன் வலையில் சிக்கிக்கொண்டான், கன்னியம்மாள் இரகசியமான இடங்களைக் கண்டுபிடித்தல், வீரநாதன் ஞானசேகர குருவையும், இராஜாம்பாளையும் காண்பது தேவராஜின் சாராயக்கடை அழிக்கப்படல், ஜானகி தாயார் தகுந்த சமயத்தில் பழமூறுத்தல், உள்ளேயே உளவாளி துரோகம், தெருவில் கலியாண ஏற்பாடு, தாலிகட்டுதல், உபாத்தியாயர் ஜெகன்னாதன் பிராணபத்தில் தப்பித்தான். என்பவை இதில் அடங்கியுள்ளன. இவை மனதைக் கவரத்தக்கவை. இதன் விலை அணா 12.

## விளையாட்டுச் சாமான்

### அ ல் ல து வி ப ரீ த க் கொ லை.

இக் கதையில் மூன்று அதிசயக் கொலைகள் நடக்கின்றன. குற்றத்தைச் செய்த ஆசாமிகள் மிக்க தந்திர சாமர்த்தியத்தோடு தங்கள் குற்றங்களைச் செய்கிறார்கள். அதனால் ஒரு நிரபராதி கைது செய்யப்படுகிறான். வேறு சிலர்மேல் சந்தேகமுண்டாகிறது. கடைசியில் துப்பறிபவனுடைய தைரியமும், துணிகரமும் புத்திசாலித்தனமுமான முயற்சிகளால் மிக்க சாமார்த்தியவான்களான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படுவது மிக்க அதிசயத்தை விளைவிக்கும். இதன் விலை ரூபா 1-6-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# ஸ்ரீமத் கம்பராமாயண

## வசன சங்கிரகம். (மூன்றாம் பதிப்பு.)

(சப்தகாண்டங்கள் அடங்கியது.)

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் ஆர்ட்பேப்பரில் போட்டு உள்ளே சேர்க்கப்பட்டிருப்பதோடு, மேல் காலிகோ பைண்டு முன் பக்கத்திலும் டை படம் மிக அழகாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.

**மிக்க திருத்தங்களோடு உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது. விலை ரூபா 2.**



☞ இதன் முதலிரண்டு பதிப்புக்களும் மிக விரைவில் செலவாகி விட்டபடியால் இம்மூன்றாம் பதிப்பு இப்போது வெளிவந்துள்ளது. இப்பதிப்பிலும் சொற்பக் காப்பிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன. ஆதலின் இப்பதிப்பு புஸ்தகம் வேண்டியவர்கள் முன்னரே எழுதிப் பெற்றுக்கொள்க. ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக் கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாம் பயன்கள் அளவிடற்கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக் கூடிய பொருள்களெல்லாம் கைகூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இலக்குமி கடாக்ஷமுண்டாகும்.

இன்னும் இந்த இராமாயணத்தைப் பக்திபுடன் படித்து முடிக்குமிடங்களில் கலியாணம் முதலிய மங்களகாரியங்கள் நிறைவேறும்; புத்திரபாக்கியமுண்டாகும்; பசு, பால், தானியம் முதலியன விருத்தியாகும்; பில்லி, சூனியம், நோதநோய், பூதபைசாச உபத்திரவங்கள் முதலியவை நீங்கும்; பகை நீங்கும்; விஷஜெந்துக்கள் அணுகமாட்டா; பஞ்சம் நீங்கும்; நல்ல மழை பெய்யும்; துக்கமான சம்பவங்கள் நீங்கி மிக்க ஆனந்தமுண்டாகும். இவையெல்லாம் உண்டாவது நிச்சயம். இராமாயணம் படித்த பற்பல இடங்களில் இப்பயன்கள் உண்டாகியிருக்கின்றன. இவற்றை ஒவ்வொருவரும் அநுபவத்திலும் உணர்ந்துகொள்ளலாம்.

இத்தகைய மகாமகிமைவாய்ந்த இராமாயணம் பெரும்பான்மையும் கம்பர் இராமாயணச் செய்யுட்களின் போக்கைத் தழுவியே தெளிய நடையில் எழுதப் பெற்றிருக்கின்றது. இராமாயண பாராயணஞ்செய்ய விரும்புவோரும், சாதாரணமாக இராமர் கதையைப் படித்துணர விரும்புவோரும், வித்தியார்த்திகளாகிய மாணவர்கள், மாணவிகள், மற்றைய ஆண்மக்கள், பெண்மக்கள் முதலிய எல்லோரும் இதனை எளிதில் படித்துணரலாம்.

## மலையை விழுங்கிய மகாதேவன் கதை.

படிக்கப் படிக்கச் சிரிப்பையுண்டாக்குவது. அளவற்ற ஆனந்தந் தருவது. அறிவை வளர்ப்பது. சகலரும் வாசிக்கத்தகுந்தது. விலை அணா 6.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# அற்புத நவநீத ரம்பை

நண்பர்காள்! கதாநாயகி பருவகாலமடைந்து மணமின்றி சகலவித்தைகளிலும் புத்திமீறின தன் தமயனை யழைத்துக்கொண்டு புரவியின்மீதேறி வனத்திற் சென்று வேட்டையாடி யிரவில் கானில் இருவர்களுந் துயில் செய்து பொழுதுவிடிய நவநீதரம்பைவிழித்தெழுந்துபார்க்க அருகிற் தமயனைக்காணாது பதறி அருகிலிருக்கின்றன வனங்களிற் புகுந்து அலைந்து திரிகுவது சோகரசமாயிருக்கும். பின்பு சிலதுநாள் தேடியும் தமையன் அகப்படாமையினாலே ஆறுமாதத்திற்குள்ளாக அகப்படாவிடில் தன் ஆவியைத் துறப்பது நிச்சயமென்று வைராக்கியங்கொண்டு தனதுடன் பிறந்தோனைத் தேடிச் செல்லுகிற மார்க்கத்தில் அதிதாகிய மூன்று பொருள்களை சம்பாதித்துக்கொண்டு புரவியை துரத்திவிட்டு சித்தர்களைப்போல் கேசரி மார்க்கம் பறந்து தனது தமயனை யெடுத்தேகிய பஞ்சமுக இராட்சதனை சம்மாரஞ்செய்வது மிக்க பயங்கரமாக யிருக்கும். விலை ரூபா 1.

## மின்சாரமாயவன்.

மின்சாரமாயவனும் பெரியண்ணனும், ஸார்ஜெண்ட் கமலநாதனுடைய பெருமை, சுந்தரபூபதி பிரபுவின் பணப்பெட்டிகள் களவாடப்படல், மின்சாரமாயவன் பிசாண்டிபுரம் பிரயாணம் போவது கவனிக்கத் தக்கது. இராஜாராம் வீடு பார்க்கத்தகுந்தது, தமக்கைக்கும் தம்பிக்கும் மனஸ்தாபம், பெண்களை கட்டில்லையாது ஆண் பிள்ளைகளை விடுவதுபோல் விட்டுவிட்டதால் நேரிடும் விபரீதங்கள், வாஹுர் ஹோட்டலில் மின்சாரமாயவனுக்கும் கந்தனுக்கும் சண்டை போலீஸார் சிப்பாய்களின் பாவையைத் திற்கு வருதல், கமலநாதன் மின்சாரமாயவனுக்கு அதிக சாமர்த்தியமாயிருந்தும் ஐக்கியப்படல் (அதிசயம்) ஜெயதேவியும் அவள் அத்தையும் இரத்தினபுரியில் உலாவுதல் அவ்விடம் வேடிக்கையான ஆபத்து ஆச்சரியமாயிருக்கும். இதன் விலை ரூபா 1 8 0.

# மதனும்பாள்

இது ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பெற்ற மிக்க அற்புதம் பொருந்திய நாவல்; இந்நாவல் படிப்போர் மனதைக் கவர்ந்து ஆனந்த சாகரத்தில் மூழ்கச் செய்புமென்பதில் ஐயமில்லை. இதில், காளிங்கனுகிய லோகநாதன் என்னும் ஓர் நயவஞ்சகன் சகோதரத் துரோகியாய் அவனை அடுத்துக்கெடுத்தலும், பட்டாபிராமன் என்னும் ஓர் உத்தமனைக் காதலித்திருந்த மதனும்பாள் என்னும் உத்தமியைத் தான் மணஞ்செய்துகொள்ள விரும்பி வேலாயுதன் என்பவனைத் தன் மோசச்செய்கைகளுக்குத் துணைக்கருவியாகக்கொண்டு பல வஞ்சனைகளைச் செய்து, மதனும்பாளை ஆதரித்து வந்த பாங்கிக்காரர் மனைவியாகிய விமலாபாயைப் பயமுறுத்தி, மதனும்பாளைத் தன் விருப்பத்திற் கிணங்கச்செய்வதும், பாங்கியில் மகா மாயக்களவு நடத்தி அக்குற்றத்தை நிரபராதியாகிய பட்டாபிராமன்மேல் சுமத்துவதும், இன்னும் அந்த லோகநாதன், பொருளாசையால் தன் தமையனுகிய கஜேந்திரம் பிரபுவை விஷமிட்டுக் கொல்வதும், விமலாபாயைத் நிராத்துயரத்திற் குள்ளாக்குவதும், முடிவில், வரதராஜு என்னும் துப்பறியும் நிபுணனுல், அந்தச்சண்டாள லோகநாதன் குற்றங்கள் வெளியாக்கப்பட்டு அவன் தீபாந்தரவாச தண்டனை யடைவதும், மேலும் இடையிடையே வரும் மகா மோசதந்திர அற்புதச் செயல்களும் படிப்போர்க்கு ஆச்சரியத்தை விளைவிக்கும்.

முதற்பாகம் விலை ரூ. 1—8—0. இரண்டாம்பாகம் விலை ரூ. 1—8—0.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# கைவல்ய நவநீதவசனம்

ஆன்மாக்கள், மாயையினின்றும் விடுபட்டு மோக்ஷசாதனத்தை அடையும்பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அருளிய வேதத்தின் உட்பொருளைத் தழுவிப் பல மகான்கள் பல நூல்களை இயற்றியிருக்கின்றனர். அவற்றுள் ஸ்ரீமத் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதமும் ஒன்று. இது, எவரும் எளிதில் வாசித்துணரும்படி வசனமாக எழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. இதனால் முத்திமார்க்கத்தை எவரும் நன்குணரலாம். இதன் விலை ரூபா 1—8—0.

## பவளத்தீவு அல்லது குடும்பசாபம்.

எமது மனமோகினி சஞ்சிகையில் பிரதி மாதமும்வெளியாகிக்கொண்டிருந்த மேற்படி நாவலின் 2-பாகமும் (நமது சந்தா நேயர்களின் கோரிக்கையின்படி) புத்தக ரூபமாக வெளியிடப்பட்டிருக்கின்றன. இக்கதையில் ஒரு செல்வச் சீமான் பேராசையால் செய்யும் குற்றத்திற்காக அவன் சந்ததியார் கொடிய சாபத்தை யனுபவிப்பது யாவர்க்கும் மேலான படிப்பினையைக் கற்பிக்கும். இதில் வரும் ஒவ்வொரு ஆசாமியின் சரித்திரமும் அவரவர் தத்தமது நடக்கைகளுக்குத் தக்க பலனை முடிவில் அடைவதும், ஒவ்வொரு நேர்த்தியான நீதியைப் போதிக்கும். 2-பாகமும் ரூபா 3-0-0.

## லோகநாயகி அல்லது அதிசயப் புதையல்.

பண ஆசை எத்தகைய பெரும்பாதகத்தையும் செய்யத் தூண்டும் கொடிய பேய் என்பதும், அக்கிரமஸ்தரும், நம்பினவர்களைத் துரோகம் செய்யும் பாதகரும் முடிவில் ஆண்டவனுல் எப்படியும் தண்டிக்கப்படுவோர்கள் என்பதும், நீதியும் சத்தியமு முடையோர் முதலில் கஷ்டத்தை யனுபவித்தாலும் முடிவில் பூரண நன்மையை யடைவார்கள் என்பதும், இக்கதையில் நன்கு நிரூபிக்கப்படுகிறது. கதாநாயகியாகிய லோகநாயகியின் புத்தி சாதுர்யமான நடக்கைகளும், துப்பறிவனது சாமார்த்தியமும், ஆரம்பத்திலிருந்தே ஒன்றின்பின் ஒன்முக நேரிடும் அதிசய சம்பவங்களும், போய் விட்டதென்று யாவரும் கைவிட்டுவிட்ட பொக்கிஷத்தைத் துப்பறிவன் எடுத்தளிக்கும் சாமார்த்தியமும் நீதியும், இதை வாசிப்போர்க்கு ஆதிமுதல் அந்தம் வரை வியப்பையும் உற்சாகத்தையும் அளிக்கும். விலை ரூ. 1.

## தேவசுந்தரி.

இஃதோர் மகாப் பதிவிரதையின் அரிய சரித்திரமாகும். பதிவிரதைகளில் பல அளவுள்ளது. சிலருடைய பதிவிரதா தன்மை, தன் கற்புத்தன்மையை மட்டுமே காப்பாற்றிக்கொள்ளும் இயல்புடையது. இவ்வித கற்புடையோர்க்கு புருஷத் தன்மைக்கொப்பாகிய தைரியமும் பொறுமையும் துணிகரமுமாகிய குணங்கள் வேண்டும். இதைப்போல் மிக்க சிலரே உலகில் இருப்பார்கள். தேவசுந்தரி, தனக்கு நேரிட்ட இக்கட்டைடச்சகித்துக்கொண்டு தீயவழிகளிலிறங்கிய தன் புருஷனை ஆதரித்து கற்பின் தன்மையை விளக்கினது மிக்க வியப்பாயிருக்கும். இவள் கணவனுக்கு வரும் அந்த ஆபத்துகளை வெகு சாமர்த்தியமாய் நீக்கி நல்லவழியில் கொண்டுவந்த பிறகு இவள் மேன்மேலும் விருத்தி யடைந்தது புகழத்தக்கது. இந்நாவலில் ஆச்சரியத்தை விளைவிக்கும் சங்கதிகளும் நல்லறிவைப்புகட்டக்கூடிய விஷயங்களும் ஏராளமாய் செறிந்து கிடக்கின்றன. ரூபா 1-4-0

விலாசம்.—"ஆனந்தபோதினி ஆபீஸ்"
தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## முஞ்சன் அறையின் மர்மம்.

இதுகாறும் எழுதிய பல துப்பறியும் நாவல்களையும், இதர துப்பறியும் நாவல்களையும் வாசித்திருப்போர் இதனையும் வாசித்தால் இத்தகைய ஆச்சரியமும் சாமர்த்தியமுமான துப்பறியும் நாவல் இதுகாறும் எழுதப்படவில்லையென்று எளிதில் உணர்வார்கள். இதில் குற்றம் செய்தவனுடைய சாமர்த்தியச் செயல்களும், குற்றத்தைக் கண்டு பிடிப்பவனுடைய சாமர்த்தியச் செயல்களும் ஒன்றுக்கொன்று இணையற்றன வாகவேயிருக்கும். குற்றம் நடந்த இடத்தின் படங்களும் சேர்ந்திருக்கின்றன. விலை ரூ. 1—8—0

## ஆனந்தலிங்

இலண்டன் சாமர்த்தியத் திருடர்கள் என்ற நாவலை வாசித்த அன்பர்களனைவரும் அதன் இனிமையை நன்குணர்ந்தே யிருப்பீர்கள். அதைப் போலவே இதிலும் பல துப்பறியும் கதைகள் அடங்கியிருக்கின்றன.

தைரியமும், துணிகரமும், மிக்க புத்தி சாமர்த்தியமும் நிறைந்த ஆனந்தலிங்கின் அதி யபூர்வச்செயல்கள் இதில் ஒரு விசேஷம். அதோடு இதில் அடங்கிய குற்றவாளிகள் நல்ல அந்தஸ்தி லுள்ளவர்களும், கல்வியறிவுடையோருமாதலால் அவர்களுடைய மிக்க சாமர்த்தியமான இணையற்ற செய்கைகள் வாசிப்போர்க்கு மிக்க அதிசயத்தையும், பிரமிப்பையும் யோசனையையு மளிக்கும். 492-பக்கங்கள் கொண்டது. விலை ரூபா 2.

## கனகபூஷணம்.

இதில் கற்பிலக்கணம் விவரமாய் உலக அனுபவத்தோடு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. கதாநாயகி தனக்கு நேரிடும் மிக்க பயங்கரமான அனேக இக்கட்டுகளிலிருந்து தன் கற்புக்குப் பழுதுவராமல் தப்பித்துக்கொள்வது மிக்க சோகத்தையும் ஆச்சரியத்தையும் தரும். சிறுவர்களுக்கு வேண்டிய நீதிகளும் நற்புத்திகளும் இதில் நிறைந்திருக்கின்றன. இந்த நாவல் ஆதிமுதல் அந்தம் வரையில் மனதை முழுதும் கவர்ந்து கொள்ளக்கூடியது. 2-பாகம் இதன் விலை ரூபா 3 8 0.

## கற்கோட்டை.

இந்த நாவல் ஆரம்பத்திலேயே வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்து கொள்வதோடு முடியுமட்டும் அக்கவர்ச்சி நீங்காது. இது சரித்திர சம்பந்தமான நாவல் எனலாம். சில ஸ்திரீகளின் அற்புத நடக்கைகளும், துணிகரமான தீரச்செயல்களும், தம் காதலரிடத்தில் மெய்க்காதல் கொண்ட உத்தம ஸ்திரீகள் தம்காதலர் பொருட்டாய், எவ்வளவு வரையில் ஆடவருக்குச் சமமாய் நடந்துகொள்ளச்சக்தியுடையவர்களா யிருக்கிறார்களென்பதை நன்கு விளக்கும். நீதியைப் புகட்டும் ஓர் உயர்ந்த நூல். இதில் நூலாசிரியர் திருவுருவப் படமும் அமைக்கப்பட்டிருக்கிறது. ரூபா 2.

## கமலசேகரன்.

ஓர் சுத்தவீரனுடைய அதிசயக்கதை. இக்கதாநாயகன் உயர் குலத்தில் பிறந்தவனே யெனினும் தன் சிறிய தந்தையின் மோசச்செயலால் அனாதைப்போல் அன்னியரால் வளர்க்கப்படுவதும் பிறகு தன் தந்தையர்களின் ஆவேசங்கள் அவனெதிரிற்றோன்றி அவனுக்கு வேண்டிய சமயங்களிலெல்லாம் உதவி செய்வதும் மிக்க ஆச்சரியமாக விருக்கும்.

இதில் அதிசயரசமும், சோகரசமும், வீரரசமும் உண்மைக்காதலின் அபூர்வ குணங்களும் நிறைந்திருக்கின்றன. இதன் விலை ரூபா 1 12 0.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## இரத்தினபுரி இரகசியம்.

இதில் மிக்க ஆச்சரியமும் நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருட்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரீகளும் அவசியமாய் உணரவேண்டிய இலௌகீக ஆசார விஷயங்களைப்பற்றி ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் இனிமையும் அருமையும் வாசிப்போர்களால் முன்னமே புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் இதைப்பற்றி நாம் அதிகமாய்க் கூறவேண்டுவதில்லை. இதில் எல்லா ரசங்களும் பூரணமா யிருக்கின்றன வென்று கூறுகிறோம். இரண்டு பாகமும் விலை ரூபா 4 0 0

## அமராவதி அல்லது அதிசய மர்மங்கள்.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த ஒரு நாவல். ஒருமனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனு யிருந்தால் அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம்பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துகளிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவா னென்பதும் இதில் நன்கு நிரூபிக்கப்பட் டிருக்கிறது. இதிலுள்ள ஒவ்வொரு சம்பவமும் அதியாச்சரியத்தை விளைத்து அடியோடு மனதைக் கவர்ந்தகவே. அசம்பாவிதமெனத் தோன்றும் அனேகச் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். இதில்வரும் முக்கிய பாத்திரங்கள் ஒவ்வொருவருடைய சரித்திரமும் ஒவ்வொரு வியப்பான துப்பறியும் கதையைப்போன்றிருக்கும். சுருக்கிக் கூறின் இதை ஒரு அதிசயக் களஞ்சியமே யெனலாம். 2-பாகம் ரூபா. 4.

## இந்திராபாய்

இதில் 5 ஆப்டோன் படங்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது

இது ஒரு துப்பறியும் நாவலானாலும் அனேகம் துப்பறியும் நாவல்களை விட இது மிக்க அபூர்வமானது. இதில் சம்பந்தப் பட்ட குற்றவாளியாகிய முஷ்டிக்காம் என்ற கள்வன் கல்வி, சாத்திர ஆராய்ச்சி, தந்திரம், சாமார்த்தியம் முதலிய யாவும் உடையவனாதலின், அவன் தன் கூட இருக்கும் ஆட்களுக்குக்கூட தன் சுய உருவத்தைக் காட்டாமலே செய்யும் மிக்க அபூர்வமானவையும், கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியானவையும், முதலில் அசம்பாவிதமாகத் தோற்றத் தக்கவையுமான பல கொலை களவுகள் மிக்க அதிசயமானவைகளாகவும் இதுகாறும் கேட்டிராத விதமான கதைகளாகவுமே யிருக்கும். விலை ரூபா 2—8—0

## மூன்றும் பதிப்பு! தினகரசுந்தரி விலை ரூபா 1.

இக் கதாநாயகி ஆண் வேடந்தரித்து, தன் கணவனாகிய செல்வச் சீமானுடைய சோரச் செயலைக் கண்டுபிடிப்பது மிக்க வியப்பாயிருக்கும். அதிலும் இவள் மிக்க துஷ்டரான கள்ளரிடம் சிக்கிக்கொண்டு அவர்களைச் சாமர்த்தியமாய் ஏமாற்றிவிட்டுத் தப்பித்துக்கொண்டு வந்து விடுவது மிக்க வியப்பிலும் வியப்பாயிருக்கும்.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

[illegible] டெக்ஸ்ட்புக் கமிட்டியாரால் அங்கீகரிக்கப்பெற்றவை

## நூதன தமிழ் நாவல்களும், கதைப் புத்தகங்களும்.

ஆரணி—குப்புசாமி முதலியார்

| இயற்றியவை. | ரூ. | அ. |
|---|---|---|
| ஞானசெல்வாம்பாள் 4 பாகம் | 8 | 0 |
| தைஜம்பாள் 2-பாகம் ... | 8 | 0 |
| லோகநாயகி ... | 1 | 0 |
| விளையாட்டுச்சாமான் ... | 1 | 6 |
| பவளத்தீவு 2 பாகங்கள் ... | 8 | 0 |
| தபால்கொள்ளைக்காரர்கள் | 0 | 14 |
| இந்திராபாய் ... | 2 | 8 |
| அமராவதி 2-பாகங்கள் ... | 4 | 0 |
| மத்தசன் அறையின் மர்மம்... | 1 | 8 |
| கற்கோட்டை ... | 2 | 0 |
| பூங்கோதை ... | 0 | 10 |
| வீரநாதன் ... | 0 | 12 |
| கனகபூஷணம் 2 பாகமும் | 8 | 8 |
| கமலசேகரன் ... | 1 | 12 |
| தினகரசுந்தரி ... | 1 | 0 |
| ரத்னபுரி ரகசியம் 2 பாகமும் | 4 | 0 |
| மதனபூஷணம் ... | 1 | 0 |
| சுவர்ணாம்பாள் ... | 0 | 12 |
| தேவசுந்தரி ... | 1 | 4 |
| குணசுந்தரன் ... | 0 | 12 |
| பத்மாவதி ... | 0 | 14 |
| ஆனந்தஸிங் ... | 2 | 0 |
| மின்சாரமாயவன் ... | 1 | 8 |
| கைவல்லிய நவநீத வசனம் | 1 | 8 |
| மெடீரியா மெடிகா ... | 3 | 0 |
| ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருடைய சரித்திரமும் உபதேசங்களும் | 1 | 12 |
| மலையாளபகவதி ... | 1 | 0 |
| அற்புத சவுந்தரம்மை ... | 1 | 0 |
| அகட விகட விலாச விநோதம் | 0 | 10 |
| அமாரன் கதை ... | 0 | 12 |
| பூலோக லக்ஷ்மிகதை ... | 0 | 10 |
| மகாதேவன் ... | 0 | 6 |
| ராமாயண ஓடம் ஏலப்பாட்டு | 0 | 8 |
| கனகரத்தினம் ... | 0 | 8 |
| கண்டிராஜா நாடகம் ... | 0 | 12 |
| நளினசுந்தரி ... | 0 | 10 |
| மதுசூதனன் ... | 0 | 10 |
| விநோத கதைத்திரட்டு ... | 0 | 5 |
| கலியாண சந்தடியில் தாலி கட்ட மறந்தகதை ... | 0 | 5 |
| * கம்பராமாயண சங்கிரக வசனம் ... | 2 | 0 |
| *குசேலோபாக்கியானவசனம் | 1 | 0 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| * நரிவிருத்தம் மூலம் உரையும் | 0 | 4 |
| * ஸ்ரீபாலன் ... | 0 | 10 |
| * உதயணன் ... | 0 | 8 |
| * தசக்கிரீவன் ... | 0 | 14 |
| * போஜ சரித்திரம் ... | 0 | 5 |
| * சதானந்தர் ... | 1 | 4 |
| * ஜீவகன் வசனம் ... | 1 | 0 |
| * கர்ணன் சரிதை ... | 0 | 12 |
| * பீஷ்மவிஜயம் ... | 0 | 10 |
| * வீரத்தன்மையுள்ள ஹிந்து மாது சிரோமணிகள் ... | 0 | 10 |
| * கீர்த்திஸிங்கன் ... | 0 | 8 |
| * அரிச்சந்திரன் சரிதை ... | 0 | 8 |
| * சகோதரவாஞ்சை ... | 0 | 7 |
| * நீலக்கொடி ... | 0 | 5 |
| * மணவாளன் ... | 0 | 8 |
| * பரசுராமன் ... | 0 | 8 |
| *சிசுபாலன் ... | 0 | 8 |
| *அங்கதன் ... | 0 | 4 |
| * தசாவதாரம் ... | 0 | 6 |
| * கிருஷ்ணன் தூது வசனம் | 0 | 8 |
| *சண்டோபாக்கியானம் ... | 0 | 6 |
| *கருணாகரரும் சத்தியசீலரும் | 0 | 8 |
| *சத்தியவசனி ... | 0 | 4 |
| *விமலன் ... | 0 | 4 |
| *கண்ணபிரான் ... | 0 | 4 |
| *செய்யுட்பாடத்திரட்டு ... | 0 | 4 |
| *நாலுமந்திரிகதை ... | 0 | 4 |
| * மங்களேசுவரன் ... | 0 | 8 |
| * தக்கன் ... | 0 | 6 |
| * சீமந்தனி ... | 0 | 8 |
| ஞானரத்தினம் ... | 0 | 4 |
| இந்திரலீலா ... | 0 | 8 |
| ஜெகதலஜெகஜ்ஜோதி ... | 0 | 8 |
| மெய்க்காதலி ... | 0 | 8 |
| மேனாமினுக்கி கதை ... | 0 | 8 |
| வீணாகானன்ஞானேந்திரி... | 0 | 8 |
| மனோன்மணி கதை ... | 0 | 8 |
| கோமளவல்லி கதை ... | 0 | 8 |
| விகடவல்லி கதை ... | 0 | 6 |
| கமலமதி ... | 0 | 8 |
| காமசேன ரசிகா ... | 0 | 8 |
| பூர்ணவல்லி ... | 0 | 6 |
| பகவத்கீதாசங்கிரகம் | 0 | 2 |
| ஸ்திரீபுருஷஜாதக திறவுகோல் | 0 | 8 |
| மருமக்கள் தாயம் ... | 0 | 2 |

ஆனந்தபோதினி ஆபிஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

"ஆனந்தபோதினி" 12-வது வருஷக் கொண்டாட்டத்திற்காக ஷை சந்தாதாரர்களுக்கு 31-10-1926-வரையில்

**இதன் விலை அணா 12.** தபாற்கூலி வேறு.

மற்றவர்களுக்கு விலை ரூபா 1. தபாற்கூலி வேறு.

இத்தேதிக்குப் பிறகு எல்லோருக்கும் பழய விலை ரூபா 2. தபாற்கூலி வேறு.

---

**இரண்டாம்பதிப்பு! இனியமதிப்பு!!**

அழகிற்சிறந்த 16 ஆப்டோன் படங்களுடன் கூடியது.

# ஆனந்த ஆங்கில பாஷா போதினி.

# ANANDA ENGLISH INSTRUCTOR

**700-பக்கங்களுக்குமேல்**

திக்கு காகிதத்தில் அச்சிடப்பட்டு சீமை காலிகோ பைண்டு செய்யப்பட்டது.

**ஆர்டருக்கு முந்துங்கள்! பின்பு கிடைக்கவில்லையே என்று வருந்தாதீர்கள்!!**

**ஆங்கிலத்தை எதனல் எளிதில் கற்றுக்கொள்ளலாம்?**

எங்களுடைய 'ஆனந்த ஆங்கில பாஷா போதினி' என்னும் புத்தகத்தின் உண்மை விளம்பரத்திற்குப் போட்டியாக வெளிவந்துள்ள டம்ப விளம்பரங்களையுடைய பல புத்தகங்களெல்லாவற்றையும் திரட்டிப் புரட்டி திருப்பித் திருப்பிப் படிப்பதால் ஒருவர்க்கு எவ்வளவு ஆங்கில பாஷா ஞானமுண்டாகுமோ அதற்குப் பதின்மடங் கதிகமான ஆங்கில ஞானத்தை, எமது, 'ஆனந்த ஆங்கில பாஷா போதினி'யை ஒருவர் ஒருமுறை படிப்பதனல் எளிதில் கற்றுக்கொள்ளலாம்.

## தமிழ் கற்றறிந்த சகோதரர்களே!

ஆ ங்கிலந்தெரிய விரும்புகிறீர்களா? ஆ
ன ந்தமடைய வேண்டுமா? அளவற்ற த ன
ந் தேட ஆவலுண்டா? அறிவு மிகு ந்
த அரசர் நேயம் பெறவேண்டுமா? அளவிலா த
ஆ தாயம் அடைய வேண்டுமா? ஆச்சரியமாக ஆ
ங் காங்கே கௌரவம் பெறவேண்டுமா? ஓ ங்
கி ய சுகம்பெற விருப்பமா? உத்தமராய் அ கி
ல த்தில் உலாவ வேண்டுமா? உயர்கு ல
பா லராக வேண்டுமா? ஆனந்த ஆங்கில பா
ஷா போதினியைப் படியுங்கள்; வேறு பா ஷா
போ தினிகளை நம்பாதீர்கள்; இப் போ
தி னியே எல்லா நன்மையும் தரும். மே தி
னி யில் தமிழர் எவர்க்கும் இ னி

மையாக.

### எளிதில் ஆங்கிலம் போதிக்கத்தக்கது எது?

**உயர்ந்த இங்கிலீஷ் போதனுமுறையில் முதன்மை பெற்றுத் தோன்றிய பெறுதற்கரிய பெரும்பயன் வாய்ந்த**

# ஆனந்த ஆங்கில பாஷா போதினி

## ஒன்றே.

### இரண்டாம் பதிப்பு! இரண்டாம் பதிப்பு!! இரண்டாம் பதிப்பு!!!

முற்பதிப்பைக்காட்டிலும் இப்பதிப்பில், பாடமுறைகள் அதிகமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன; பற்பல கதைகளும் பாரதக் கதைகளும், ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய சரித்திர சுருக்கமும் சேர்க்கப்பட்டு அவற்றிற்குப் பொருத்தமான மிக்க அழகிய 16 ஆப்டோன் படங்களும் பளபளப்பான கடிதத்தில் மனதைக் கவரும் விதமாக அச்சிட்டுச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.



எமது புத்தக விளம்பரங்களைப்போலவே வெளிவரும் போலி விளம்பரங்களுள்ள பல புத்தகங்களை நம்பி மோசம் போகாதீர்கள். இக்காலத்தில், இல்லாததை உள்ளதாகக் காட்டி விளம்பரங்களில் எழுதுவதே எங்கும் பலரிடத்திலும் வழக்கமாகிவிட்டது. ஆதலின், அத்தகைய போலி விளம்பரங்களிலுள்ள பகட்டுரைகளைப் படித்து மயங்கிவிடாதீர்கள்; ஆங்கிலத்தை உண்மையாகவே எளிதில் போதிக்கும் அரிய நூல் எதுவென்று ஆராய்ந்து பாருங்கள்; அவ்வாறு பார்த்தால் எமது புத்தகமே அதற்குத் தகுதியானதென்பது விளங்கும். இதற்குமுன் பல புத்தகங்கள் வெளிவந்திருப்பினும், சரியான பாடமுறைகளுடன் வெளிவந்திருக்கும் எமது போதினியே முதன்மை பெற்றதாகும். ஒரு விஷயத்தைப்பற்றியே பலர்பல நூல்களை வெளிப்படுத்துவது இயற்கை. அப்படி வெளிப்படும் நூல்களில் ஒன்றின்பின் ஒன்றாகப் பின்னர் வெளிவருவனவெல்லாம் ஒன்றிலும் மற்றொன்று விசேஷமாக, 'பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையினானே' என்ற முறைப்படி பழைய முறைகளைத் தள்ளிப் புதிய முறைகளைச் சேர்த்து உயர்ந்த அமைப்புக்களுடன் வெளிவருதல்கூடும். இருபது வருடங்கட்கு முன்னும் ஆங்கிலம்போதிக்கும் நூல்கள் பல வெளிவந்திருக்கின்றன. இப்போது வெளிவந்தவை அவற்றிலிருந்து சிலமாறுதல்கள் அடைந்திருக்கின்றன; அவற்றுளெல்லாம் எமது புத்தகம் திருத்தமும், தெளிவும் பொருந்தியது. அதனாலேயே இதன் முதற்பதிப்பு, வெளியான சில தினங்களுக்குள்ளாகவே செலவாகி இரண்டாம்பதிப்பு வெளிவந்திருக்கிறது. ஆதலின், முன் வந்தவை உயர்ந்தவையென்றும், பின் வந்தவை தாழ்ந்தவையென்றும் கருதாமல், இக்காலத்தில் எளிதாகவும் விரைவாகவும் ஆங்கிலத்தைக் கற்றுக்கொடுப்பது எதுவென்று பார்த்து, அத்தகைய முறையில் அமைந்து ஆங்கிலஞானப் பிரகாசத்தை எங்கும் எவ்விடத்தும் பரப்பிவரும் எமது "ஆனந்த ஆங்கில பாஷா போதினி"யை வாங்கிப் படியுங்கள்.

**இந்த லேடி டிரேட் மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.**




"ஆனந்த ஆங்கில பாஷா போதினி" கண்ணைக் கவரும் சீமை காலிகோ பைண்டும், உயர்ந்த மதிப்பும், சிறந்த அமைப்பும் பொருந்தியது.

"ஆனந்த ஆங்கில பாஷா போதினி" பல்லாயிரக்கணக்கான தமிழர்க்கு ஆங்கிலம் போதித்து புகழ்பெற்றது; தமிழ்நாடெங்கும் பிரசித்தியடைந்தது.

"ஆனந்த ஆங்கில பாஷா போதினி" இங்கிலீஷ் தெரியாத தமிழ் மக்களின் உள்ளத்தில் நுழைந்து ஆங்கிலஞான வொளிபரப்பி அழகுடன் விளங்கும்.

"ஆனந்த ஆங்கில பாஷா போதினி" மற்ற புத்தகங்களைப்போல் மயக்கத்தைக் கொடாமல் எவர்க்கும் இலகுவான முறையில் இங்கிலீஷ்ஞானத்தை உண்டாக்கும்.

"ஆனந்த ஆங்கில பாஷா போதினி" தமிழ் நாட்டினர்க்கு ஆங்கிலம் போதிப்பதற்கென்றே நூதன அமைப்புடன் இணையற்றெழுந்ததாகும். தமிழில் இதைப்போன்ற ஒழுங்கான போதனுமுறை அமைந்த நூல் வேறு இல்லை.

"ஆனந்த ஆங்கில பாஷா போதினி" பற்பல அறிஞரின் நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்று எப்போதும் நிலவுவது.

"ஆனந்த ஆங்கில பாஷா போதினி" எழுத்துப்பிழை, சொற்பிழை, இலக்கணப் பிழை முதலியவைகள் இல்லாதது; பயனுள்ள விஷயங்களை நிரம்பியது; பொருட் பொருத்தங்கள் நிறைந்தது; தெளிவுள்ளது; சகலருக்கும் பயன்தருவது; நூதனம் நூதனமாகிய பாடமுறைகளிலும், அழகிய அமைப்புக்களிலும் இதுவே எல்லாவற்றினும் சிறந்ததென்பதை, இதனை வாங்கிப் படிப்போர், ஒருவர் எடுத்துச் சொல்லாமலே உணர்ந்துகொள்ளலாம்.

## "ஆனந்த ஆங்கில பாஷா போதினி" வெளியானதற்குக் காரணமென்ன?

நெடுங்காலமாக நம் நாட்டில் ஆங்கில துரைத்தனம் நிலைபெற்றிருப்பதால் சகல விஷயங்களிலும் இங்கிலீஷ் பாஷையே ஏற்றமடைந்து நிற்கின்றது; எப்பேர்ப்பட்டவருக்கும் எந்நிலையிலும் எக்காரியத்திலும் எவ்விடத்திலும் அது மிக உபயோகமாகக்கூடியதா யிருக்கிறது; முடிவாகக் கூறுமிடத்துத் தற்கால இயற்கையை அனுசரித்துத் தோட்டிவேலை செய்பவனுக்குங்கூட அது அவசியம் தெரிந்துகொள்ளவேண்டிய பாஷையா யிருக்கிறது. அது தெரியாதவர்களுக்கு எவ்விடத்திலும் கௌரவமில்லை. எக்காரியத்திலும் பலவித இடையூறுகள் உண்டாகும்; நம் சுதேசிகளும்கூட ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளும்போது ஆங்கிலத்திற் பேச அதிக உற்சாகமுடையவர்களா யிருக்கிறார்கள். ஆனதால் ஆங்கிலந் தெரியாதவர்கள் நம் சுதேசிகளோடும் பேசமுடியாமல் நம்மவர்களாலேயே அவமதித்து ஒதுக்கித் தள்ளப் படுகிறார்கள். சுதேசிகளுக்குள்ளேயே இங்கிலீஷ் தெரியாதவர்கள் கதி இப்படியாகும்போது ஐரோப்பியர் முதலிய மேல்நாட்டாரோடு காரியத்தொடர்பு வைத்துக்கொள்வோர்க்கு இங்கிலீஷ் தெரியாமலிருந்தால் அவர்களுக்கு மிகுந்த சங்கட முண்டாகுமென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. இன்னும் ஆங்கிலமானது தற்காலத்தில் எல்லா நாட்டிலும் பரவிய ஒரு பொதுப் பாஷையாயிருப்பதால், தமிழ்தெரியாத மற்ற எந்த நாட்டினரோடும் பேசி விஷயங்கள் தெரிந்துகொள்வதற்கும் அனுகூலமா யிருக்கின்றது. இத்தகைய பெரும் பயன்களைத் தரும் இந்த ஆங்கில பாஷையைத் தெரிந்து கொண்டவர்க்கு எண்ணற்ற நன்மைகளுண்டாகின்றபடியால் எல்லோருமே இதனைத் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமாகின்றது. அங்ஙனம் தெரிந்துகொள்வதற்காகவே இந்த அரும்பெரும "ஆனந்த ஆங்கில பாஷா போதினி"யை இப்பொழுது நாம் வெளிப்படுத்தி யிருக்கின்றோம்.

இதனைச் சிரத்தையுடன் கற்றுக்கொள்ளத் தொடங்குவோர் பணச்செலவில்லாமலும், உபாத்தியாயர் உதவியில்லாமலும், வேறெவ்விதக் கஷ்டமுமில்லாமலும் மிக எளிதில் இங்கிலீஷ் பேசவும் படிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்ளலாம். சில ஆயிரக்கணக்கான பணச்செலவு செய்து 10-வருஷம் படிப்பதனால் எவ்வளவு ஆங்கிலத்தேர்ச்சி யுண்டாகுமோ அவ்வளவு தேர்ச்சியை ஒரு மாதம் அல்லது 40 நாளில் இப்புத்தகத்தின் உதவியைக்கொண்டு அடைந்து, ஆங்கிலத்தை அதிவிரைவில் படித்துக்கொள்ளலாம்; இப்புத்தகமொன்று வாங்கிக்கொண்டால் இங்கிலீஷ் கற்றுக்கொள்வதற்காக உபாத்தியாயருக்கு அதிகச் சம்பளங் கொடுத்து அவரிடம் புத்தகத்தைத் தூக்கிக்கொண்டுபோய் அலையவேண்டியதில்லை. ஒவ்வொருவரும் தாங்கள் இருக்குமிடத்திலேயே அதனைச் சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். மனிதர் தாமே சுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளத்தக்க மார்க்கங்களெல்லாம் இதில் விளக்கமாக அமைக்கப்பெற்றிருக்கின்றன. அவை வெகு சுலபமாக ஆங்கில ஞானத்தை உண்டாக்கிவிடும்.



முக்கியமாக ஒவ்வொரு இங்கிலீஷ் எழுத்தின் உச்சரிப்பையும் தமிழ் எழுத்தில் காட்டி இங்கிலீஷ் உச்சரிப்பின் சப்தம் சரியாய்த் தொனிக்கும்படி அத்தமிழ் எழுத்துக்களுக்கு அடையாளங்கள் இடப்பட்டிருக்கின்றன. இந்தக் கிரமத்தின்படியே, ஒவ்வொரு இங்கிலீஷ் பதமும் இங்கிலீஷ் எழுத்துக்களிலும், தமிழ் எழுத்துக்களிலும் அமைக்கப்பட்டு அதன் அர்த்தம் தமிழில் எழுதப்பட்டிருக்கிறது. அதாவது:—

B.P.F. இந்த மூன்றெழுத்துக்களுக்கும் தமிழில் ப-எழுத்து ஒன்றே இருப்பதால் அவை அவைகளுக்கு ஸப்தம் தெரியும்படி (B—·பி) (P—பி) (F—எப்· என B·பி சப்தத்திற்கு தமிழ் எழுத்து B-க்கு ·பி-க்கு முற்பக்கமும், F-க்கு எப்··-க்குப் பின்பக்கமும் ஓர் புள்ளி கொடுக்கப்பட்டிருக்கும். இம்மாதிரியாக (D.T.) இவை இரண்டிலும் (D-·டி) (T- டி) என D-·டி-க்கு முன்பக்கம் புள்ளியிருக்கும். (Come-கம்) (Gone-·கான்) என்னும் C எழுத்துப் பதத்திற்கும் G எழுத்துப் பதத்திற்கும் க-ஒன்றேயாகையால் G எழுத்துப் பதத்திற்கு முன் ஓர் புள்ளி கொடுத்திருக்கும்.

·பே ·டை ·தெட் ·கால் பா·ல்
Bay=குலை. Die=இற,சா. That=அது. Gall=பித்தம்,Fall=விழு

·கோவின்·ட் வென்ட் டு ·தி ·பெஜார் டு ·பை பி··க்ஸ்
Govind went to the bazaar to buy Figs=கோவிந்தன் அத்திப் பழம் வாங்கக் கடைக்குப் போனான்.

எனப் பதங்களும், வாக்கியத் தொடர்களும் அமைக்கப்பட்டிருக்கும். இங்கிலீஷ் எழுத்துக்களைமாத்திரம் சரியான சப்த உச்சரிப்போடு சிறிது நேரத்திற்குள் ஒருவரிடம் தெரிந்துகொள்ளலாம். அதன்மேல் இந்தத் தமிழ்ப் பாட முறையைப் படிக்கத் தொடங்கினால், தமிழிலேயே சரியான உச்சரிப்போடு இங்கிலீஷ் எழுத்துக்களையும், அவ்வெழுத்துக்களாலாகும் பதங்களையும், பதங்களாலாகும் தொடர்களையும், தொடர்களால் முடியும் பற்பல விஷயங்களையும் இலேசாகச் சில தினங்களில் கற்றுக்கொள்ளலாம். இங்கிலீஷ் எழுத்துக்களைச் சப்த தோஷமின்றி உச்சரிக்கும் விதங்களும், எழுத்துக் கூட்டும் முறைகளும், பதங்களைச் சேர்த்துப்படிக்கும் விதங்களும், இலக்கண விஷயங்களும் இப்புத்தகத்தில் மட்டுந்தான் சரியான முறையில் அமைந்திருக்கின்றன. இப்புத்தகத்தால் ஆங்கிலம் கற்றுக்கொண்டவர்கள் முறைப்படி பத்து வருஷங்கள் இங்கிலீஷ் படித்துத் தேர்ந்தவர்களைப்போலவே விளங்குவார்கள். இவ்வளவு அருமையான முறைகளுடன் இப்புத்தகம் அமைக்கப்பட்டிருப்பதோடு இதில் மனிதர் சம்பாஷணைக்கு முக்கியமாக இன்றியமையாதனவாகிய மனிதர்கள், மிருகங்கள், பறவைகள், ஊர்வன, நீர் வாழ்வன முதலிய பிராணி வர்க்கங்களைப்பற்றிய விஷயங்கள், மரங்கள், செடிகள், கொடிகள், புற்பூண்டுகள், மலை, கல் முதலிய தாவர வர்க்கங்களைப்பற்றிய சாமான்கள், மண், நீர், நெருப்பு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்கள், மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகள், அவற்றின் சம்பந்தமான ஐம்புலன்கள் முதலியவை சம்பந்தமான விஷயங்களும், நாள், கிழமை, மாதம், வருடம், கிரகங்கள். நக்ஷத்திரங்கள் முதலிய பற்பல விஷயங்களும், மனிதரின் செய்கை, பண்பு, ஆகாராதிகள் முதலியவைகளைப்பற்றிய செய்திகளும், கோர்ட் நடவடிக்கைகள், வியாபாரம், கைத்தொழில், பயிர்த்தொழில் முதலியவற்றைப்பற்றிய விஷயங்களும், உத்தியோக முறைகளையும், இராஜாங்க நீதிகளையும் பற்றிய செய்கைகளும், கடிதம், பத்திரம், விண்ணப்பம் உத்தரவு முதலியன எழுதும் விவரங்களும், சிறு வியாசங்களும், பழமொழிகளும், சிறு கதைகளும், பாரத கதைகளும், இன்னும் பற்பலவிதமான கதைகளும், விஸ்தாரமான ஆங்கில இலக்கணமும் இன்னும் அளவில்லாத அநேகம் செயல்களும் ஆங்கிலத்திலும் தமிழிலும் தெளிவாகக் காட்டப்பட்டிருக்கின்றன.

அவற்றையெல்லாம் இதன் கீழ்வரும் விஷய அட்டவணையால் தெரிந்துகொள்ளலாம். அவற்றினாலேயே இப்புத்தகம் சில தினங்களில் ஆங்கிலஞானம் உண்டுபண்ணுமென்பது நன்கு விளங்கும்.

இது, தமிழ்மாத்திரம் தெரிந்து ஆங்கிலம் தெரியாமலிருக்கும் சகலருக்கும் பயன்படக் கூடியதாயினும், முக்கியமாக மணியகாரர், கர்ணம், வில்லேஜ் முன்சீப் முதலிய கிராம வேலைக்காரருக்கும், சிலோன் தோட்டங்களிலிருக்கும் கங்காணிமார்கட்கும், மலேயா, பர்மா, தென்னாப்பிரிக்கா முதலிய இடங்களிலுள்ள மேஸ்திரிமார்களுக்கும், துரைமார்களிடம் வேலைசெய்யும் பட்லர், மேட்டி, கூக். ஆயாள், பாய், தோட்டமேஸ்திரி, கோச்மேன் முதலியவர்களுக்கும் மிக்க உதவிசெய்யக்கூடியது. இன்னும் இங்கிலீஷ் தெரியாத கிராமவாசிகள் பலரும் இதனைப் படித்தால் இங்கிலீஷ் பேசவும், எழுதவும் தெரிந்துகொள்வார்கள். முடிவாகக் கூறுமிடத்துத் தமிழர்கள் எல்லோருமே இதனை வாங்கிப்படிக்கத் தொடங்குவார்களாயின் இங்கிலீஷ் தெரியாதவர் எவருமே யிராரென்று திண்ணமாகச் சொல்லலாம்.

## இப்புத்தகத்திலடங்கியிருக்கும் விஷயங்கள்:—

கடவுள் வணக்கம், இங்கிலீஷ் எழுத்துக்களின் நெடுங்கணக்கு, டை அச்செழுத்து, கையெழுத்து, பெரிய எழுத்து, சின்ன எழுத்து, உயிரெழுத்து, மெய்யெழுத்து, எழுத்துக்களின் ஓசை, உச்சரிப்பு, வார்த்தைக்குறிகள்—கமா, ஸெமிகோலன் முதலியவை, ஓரெழுத்துமொழிகள், ஈரெழுத்து வார்த்தைகள், வாக்கியங்கள், மூன்றெழுத்துச் சொற்கள், நான்கெழுத்துச் சொற்கள், அவற்றின் வாக்கியங்கள், ஆறெழுத்துக்களுக்கு மேற்படாத சுலபமான சொற்கள், நீண்ட உயிரெழுத்துச் சப்தமொழிகள், அவற்றின் வாக்கியங்கள், காலம், சிறிய வாக்கியங்கள், சம்பாஷணைகள்—நமது சக்கரவர்த்தி, சந்தை, இரண்டு சிநேகிதர் சம்பாஷணை, இரண்டு சிநேகிதர் வீதியில் சந்தித்தல், தகப்பனும் குமாரனும், உபாத்தியாயரும் மாணாக்கரும், கிண்டிப் பந்தயம், கையெழுத்தின் மாதிரி, மனுவாளர் துரையைப் பார்ப்பது, பட்லர், பாய், கடியாரத்தைப்பற்றிய சம்பாஷணை, கோகிலாவுக்கும் ஜகதாவுக்கும் சம்பாஷணை, மேட்டி, கங்காணி, கூலிகளுக்காகக் கங்காணியின் அச்சாரம், மருந்து கொடுப்பது, அரிசி கொடுப்பது, குசினிக்காரன், விளக்கைக் கவனிக்கிற மேட்டி, தண்ணீர்க்காரன், ஆயாள் — பிரபஞ்சத்தின் சாதாரண விஷயங்களின் சொற்கள், பூமி விஷயமான சொற்கள், ஜலசம்பந்த சொற்கள், நெருப்பின் விஷய சொற்கள், வாயுவைச்சேர்ந்த சொற்கள், வாரத்தின் நாட்கள், வருஷத்தின் மாதங்கள், வருஷ ருதுக்கள், மனிதஜாதியைப் பற்றிய சொற்கள், மனிதரின் வெவ்வேறான தசையின் சொற்கள், மனிதர் அவயவங்களின் சொற்கள், மனித சரீரத்தின் உட்புற ஸ்தானங்கள், அவைகள் வெளிப்படுதல் சம்பந்தமான சொற்கள், சரீரத்தின் ஊனங்களைப்பற்றிய சொற்கள், குண விசேஷங்களைச் சார்ந்த சொற்கள், இந்திரியங்களுடன் சேர்ந்த மொழிகள், வியாதிகளின் சம்பந்தமான வார்த்தைகள், ஔஷதங்களைச் சேர்ந்த மொழிகள், ஔஷதமுறை, ஆத்மாவினுடையவும் அந்தக்கரணங்களினுடையவுமான சொற்கள், போஜனத்தையும் பானத்தையும்குறித்த வார்த்தைகள், ஆடை முதலியவற்றைப்பற்றிய சொற்கள், கட்டடத்தின் சாமான்களைச் சேர்ந்த சொற்கள், வீட்டையும் தட்டுமுட்டுச் சாமான்களையும் பற்றியவை, தொழில் ஆயுதங்கள் சம்பந்தமானவை, பயிர்த்தொழிலைச் சேர்ந்தவை, வர்த்தகத்தைச் சேர்ந்த வார்த்தைகள், நியாய ஸ்தலத்தைச்சார்ந்தவை, இராஜ்ஜியமும் நகரம் முதலியவற்றைச் சேர்ந்த சொற்கள், வித்தை சாஸ்திர சம்பந்தமானவை, மாதாகோவில் விஷயமானவை, வாகனங்களையும் அவற்றின் சாமான்களையும் சேர்ந்த வார்த்தைகள், காய்கறிகளைப்பற்றியவை, விருக்ஷம்



பழம் புஷ்பம் முதலியவைகளைச் சேர்ந்தவை, மிருகங்களைச் சேர்ந்த சொற்கள், ஊர்வனவற்றைப் பற்றியவை, மச்சங்களைச் சேர்ந்த மொழிகள், உலோகங்களைச் சேர்ந்த சொற்கள், இரத்தினங்கள் முதலியவற்றைச் சேர்ந்த சொற்கள், யுத்தத்தையும் சேனையையும் சேர்ந்த மொழிகள், சேனைகளின் ஆயுதங்களையும் சாமான்களையும் சேர்ந்த சொற்கள், கிரகங்களையும் ராசிகளையும் சேர்ந்த மொழிகள், ஆடல்களையும் உல்லாசங்களையும் குறித்தவை, ஜந்துக்களின் தொனிகளைக் குறித்தவை, முக்கியமான இந்துக்கள் பண்டிகைகள், கிறிஸ்தவர் பண்டிகைகள், பூரணாங்ககணித எண்கள், எண்ணின்பாகம், இந்திய நாணயமதிப்பு, இந்திய இங்கிலீஷ் நாணய மதிப்பு, பண்டங்கள் நிறுக்குமளவை, சதுர அளவை, சாராயம் பீர் முதலியவற்றின் அளவை, ஔஷதம் நிறுக்கும் அளவை, ஷில்லிங் பென்னில் இங்கிலீஷ் நாணயமதிப்பு, நீட்டல் அளவை, பென்ஸுக்குச் சரியான பவுண்டுகள், இங்கிலீஷ் தானிய அளவை, இலக்கணம், சம்பாஷணை சம்பந்தமான பாடங்கள்—பருந்தையும் தவளையையும் பற்றிய கதை, பூனையையும் பன்றியையும் பற்றிய கதை, தைரிய வாலிபனும் எருதும், ஒரு நல்ல வாலிபன், வேடனும் பெண்புலியின் குட்டியும்—பாங்கியும் வியாபாரமும், புஸ்தகங்களைப்பற்றிய சம்பாஷணை, பிள்ளைகள் கடமை, நானாவித சம்பாஷணைகள், தொடர்மொழிகள், பழமொழிகள், இங்கிலீஷ் மொழிகள், சுருக்கச் சொற்கள், கச்சேரிகளிலும், ரெவினியூ இலாகாவிலும் வழங்கும் சொற்கள், அனேக சிறு கதைகள், பாரதத்தில் 16 கதைகள், ஸ்ரீ கிருஷ்ணன் சரிதையின் சுருக்கம், பலவிதமான கடிதங்கள் எழுதும் முறை, விற்கிரய பத்திரம், உயில்பாகபத்திரம் எழுதும் முறைகள், சங்கிமுறை, முகூர்த்தப்பத்திரிகை எழுதும் விதம் முதலியவை.

## எமது புஸ்தகத்தைப்பற்றி பிறர் சொல்வதைக் கவனியுங்கள்.

நீர் 22-3-26-ல் அனுப்பிய புஸ்தகப் பார்சல் என் கைவசம் சேர்ந்து எனக்கு அளவற்ற திருப்திகொடுத்தது. நான் கொடுத்த சொற்ப விலைக்கு இவ்வளவு விலையுயர்ந்த நல்ல பயிண்டுசெய்த புஸ்தகம் கிடைக்குமென்று நான் எதிர்பார்க்கவில்லை. நான் அநேகமுறை ஒன்றுக்கும் உதவாத ஆங்கில புஸ்தகங்களுக்காக அதிகப்பணம் செலவுபண்ணி அவைகளை ஒருமுறை படித்து எறியும்படி நேரிட்டது. ஆனால் உங்கள் ஆனந்த ஆங்கில பாஷா போதினி ஒருவனுடைய ஆயுள் முழுமையும் அவனுக்கு கல்வி கற்பிக்க உதவும் என்பது திண்ணம்.

நீங்கள் இப்படிப்பட்ட அபூர்வமான எல்லோராலும் வாங்கி வாசிக்கக்கூடிய புஸ்தகத்தை வெளிப்படுத்தியதற்கு தமிழ் அறிந்த ஜனங்கள் உமக்குக் கடமைப்படவேண்டும்.

தெலுங்கு கன்னட பாஷைகளில் வெளியாகும் ஆனந்த ஆங்கில பாஷா போதினி புஸ்தகங்களுக்கு என் பெயரைப் பதிவு செய்துகொண்டு அவ்வ வெளியானதும் ஒவ்வொன்றிலும் ஒரு காபி அனுப்பக் கோருகிறேன்.

டாக்டர்-N. சிவப்பிரகாசம், L.M.P. 4

தாங்கள் முன் அனுப்பிய 'ஆனந்த ஆங்கில [illegible] போதினி'யை எனது நண்பர்கள் அனைவரும் எனக்கு வேண்டும் எ[illegible] வேண்டும் என்கிறார்கள். இதைத் தீர்க்க என்னால் முடியவில்லை. [illegible]ல் நீர் என் விலாசத்திற்கு முன் அனுப்பிய மாதிரியே இன்னும் 2 ஆ[illegible] ஆங்கில பாஷா போதினியை இந்த லெட்டர் கண்டஉடனே தந்திபோ[illegible]வேண்டும்.

சி. ப். ப். கந்தசாமி செட்டி, சந்தா நெ. 987, [illegible]

தங்கள் ஆனந்தபோதினிச் சந்தாதாரராகிய சித்திரைக்கண்ணு பிள்ளை யெழுதியது:—தாங்கள் வெளியிட்டிருக்கிற **ஆனந்த ஆங்கில பாஷா போதினி** என்னும் புஸ்தகம் இதற்குமுன் ஒன்று வருத்திப்பார்த்ததில் ஆங்கிலம் கற்றுக் கொள்ள மிகப் பிரயோஜனமா யிருப்பதால் என்னிஷ்டர்கள் 2 புஸ்தகம் வருத்திக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்வதால் இன்னும் 2 புஸ்தகம் அடியிற் கண்ட என் விலாசத்திற்கு வி-பி-யிலனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

**A. சித்திரைக்கண்ணு பிள்ளை.**

தற்சமயம் தாங்கள் அனுப்பிய **'ஆனந்த ஆங்கில பாஷா போதினி'**யைப் பார்வையிட்டேன். அதில் அனேக விஷயங்கள் போடப்பட்டு இருக்கின்றன. அதைப்பற்றி மிகவும் ஆனந்தத்துடன் பார்த்து மகிழ்ச்சியடைந்தேன். மேலும் இதர புஸ்தகங்களைப் பார்க்கிலும் இது மேலானது என்று நானும் என் நண்பர்களும் உறுதியாகக் கூற முயல்கிறோம். தங்களுக்கு மேன்மேலும் ஆர்டர் கொடுக்கத் தயாரா யிருக்கிறேன். கடவுள் கிருபை செய்வாராக.

சே. வெ. ஷண்முகதாஸ், சந்தா நெ. 1791, கொழும்பு.

**'ஆனந்த ஆங்கில பாஷா போதினி'** என் கைக்குக் கிடைத்தது; கவனமாய் முதலிலிருந்து கடைசிவரைக்கும் பார்த்ததில் இது வெகு அருமையாகவும் கோர்வையாகவும் மாணிக்க ஆரம்போல் இருப்பதை அறிந்து மிகவும் ஆனந்தமடைகிறேன். தாங்கள் அதிகநாள் முயன்று கவனமாய் இதில் விஷயங்களைச் சேர்த்து, அச்சிட்டு இதைச் சொற்ப விலைக்குக் கொடுத்துவருவது மெத்தவும் உபகாரமே. இதே புஸ்தகம் தெலுங்கிலிருந்தால் உடனே தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளும்,

**M. I. Joseph, Kodaikanal.**

தாங்கள் எனக்கு 19உ வி. பி. போஸ்டில் அனுப்பிய **'ஆனந்த ஆங்கில பாஷா போதினி'** கிடைக்கப்பெற்றேன். ஆங்கிலம் கற்றுக்கொள்ள அவா உள்ளவர்களுக்கு அது ஒரு நல்ல புஸ்தகம். உங்கள் புஸ்தகத்தை என் சினேகிதர் சிலருக்குக் காண்பித்தேன். அவர்களும் அதை நன்கு மதிக்கிறார்கள். தயவுசெய்து எனக்கு இன்னும் ஒரு காபி கூடியசீக்கிரம், வி. பி. போஸ்டில் அனுப்புவீராக.

**N. ரங்கசாமி நாயுடு**, கோயம்புத்தூர்—**21-4-26.**

அன்பார்ந்த ஐயா,

187479

உங்களது நெ. 1151, 8-5-26-தேதி உள்ள லெட்டரும், வி. பி-யும் கிடைத்து, கவனித்துக்கொண்டேன். என்னுடைய நேயர்கள் தங்களது **'ஆனந்த ஆங்கில பாஷா போதினி'**யைப் படித்து ஆங்கிலம் கற்றுக்கொள்ள வேண்டும் என்று மிகவும் அவாவுற்றிருக்கிறார்கள். ஆகையினால் நான் தங்களை அடியில்கண்ட விலாசத்திற்கு வி-பி-மூலமாய் 3 காபிகள் 'ஆனந்த ஆங்கில பாஷாபோதினி' அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். தங்களது [illegible]சீலை எதிர்பார்க்கிறேன். நீங்கள் எனக்கு முந்தி அனுப்பு[illegible]வப்பிவைக்கவேண்டும்.

[illegible] மு. ஓமயூருபாகம் பிள்ளை, இராஜசிங்கமங்கலம்.

---

187479

"ஆ[illegible]ந்தபோதினி" ஆபீஸ்,

[illegible]ல் பெட்டி நெ. 167, மதராஸ்.